விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 கார்த்திகை 01 வியாழக்கிழமை (17.11.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 333

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து


# அதிகாரப் பரவலாக்கல் குறித்து

# ஆராய அரசு-கூட்டமைப்பு இணக்கம்

## மாதத்தில் 4 தடவைகள் சந்திக்க ஏற்பாடு

(கொழும்பு)

மாகாண சபைகளுக்கு அதிகாரங்களை வழங்குவதில் சர்ச்சைக்குரிய விடயங்கள் தொடர்பில் அடுத்த மாதம் முதல் விரிவான முறையில் பேச்சுக்களை நடத்துவதற்கு அரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற பேச்சுக்களின் போது இணக்கம் காணப்பட்டுள்ளது. (20ஆம் பக்கம் பார்க்க)




கொழும்பு-காலி அதிவேக நெடுஞ்சாலையின் பின்னதுவ என்ற இடத்தின் வீதித்தோற்றத்தை படத்தில் காணலாம். ஒரே நேரத்தில் நான்கு வாகனங்கள் செல்லக்கூடிய 90 கிலோ மீற்றர் நீளமான இந்த வீதி நிர்மாண பணிக்கான (20ஆம் பக்கம் பார்க்க)

## மீசாலையில் வாகன் விபத்து குடும்பப்பெண் உயிரிழப்பு

### அவரது கணவர் உட்பட மூவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

தனியார் பேருந்தும் பஜிரோ வாகனமும் மோதி விபத்துக்குள்ளானதில் பெண்ணொருவர் சம்பவ இடத்தில் உயிரிழந்ததோடு மூவர் படுகாயமடைந்தநிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுக்காலை 6 மணியளவில் மீசாலை புத்தூர்ச்சந்திக்கருகாமையில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா நோக்கி சென்றுகொண்டிருந்த தனியார் பேருந்தும் (20ஆம் பக்கம் பார்க்க)

## இரண்டாவது சிறுவர் நீதிமன்றம் இன்று யாழ்ப்பாணத்தில் திறப்பு

### பிரதம நீதியரசர் திறந்து வைப்பார்

(கொழும்பு)

சிறுவர் தொடர்பான வழக்குகளை விசாரிப்பதற்காக யாழ்ப்பாணத்தில் நிர்மாணிக்கப்பட்ட இரண்டாவது சிறுவர் நீதிமன்றம் இன்று வியாழக்கிழமை திறக்கப்படவுள்ளதாக நீதியமைச்சு தெரிவித்தது

சுமார் 3.5 மில்லியன் ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்ட இந்த நீதிமன்ற கட்டிடத் தொகுதியை பிரதம நீதியரசர் ஷிரானி பண்டார நாயக்க மற்றும் நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகியோரினால் திறந்து வைக்கப்படவுள்ளதாக நீதியமைச்சின் செயலாளர் சுகத் கம்லத் தெரிவித்தார்.

இக் கட்டிட நிர்மாண திட்டத்திற்கான நிதி உதவியினை யுனிசெப் வழங்கியதாக அவர் குறிப்பிட்டார். (20ஆம் பக்கம் பார்க்க)


## கூட்டமைப்பு-மனோ கணேசன் நல்லுறவை சீர்குலைக்கச் சதி

### கண்டித்து அறிக்கை வெளியீடு

(கொழும்பு)

தமிழ்த் தேசிய கூட்டமைப்பிற்கும், ஜனநாயக மக்கள் முன்னணிக்கும் இடையில் நிலவும் நல்லுறவை சீர்குலைப்பதற்கு முன்னெடுக்கப்படும் சதி முயற்சிகள் தொடர்பில் உள்நாட்டிலும், புலத்திலும் வாழ்கின்ற தமிழர்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

கூட்டமைப்பு தொடர்பில் மனோ கணேசன் கருத்து தெரிவித்தாக சிங்கள நாளேடு ஒன்றிலும், இணையத் (20ஆம் பக்கம் பார்க்க)



## புனர்வாழ்வு நிலையத்தை மூட அரசு தீர்மானம்

(கொழும்பு)

இறுதிக்கட்ட யுத்தத்தில் சரணடைந்த தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் போராளிகளுக்கு என நிறுவப்பட்ட அனைத்து புனர்வாழ்வு நிலையங்களையும் எதிர்வரும் சில மாதங்களில் மூடிவிடுவதற்கு அரசு தீர்மானித்துள்ளதாக சிறைச்சாலைகள் மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் சந்திரசிறி கஜதீர தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் இரு பயிற்சி நிலையங்கள் மட்டுமே (20ஆம் பக்கம் பார்க்க)

## நல்லிணக்க ஆணைக்குழு கலைக்கப்பட்டது!

(கொழும்பு)

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பதவிக்காலம் முடிபடைந்ததையடுத்து அவ்வாணைக்குழு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கலைக்கப்பட்டுள் ளது.

இந்த ஆணைக்குழுவின் அறிக்கை நவம்பர் 20ஆம் திகதி ஜனாதிபதியிடம் கையளிக்கப்படும் என தற்போது இயங்காதுள்ள மேற்படி ஆணைக்குழுவின் பேச்சாளர் லக்ஷ்மன் விக்கிரமசிங்க கூறினார்.

ஆணைக்குழு தனது பணியை நிறைவு செய்துள்ள போதிலும் அறிக்கை தயாரிப்பதற்கான இறுதிக்கட்ட நடவடிக்கைகளில் சிறிய ஊழியர் குழுவொன்று ஈடுபட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தேசிய சுவடிக்கூடத்திற்கு இந்த அறிக்கையை கையளிப்பதற்காக இன்னும் இரு மாதங்களுக்கு இந்த ஊழியர் குழு செயற்படும்.

இவ்வறிக்கை ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்ட பின்னர் அடுத்தக்கட்ட நடவடிக்கை குறித்து ஜனாதிபதி தீர்மானிப்பார் எனவும் அவர் தெரிவித்தார். (எ-5)

## போலி முகவர் தொடர்பில் விழிப்புடன் இருங்கள்!

### யாழ்.பொலிஸார் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

போலி முகவர் தொடர்பில் பொதுமக்கள் விழிப்புடன் இருக்கவேண்டும்எனயாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சமன் சிகேரா தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் தெரிவிக்கையில், யாழில் போலி முகவர்களினால் பாதிக்கப்பட்டவர்கள் அதிக முறைப்பாடுகளை செய்து வருகின்றனர்.

ஏற்கெனவே ஹெரோயின் போன்ற போதைப்பொருட்களை விற்பனை செய்யும் முகவர்கள், பாவனைக்குட்படுத்துபவர்கள் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

அவற்றைக் (20ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# சிறுவர் துஷ்பிரயோகங்கள் வடக்கில் திடீர் அதிகரிப்பு

## சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை அறிவிப்பு

(கொழும்பு)

இவ்வருட முதல் 6 மாத காலப்பகுதியில் வட பகுதியில் 30 சிறுவர் துஷ்பிரயோகச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மன்னார் மாவட்டத்தில் 12 சிறுவர் துஷ்பிரயோகச் சம்பவங்களும், கிளிநொச்சி மாவட்டத்தில் 9 சம்பவங்களும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 9 சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்களில் 18 வயதிற்கு குறைந்த சிறுமிகளே அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

1995 முதல் 2010-ம்ஆண்டு காலப் பகுதி வரை 6 ஆயிரத்து 89 சிறுவர் துஷ்பிரயோகச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக இப்பிரதேசத்தில் இருந்து முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதேவேளை சிறுவர் சிறுமியர் பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு ஆளாவது அதிகரித்து வருவதாக பொலிஸ் சிறுவர் மற்றும் பெண்கள் பிரிவு உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

பெற்றோர் மற்றும் பாதுகாவலர்கள்; பிள்ளைகள் தொடர்பில் அசட்டையாக இருப்பதாலும் பெற்றோர் தமது பிள்ளைகளை உறவினர்களிடம் ஒப்படைத்துவிட்டு வெளிநாடு செல்கின்றமையாலும் சிறுவர்கள் பெரியவர்களினாலும் சம வயதுடையவர்களாலும் பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்படுவதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பாடசாலை செல்லும் 16 வயதிற்கு உட்பட்ட மாணவிகள் காதல் தொடர்பு வைத்திருப்பதன் காரணமாக பாலியல் துஷ்பிரயோகத்திற்கு ஆளாவதுடன் அவர்கள் சட்டரீதியற்ற முறையில் கணவன் மனைவியாக நடந்து கொள்வதாகவும் பொலிஸார் மேலும் தெரிவிக்கின்றனர் என அதில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (எ-5)

# வாக்காளர் இடாப்பு திருத்தம்

(யாழ்ப்பாணம்)

பொன்னாலை ஜே/170 கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட பொதுமக்களுக்கான வாக்காளர் இடாப்பு பதிவு நாளை வெள்ளிக்கிழமை தொடக்கம் ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெறும் என அப்பகுதி கிராம சேவையாளர் ஆர்.சிறிரஞ்சன் அறிவித்துள்ளார். எனவே அன்றைய தினம் சகலரும் சமூகமளித்து வாக்காளர் இடாப்பில் தமது விபரங்களை பதிவு செய்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# இரும்பு கொள்வனவு

நல்லூர் பிரதேச சபையால் பிளாஸ்ரிக், கண்ணாடி போத்தல்கள் மற்றும் இரும்புகள் கொள்வனவு செய்யப்படவுள்ளது.

மேற்படி கொள்வனவுச் செயற்பாடு நல்லூர் பிரதேச சபையின் கொக்குவில் உப அலுவலகத்தில் அலுவலக நாட்களில் காலை 10 மணி தொடக்கம் 4 மணி வரையும் கொள்வனவு செய்யப்படும் என நல்லூர் பிரதேச சபைத் தவிசாளர் ப.வசந்தகுமார் அறிவித்துள்ளார்.

இதன் பிரகாரம் பிளாஸ்ரிக் ஒரு கிலோ 10 ரூபாயுக்கும், கண்ணாடிப் போத்தல்கள் பிசுங்கான்கள் ஒரு கிலோ 20 ரூபாய்க்கும் இரும்பு, தகரம் என்பன ஒரு கிலோ 20 ரூபாயிற்கும் கொள்வனவு செய்யப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-9)

# வீதி விபத்தில் உயிரிழந்தோருக்கு ஞாயிறன்று ஒரு நிமிட மௌன அஞ்சலி

## சுகாதார அமைச்சு அறிவிப்பு

வீதி விபத்துக்களில் உயிரிழந்தவர்களுக்காக எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்துமாறு பொதுமக்களை சுகாதார அமைச்சு கோரியுள்ளது.

சுகாதார அமைச்சின் தொற்றாத நோய்கள் பிரிவின் கீழ் வீதி விபத்துக்களில் பாதிக்கப்பட்டோர் பிரிவு ஒன்றை ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதாக அமைச்சின் மேலதிக செயலாளர் டாக்டர் பாலித மஹிபால கூறினார்.

இலங்கையில் வருடாந்தம் 2 ஆயிரத்து 500 பேர் வீதி விபத்துக்களில் உயிரிழப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

விபத்துகளில் பாதிக்கப்படுபவர்களுக்கு உயிரிழப்புகள், காயங்களால் ஏற்படும் பாதிப்பு பாரியவை. காயமடையும் சுமார் 2 லட்சம் பேருக்கு சிகிச்சையளிப்பதற்கு பாரிய செலவு ஏற்படுகின்றது.

இப்பிரச்சினை உடன் தீர்க்கப்பட வேண்டும் எனவும் அவர் கூறினார். (எ-5)

# தனிச் சிங்களச் சட்டம் மாபெரும் தவறான விடயம்

## முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு



தனிச் சிங்கள சட்ட மூலம் மாபெரும் தவறாக கருதப்பட வேண்டுமென முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

நாட்டின் உத்தியோகபூர்வ மொழியாக சிங்களம் அறிவிக்கப்பட்டமை பாரிய முரண்பாடுகள் ஏற்பட வழிகோலியது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தொழில்வாய்ப்பு மற்றும் கல்வி போன்றவற்றில் சம உரிமை கோரிய தமிழ் மற்றும் ஏனைய இன சமூகங்களுக்கு இந்த சட்டம் பெரும் தடையாக அமைந்தது. இந்தச் சட்டத்தினால் தமிழர்கள் பாடசாலைகளுக்கு அனுமதி பெற்றுக் கொள்வதில் நெருக்கடிகளை எதிர்நோக் கியதாகக் குறிப்பிட்டுள்ளார்.

புதிய அரசியல் தலைமைத்துவமொன்று இலங்கையில் உருவாக வேண்டியதன் அவசியத்தை சந்திரிகா வலியுறுத்தியுள்ளார்.

2000 ஆண்டு செழுமையான வரலாற்றைக் கொண்ட இலங்கையில் 500 ஆண்டுகள் மேற்கதேய நாடுகள் ஆட்சி நடத்தியதாகவும் அந்தக் கால கட்டம் மிகவும் மோசமான காலகட்டமாகும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-5)

# சாவ. நீதிமன்றத்தில் வழக்கு ஒத்திவைப்பு

சாவகச்சேரி நீதிமன்றத்தில் இன்று நடைபெறவிருந்த வழக்குகள் வேறுதினத்துக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக சாவகச்சேரி நீதவான் நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார்.

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க உட்பட்ட உயர்மட்ட குழுவினர் இன்று விஜயம் செய்யவுள்ளதால் வழக்குகள் வேறு தினத்திற்கு ஒத்திவைக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார். (அ-3-29)

# துயர் பகிர்கின்றோம்



முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும்,

பனம்பொருள் அபிவிருத்திச் சபையின்

முன்னாள் தலைவரும், ஈழ மக்கள்

ஜனநாயகக் கட்சியின் மூத்த உறுப்பினருமான

அமரர் **சங்கரப்பிள்ளை சிவதாசன்** அவர்களுக்கு

**ஏமது கண்ணீர் அஞ்சலிகள்**

மூத்த அரசியல் உறுப்பினராய்
முதுமையிலும் தொண்டாற்றி
முன்னின்று உழைத்த தங்கள்
மேதாவிலாசத்தை என்னென்போம்
மண்ணை விட்டு மறைந்தாலும்
எம் மனதை விட்டு உங்கள்
நினைவை மாற்ற முடியவில்லை
என்றும் எங்கள் கண்ணீர்த் துளியைக்
காணிக்கையாக்குகின்றோம்.

தலைவர், பணிப்பாளர்கள், பணியாளர்கள்
வேலணை பல நோ:கூ.சங்கம், வேலணை.

(C-4987)

# கண்ணீர் அஞ்சலி



மண்டைதீவு திருவெண்காடு சித்திவிநாயகர் ஆலய அறங்காவலர் **அமரர் சி. இரட்ணசபாபதி** அவர்களின் அன்பு மனைவியும் **திரு. இ. யோகநாதன்** (பிரான்ஸ்) அவர்களின் அன்புத் தாயாருமாகிய

**திருமதி சிவயோகலட்சுமி இரட்ணசபாபதி**

அவர்கள் பிரான்ஸில் காலமாகிய செய்தி அறிந்து ஆழ்ந்த கவலையடைகின்றோம். அவரின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அவரின் ஆத்மா மண்டைதீவு திருவெண்காடு சித்த வி[illegible]யகரின் திருவடிகளில் சாந்தியடையப் பிரா[illegible]த்திக்கின்றோம்.

திருமுறைக் [illegible]கம்
மண்டைதீவு.

(அ-4989)

# மரண அறிவித்தல்

## டானியல் ஜெயக்குமார் தேவதாசன்

(ஓய்வு பெற்ற ஆரம்ப பிரிவு தலைமையாசிரியர், பரி.யோவான் கல்லூரி, யாழ்ப்பாணம்)

*டானியல் ஜெயக்குமார் தேவதாசன் (ஓய்வுபெற்ற ஆரம்பபிரிவு தலைமையாசிரியர், பரி.யோவான் கல்லூரி, யாழ்ப்பாணம்) கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். இவர் எலினோரின் அன்புக் கணவரும், கோர்ஷன் (வட்டவல பெருந்தோட்டக் கம்பனி), றொஹான் (நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கி), டிலான் (UK) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், அருணா, லோஜா ஆகியோரின் மாமனாரும் ஷெவோன், செஷான், அபிஷான், தானியா, எல்ஷா ஆகியோரின் பாட்டனாரும், நந்தகுமார் (ஓய்வுபெற்ற பொறியியலாளர்), றஞ்சன் (நோர்வே), ஷாந்தா (UK), கிறிஸ்டி(அகலவத்தை பெருந் தோட்டக் கம்பனி), கிறிஸ் (UK), ஜொய்ஸ் செல்வக்குமார் (நோர்வே) ஆகியோரின் சகோதரனுமாவார். அன்னாரின் பூதவுடல் இல.66, கண்டி வீதியிலுள்ளஅவரது இல்லத்திலிருந்து 18-ம் திகதி மு.ப 9 மணிக்கு நடைபெறவுள்ள நல்லடக்க ஆராதனைக்காக இல.111, கண்டி வீதியிலுள்ள இலங்கை பெந்தெக்கொஸ்தே சபை மண்டபத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.*

தகவல் :- குடும்பத்தினர்

(6806)

# கொட்டைக்காடு இந்து மயாணம் சம்பந்தமான அறிவித்தல்

## கோண்டாவில்

மேற்படி கோண்டாவில் கிழக்கில் அமைந்துள்ள கொட்டைக்காடு இந்து மயானம் மற்றும் வைரவர் கோயில் எமது சபையின் பராமரிப்பின் கீழ் உள்ளது. இதனை அபிவிருத்தி செய்வதற்கு ஏதுவாக இவ் ஆதனங்களுடன் தொடர்பான சான்றிதழ்கள், மற்றும் ஆவணங்கள் வைத்துள்ளவர்கள் 14 தினங்களுக்குள் எமது சபையுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

ப. வசந்தகுமார்,
தவிசாளர்,
நல்லூர் பிரதேச சபை.

(C-4986)

# இன்று ஒரு தகவல்

## வாழத் தெரியாதவர்கள்!

ஓர் ஊரிலே ஒருவர் இருந்தார்.

அவர் நிறையப் பணம் சேர்த்தார். அவனுக்குச் சம்பாதிக்கத் தெரியுமே தவிர செலவு செய்யத் தெரியாது. மகா கஞ்சன்.

காசை கையிலே எடுக்கவேமாட்டான். எடுத்தாலும் செலவு செய்ய வேண்டியிருக்குமே! வயதான காலத்தில் எனது வாழ்க்கையை எவ்வாறு கொண்டு செலுத்துவேன் என அவருடைய மனைவி ஒருநாள் அவரைப் பார்த்து கேட்டார்.

"இவ்வளவு நாளாக நீங்கள் என்னை எங்கேயுமே கூட்டிச் செல்லவில்லை. இப்போதாவது கூட்டுச் செல்லலாமே" என்றார்.

"எங்கே அழைத்துக் கொண்டு போகவேண்டும்" என்று கேட்டார்.

"காசிக்குப் போகவேண்டும். கங்கையிலே குளிக்க வேண்டும்!" என்றார்.

இவர் பார்த்தார் "இதற்கு ஏன் அவ்வளவு தூரம் செலவு செய்து போகவேண்டும். ஊரிலேயே குளிக்கலாமே. இதுவும் புண்ணிய நதிதான்! இங்கே குளிர்த்தால் அங்கே குளித்த பலன் கிடைத்து விடும்" என்றார்.

சரியொன்று இரண்டு பேரும் ஆற்றங்கரையை நோக்கி புறப்பட்டார்கள்.

அன்றைய தினம் ஏதோ விசேஷம். அதிகமான பேர் குளித்துக் கொண்டிருந்தார்கள். கரையிலே சில புரோகிதர்கள் நின்று கொண்டிருந்தார்கள். குளிப்பதற்கு முன்பு அவர் முன் உட்கார்ந்தால், ஏதோ மந்திரம் சொல்லுவார்கள். சிறிது பணம் செலவு செய்ய வேண்டி வரும்.

அதனாலே இவர் சற்று ஆற்றங்கரை ஓரமாக நடந்து சென்று ஊரைவிட்டு தள்ளியிருக்கும் ஆற்றருகே வந்தார். அக்கரையிலே யாருமேயில்லை.

"அப்பாடா" என்று சந்தோஷசப்பட்டார். குளிக்க ஆரம்பித்தார்.

இந்த நேரம் கடவுள் பார்த்தார்; இந்தக் கஞ்சனுக்கு ஏதாவது புத்தி புகட்டவேண்டும். உடனே ஒரு புரோகிதர் மாதிரி உருவெடுத்து அவர் முன்னால் வந்து நின்றார்.

அவர் அதிர்ச்சியடைந்தார். இங்கேயும் இவ்வடிவத்தில் ஒருவர் வந்து விட்டாரே. என்ன செய்வது என்று பதட்டமடைந்தான்.

"இதோ பார்... இன்றைக்கு விசேடமான நாள்... நீராடுவதற்கு முன்னால் சுயகல்பம் செய்வது நல்லது!" என்றார்.

"என்னிடம் பணம் எதுவுமே இல்லையே...!" என்றார்,

"பரவாயில்லை... பின்னர் கொடுக்கலாம். இப்போது எவ்வளவு என்று மட்டும் சொன்னால் போதும்" என்று சொன்னார்.

இவர் யோசனை செய்தார். பின்னர் "ஒரு பத்துரூபா தருகிறேன்!" என்றார்.

சரி என்று சம்மதம் தெரிவித்துவிட்டு, எல்லா கிரியைகளையும் செய்யத் தொடங்கினார். அதன்பின் இருவரும் ஆற்றிலே குளித்தார்கள்.

சிறிது நாட்கள் செல்ல அவர் வீட்டிற்கு கடனை வசூழ் செய்வதற்காக வந்தார்.

வந்தவர் வாசலிலே நின்றபடி, அவர் மனைவியிடம் விடயத்தை எடுத்தியம்பினார்.

அந்த அம்மா ஓடிப்போய் உள்ளே இருந்த தன் கணவரிடம் விபரமாகச் சொன்னார்.

அவர் சிறிது யோசனை செய்தார். இப்போது வெளியிலே சென்றால், அவருக்குப் பத்துருபா கொடுக்க வேண்டிவரும். அதனால் "எனக்கு காய்ச்சல்" என்று அவரிடம் சொல்லு. இன்னொரு சந்தர்ப்பத்திலே என்னை வந்து சந்திக்கச் சொல்லு என்றார்.

அந்த அம்மாவும் அப்படியே போய் சொன்னார்.

"அப்படியென்றால்... அவரை உடனே போய் பார்க்க வேண்டும்" என்று ஆரம்பித்தார்.

அம்மாவும் மறுபடியும் உள்ளே ஓடிப்போய் விடயத்தை சொன்னார்.

"இதோ பார்...ஜன்னி கண்டு நான் இறந்து போனதாகச் சொல்லு!" என்றார்.

புரோகிதர் பார்த்தார்... "அப்படியென்றால் ஒரு வழியாக இருந்து அவருடைய இறுதிச் சடங்குகளையும் நானே முடித்துவிட்டு போகிறேன்!" என்றார்.

உள்ளே இருந்தவர் யோசித்தார். "இவர் என்னை விட்டார் போலுள்ளது. அதனாலே ஒரு சவப்பெட்டியிலே என்னை வைத்து தூக்கிக் கொண்டு மயானத்துக்குக் கொண்டு செல்லுங்கள். அதன்பின் பார்க்கலாம்!" என்று சொன்னார்.

புரோகிதரும் விடுகிற மாதிரியில்லை. கூடவே நடந்து போனார்.

அங்கே இறக்கி... சடங்குகளை முடித்துவிட்டு... தீ மூட்டும் நேரத்தில்... பெட்டிக்குள்ளே இருந்த அவர் அலறியபடி எழுந்து வெளியே ஓடி வந்தார்.

புரோகிதர் உருவத்திலே இருந்த கடவுள் சிரித்தார். தன் சுய உருவத்தைக் காட்டினார்.

அதன்பின்பு அவரை அழைத்து "இதோ பார்... ஏன் இப்படி துன்பப்படுகிறாய். ஏதாவது வரம் கேள்! தருகிறேன்!" என்றார்.

"பகவானே! ஒரேயொரு வரம் தான் உங்களிடம் கேட்க வேண்டும்!"

"என்ன வேண்டும்!" என்றார்.

"அந்தப் பத்துரூபா தட்சணையை கள்ளுபடி செய்தால் அதுபோதும்" என்றார்.

கடவுளும் சரியென்று சொல்லி விட்டு தன் உருவிலே மறைந்து கொண்டார்.

செல்வந்தர்கள் பல பேர் இப்படித்தான் இருக்கிறார்கள். தாங்களும் அனுபவிக்க மாட்டார்கள். அடுத்தவர்களுக்கும் தானம் செய்யமாட்டார்கள். இது மாதிரியான கஞ்சர்களுக்கு இவ்வுலகமும் இல்லை. அவ்வுலகமும் இல்லை என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# மூன்று மாதங்களில் 14 இந்து ஆலயங்களில் திருட்டு சம்பவம்

## சர்வமத பேரவையின் அறிக்கையில் தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் கடந்த மூன்று மாதங்களில் 14 இந்து ஆலயங்களில் திருட்டுச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளதாக யாழ்.மாவட்ட சர்வமதப் பேரவையினால் வெளியிடப் பட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டிருந்தவை வருமாறு, யாழ்.மாவட்ட சர்வமதப் பேரவையிடம் யாழ்.மாவட்ட குருக்கள் ஒன்றியத்தினால் கடந்த மூன்று மாதங்களில் 14 இந்து ஆலயங்களில் பல இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் திருட்டுப்போயுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் சில ஆலயங்கள் உயர் பாதுகாப்பு வலயங்களுக்குள் இருந்ததனால் திருட்டுப்போன பொருட்களின் விபரங்கள் மற்றும் காலப்பகுதியை சரிவர குறிப்பிடமுடியவில்லை.

இருப்பினும் மக்களின் பாவனைக்கு கொடுக்கப்பட்ட பின்பும் இந்த ஆலயங்களில் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

குறிப்பாக வயாவிளான் தெற்கு ஞான வைரவர் ஆலயத்தில் 2 கோடியே 5 இலட்சத்து 2 ஆயிர த்து 250 ரூபா பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டுள்ளன.

இதுதவிர மாதகல் பானாவெட்டி ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் ஆலயத்தில் 5 இலட்சத்து 30 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டுள்ளன.

மேலும் நல்லூர் நாயன்மார்க்கட்டு அரசடிப் பிள்ளையார் ஆலயம், தெல்லிப்பழை கிழக்கு கலளாலத்தை ஞான வைரவர் கோவில், கொழும்புத்துறை ஸ்ரீ அம்பலவாண விநாயகர் ஆலயம், நல்லூர் அரசடி அருள் மிகு செல்லப்பிள்ளையார் ஆலயம், அரியாலை நீர் நொச்சித் தாழ்வு ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயம், அரியாலைகொட்டுக்கிணற்று மாணிக்கப்பிள்ளையார் கோவில், மீசாலை வடக்கு கான்றைச்சாட்டி அலாக்கிரக பூதவரத விநாயகர் தேவஸ்தானம், புத்தூர் கிழக்கு வாதரவத்தை கேதுவுப் பிள்ளையார் கோவில், பருத்தித்துறை ஸ்ரீ சிவகுருநாத சுவாமி ஆலயம், இணுவில் காரைக்கால் விசாலாட்சி அம்பாள் சமேத விஸ்வநாத சிவன் தேவஸ்தானம், தெல்லிப்பழை மாவிட்டபுரம் ஸ்ரீ இராஜ இராஜேஸ்வரி அம்பாள் தேவஸ்தானம், தெல்லிப்பழை மாவிட்டபுரம் பட்டிக்கடலை ஞான வைரவர் கோயில் போன்றவற்றில் திருட்டுச் சம்பவங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த திருட்டுப் போன ஆலயங்களில் விக்கிரகங்கள், தெய்வங்களைவைத்து சுமந்து செல்லும் வாகனங்கள், தங்கம், வெள்ளி, பித்தளைப் பொருட்கள் மற்றும் ஆபரணங்கள், பணம் போன்றவை திருடப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்படிருந்தது.

இதேவேளை, இந்து ஆலயங்களில்மேற்கொள்ளப்படும் திருட்டுச் சம்பவங்களை தடுத்து நிறுத்துமாறு வடமாகாண ஆளுநர் மேஜர்ஜெனரல்ஜி.ஏ.சந்திரசிறியிடமும் யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரிடமும் இந்தப் பேரவை மகஜர்களை கையளித்துள்ளது.

அத்தோடு இந்து ஆலயங்களில் மேற்கொள்ளப்படும் திருட்டுச் சம்பவங்கள் தொடர்பாக முறைப்பாடுகள் பொலிஸ் நிலையங்களில் கொடுக்கப்படுகின்ற போதிலும் அவை தொடர்பாக பொலிஸார் உடனடி நடவடிக்கை எடுப்பது இல்லை எனவும் பேரவை குற்றம் காட்டியுள்ளது.

மேலும் ஆலயங்களில் மேற்கொள்ளப்படும் திருட்டுச் சம்பவங்களினால் மக்கள் மத்தியில் தெய்வ நம்பிக்கை குறைவடைந்து வருவதாகவும் பேரவை குறிப்பிட்டுள்ளது.

(அ-6)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 110 | 70 | 120 |
| உருளைக்கிழங்கு | 75 | 90 | 75 |
| பச்சைமிளகாய் | 350 | 350 | 180 |
| தக்காளி | 140 | 140 | 80 |
| மரவள்ளிக் கிழங்கு | 25 | 40 | 30 |
| கோவா | -- | 60 | 40 |
| கரட் | 120 | 120 | 90 |
| பூசணி | 60 | 50 | 40 |
| புடோல் | 40 | 100 | 40 |
| வாழைக்காய் | 35 | 30 | 30 |
| சின்ன வெங்காயம் | 80 | 90 | 80 |
| பெரிய வெங்காயம் | 75 | 100 | 75 |
| பாகற்காய் | 170 | 180 | 200 |
| வெண்டிக்காய் | 40 | 60 | 30 |
| கருணைக் கிழங்கு | -- | 90 | 70 |
| பயற்றங்காய் | 60 | 50 | 100 |
| லீக்ஸ் | 50 | 40 | 30 |
| பீற்றூட் | 15 | 30 | 20 |
| கறிமிளகாய் | 100 | 160 | 90 |
| முருங்கைக்காய் | 50 | 90 | 50 |
| போஞ்சி | 160 | 140 | -- |
| கத்தரிதம்புள்ள | 40-50 | 60 | 80 |
| கீரை - 1 பிடி | 15 | 40 | 15 |
| தேசிக்காய் | 230 | 150 | 230 |
| தேங்காய் (ஒன்று) | 20-35 | 30 | 30 |

# இராசி பலன்

17.11.2011
(கார்த்திகை 01, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.59 மணிக்கு
சஷ்டி காலை 6.10 மணிவரை
சப்தமி பின்னிரவு 5.08 மணிவரை
பூசம் பிற்பகல் 2.29 மணிவரை
இராகுகாலம் 1.38-3.08 மணிவரை
சுபநேரம் 7.38-9.08 மணிவரை

**மேடம்** பெற்றோரின் ஆதரவால் பெருமை சேரும் நாள், உற்றார் உறவினர்களின் வருகையுண்டு, விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், வெளியூர்த்தொடர்புகள் விரிவடையும்.

**இடபம்** நினைத்ததை முடித்து நிம்மதி காணும் நாள், தன்னம்பிக்கையோடு பணியாற்றி தடைகளை அகற்றுவீர்கள், சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், கௌரவமான நாள்.

**மிதுனம்** உன்னதமான வாழ்வமைய அடித்தளம் அமைக்கும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், வீட்டுத் தேவைகளை நிறைவு செய்வதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கடகம்** எப்படி நடக்குமோ என நினைத்த காரியமொன்று நல்லபடியாக நடைபெறலாம், பயணத்தால் பலன் கிடைக்கும், உடல் நலம் சீராகி உற்சாகமடைவீர்கள், பெரிய மனிதரின் சந்திப்புண்டு.

**சிங்கம்** சந்தித்த நண்பர்களால் சந்தோசம் காண வேண்டிய நாள், பொறுப்புக்கள் அதிகரிப்பதால் மனச்சஞ்சலங்கள் அதிகரிக்கும், மாலை நேரப் பயணம் மகிழ்ச்சி தரும் விதத்தில் அமையலாம், சற்று அலைச்சல்கள் அதிகரிக்கும்.

**கன்னி** விருந்தினரை வரவேற்று வியப்படையும் நாள், வருங்கால நலன் கருதி புதிய திட்டமொன்றைத் தீட்டுவீர்கள், பயண வாய்ப்புக்கள் கைகூடுவதற்கான அறிகுறி தோன்றும், தொழிலில் வருமானம் அதிகரிக்கும்.

**துலாம்** தேடிச் சென்றவர்கள் நாடி வந்து உதவும் நாள், எடுத்த கருமங்கள் எளிதில் நிறைவேறலாம்,கொடுக்கல்-வாங்கல்களில் கணிசமான தொகை கைக்குக் கிடைக்கும், பாராட்டும் புகழும் கூடும்.

**விருச்சிகம்** தடைப்பட்ட காரியங்கள் இன்று துரிதமாக நடைபெறும், மதிப்பும் மரியாதையும் உயரும், தந்தை வழி உறவினர்களால் நன்மையுண்டு, புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள்.

**தனுசு** திடீர் செலவுகளை சமாளிக்க பிறரிடம் கைமாற்று வாங்கும் சூழ்நிலை அமையலாம், கௌரவக் குறைவான நாள், பிரயாணங்களில் கவனம் தேவை, மனச் சஞ்சலங்கள் அதிகரிக்கும்.

**மகரம்** எடுத்த காரியங்கள் கைகூடும், விட்டுப் போன உறவுகள் மீண்டும் வந்து சேரலாம், வாழ்க்கைத் துணை வழியே வரவுகள் வந்து சேரலாம், குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும், போசன சுகமுண்டு.

**கும்பம்** உறவு- பகை பாராமல் ஒற்றுமையாக இருக்கும் நாள், உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், தொழில் முன்னேற்றமுண்டு,எடுத்த காரியத்தை எளிதில் நிறைவேற்றுவீர்கள்.

**மீனம்** வியாபார விருத்தியுண்டு, சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான அறிகுறி தோன்றும்,பிள்ளைகளின் தேவைகளை நிறைவு செய்வதில் ஆர்வம் காட்டுவீர்கள், சொத்துக்களால் நன்மையுண்டு.

வளவன்

## கலைஞர்களுக்கான அறிவித்தல்

அகில இலங்கை கலை இலக்கிய சங்கம் இலங்கைக் கலைஞர்களின் விபரத் திரட்டினை ஆவணப்படுத்தி வெளியிட வுள்ளது.

கணனி மயப்படுத்தப்படவுள்ள விபரத் திரட்டினூடாக உலகெங்கும் வாழ்பவர்கள் இலங்கை கலைஞர்களின் சிறந்த பணிகளை அறிந்து கொள்ளவும் அவர்களோடு நேரடியாக தொடர்பினை ஏற்படுத்திக் கொள்ளவும் முடியும்.

ஆகவே இலங்கையில் வாழும் கலைஞர்களும் புலம் பெயர்ந்து வாழும் இலங்கை கலைஞர்களும் தங்கள் சுய விபரத் தினை தயாரித்து அகில இலங்கை கலை இலக்கிய சங்கத் தலைவர் பொன். சுகந்தன், நெல்லியடி, கரவெட்டி எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு சங்க செயலாளர் எஸ். கணபதிப்பிள்ளை அறிவித்துள்ளார். (அ-35)

### மின்சார திருத்த வேலைகளின் போது ஏற்படும்

# இறப்புக்களை தடுக்க 15 புவி தொடுப்புக்கள் நிறுவப்படும்

### மின்பொறியியலாளர் கே. அமலேந்திரன்

(யாழ்ப்பாணம்)

மின்சார சபை ஊழியர்கள் மின்சார திருத்த வேலைகளின் போது மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளனர். இவ்விறப்புக்கான காரணத்தை ஊகம் செய்யலாமே தவிர இறப்புக்கான காரணத்தை உறுதியாக கூறமுடியாது என பரிமாற்ற மற்றும் பரிவர்த்தனை நிலைய மின் பொறியியலாளர் கே.அமலேந்திரன் தெரிவித்தார்.

யாழ்.மின்சாரசபையின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் வடக்கு மாகாண பிராந்திய முகாமையாளர் டி.கே.பி.வீ. குணதிலக்க தலைமையில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பிரதான மின் கம்பிகளினூடாக செல்லும் மின்சாரம் அதிசக்தி வாய்ந்தது. இது ஒரு நொடியில் ஒருவரைத்தாக்கினால்கூட மரணம் சம்பவிக்கலாம். ஆகவே இவ்வாறான இறப்புக்களுக்கு நாங்கள் மட்டும் பொறுப்பேற்க முடியாது ஏனைய மின் வழங்குநர்களும் தான் பொறுப்பேற்க வேண்டும்.

இனி இவ்வாறான இறப்புக்களைத்தடுப்பதற்கு மேலதிகமாக 15 புவித்தொடுப்பு இயந்திரங்களை நிறுவவுள்ளதனால் காலையில் பொருத்த வேலைகளின் போதும் மாலையில் அவற்றை கழற்றும் போதும் மின்வழங்கல் தாமதமடையலாம். எனினும் எமக்கு ஊழியர்களின் பாதுகாப்புத்தான் முக்கியம்.

மேலும் இறந்தவர்களின் பிள்ளைகளை எமது சபையில் தொழிலாளியாக இணைக்கவுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

## கல்வி உபகரணங்கள் வழங்கல்

(சாவகச்சேரி)

ஜனாதிபதியின் 66 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு 66 பாடசாலைகளுக்கு கல்வி உபகரணங்களை அன்பளிப்புச் செய்யும் நிகழ்வு இன்று வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு அலரி மாளிகையில் நடைபெற்றது.

இதில் தென்மராட்சி வலயத்தில் மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம் அன்பளிப்பு பெறுவதற்கு தெரிவு செய்யப்பட்டிருந்தது.

இத்திட்டத்தின் கீழ் கணனிகளும் உதிரிப்பாகங்களும் கல்விசார் மென்பொருட்களும் இலத்திரனியல் பியானோ இசைப்பெட்டிநூலகங்களுக்கான பெறுமதியானநூல்களின் தொகுதி என்பனவும் வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-3-29)

## மின்தடைபற்றிய அறிவித்தல்

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மின் விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்ய வேண்டியிருப்பதால் இன்று வியாழக்கிழமை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப் பிரதேசம் ஆகிய இடங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்குமென யாழ்.பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (அ)

## கிரிக்கெட் போட்டி

கரவெட்டி மகேசன் விளையாட்டு கழகத்தின் புருசோத்தமன் வெற்றிக்கிண்ண அணிக்கு 5 பேர் 6 ஓவர் கொண்ட கிரிக்கெட் போட்டி இன்று வியாழக்கிழமை பி.ப 2 மணிக்கு கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரி மைதானத்தில் கழகத்தலைவர் எஸ்.தயாபரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஆர்.கேதீஸ்வரன் மற்றும் சிறப்பு விருந்தினர்களாக கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரி அதிபர் வை.சிவசிதம்பரம், கரவெட்டி பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் எல்.அனுராகாந்தன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இப்போட்டியில் குரும்பசிட்டி உதய சூரியன் அணியை எதிர்த்து சாவகச்சேரி சிவன் அணி மோதவுள்ளது. (அ-3-24)

# கட்டாக்காலி கால்நடைகளை கட்டுப்படுத்த கோரிக்கை

(காரைநகர்)

காரைநகரில் கட்டாக்காலி கால்நடைகளின் அட்டகாசம் அதிகரித்து வருகின்றது. அதனை கட்டுப்படுத்த எவரும் முன் வராமையினால் நெற்பயிர்கள் அழிக்கப்பட்டு வருவதாக விவசாயிகள் பெரும் கவலை தெரிவிக்கின்றனர்.

இக்கட்டாக்காலி கால்நடைகளை கட்டுப்படுத்துவது தொடர்பாக காரைநகர் பிரதேச சபை கடந்த மாதம் விளம்பரம் ஒன்றை ஒட்டியது.

ஆயினும் இதுவரை காத்திரமான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

காரைநகரில் ஐந்து விவசாய சம்மேளனங்கள் பிரிவில் சுமார் ஆயிரத்து 200 ஏக்கர் நிலத்தில் விவசாயம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதற்கான உரமானியங்களை கமநல சேவை நிலையம் வழங்கியுள்ளது.

ஆயினும் இக்கட்டாக்காலி கால்நடைகளை கட்டுப்படுத்த பிரதேச அதிகாரிகளோ மற்றும் கமநல சேவை நிலையமோ தகுந்த நடவடிக்கை எடுக்கவில்லை.

எனவே கட்டாக்காலி கால்நடைகளை கட்டுப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுக்கின்றனர். (அ-246)




## ஒழுங்கிணைப்புக் குழுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கிழக்கு கோப்பாய் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் ஒருங்கிணைப்பு குழுத்தலைவரும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சில்வேஸ்திரி அலென்ரின் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்ட இணைத்தலைவரும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் அபிவிருத்தி அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தா கலந்து கொண்டு எதிர்கால அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பாக ஆராயவுள்ளார்.

எனவே தொடர்புடைய சகல அரச, அரச சார்பற்ற நிறுவனங்களையும் கலந்து கொள்ளும்படி வலிகாமம் கிழக்கு பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ஆர். கிருஷ்ணராசன் கேட்டுள்ளார். (அ)

## கௌரவிப்பு விழா

கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயத்தில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் மற்றும் மாவட்ட, மாகாண மட்டப்போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டிய மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை சின்னத்தம்பி மண்டபத்தில் பாடசாலை அதிபர் இ.இராகவன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆரம்பக் கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் இ.இராஜேஸ்வரன் கலந்து சிறப்பிக்கவுள்ளதோடு மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (அ-3-24)

# உணவகங்களில் சிகரெட் புகைப்பதற்கு தடைவிதிப்பு

வடமராட்சி பிரதேச உணவகங்களில் சிகரெட் புகைத்தலுக்கு நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை பொலிஸார் மற்றும் சுகாதார பிரிவினரால் தடை விதிக்கப்பட்டுள்ளது.

உணவகங்களில் சிகரெட் புகைத்தலுக்கு போதிய இட வசதிகள் இன்மையாலும் மக்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் உள்ளதாலும் சுகாதார பிரச்சினைகளை கருத்திற் கொண்டும் இவ்வாறு விற்பனை செய்வதற்கு தடை விதிக்கப்பட்டது.

எனவே கடை உரிமையாளர்கள், சிறுவர்களுக்கு சிகரெட் விற்பனை செய்தவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் வீதியோரத்தில் மற்றும் பொது இடங்களில் சிகரெட் புகைப்பிடிப்பவர்கள் மீதும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார். (அ-3-24)



யாழ்.தேர்தல் மாவட்ட தேருநர் இடாப்புத்திருத்தல் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்றுமுன்தினம் யாழ். கிறீன் கிராஸ் ஹோட்டலில் நடை பெற்றது. இந்தக் கலந்துரையாடலின் போது பிரதித் தேர்தல் ஆணையாளர் எம்.மொஹமட், பாராளுமன்ற உறுப்பினர்கள் சுரேஷ் பிரேமச்சந்திரன், சிவஞானம் சிறிதரன் ஆகியோர் உரையாற்றுவதையும் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-அலுவலகச் செய்தியாளர்)

# போர்க்குற்ற விசாரணையிலிருந்து அரசாங்கம் தப்பிக்க முடியாது

## இதை அவர்களும் நன்குணர்ந்துள்ளனர் என்கிறார் கயந்த



(கொழும்பு)

**அரசாங்கம் சர்வதேச மட்டத்தில் தடை தாண்டும் போட்டியொன்றில் ஈடுபட்டு வருவதாகவும் அதில் வெற்றி வாய்ப்பு மிகக் குறைவாகவே காணப்படுவதாகவும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.**

அரசின் சர்வதேசத்தின் குற்றச்சாட்டுக்களிலிருந்து தப்புவதற்காக பகிரதப் பிரயத்தனங்களில் அது ஈடுபாடு காட்டி வருவதாகவும் சுட்டிக்காட்டியது.

கடந்த திங்கட்கிழமை எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் கட்சியின் ஊடகப் பேச்சாளரான பாராளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அன்று ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிகளின் போது ஜே. ஆர். ஜயவர்த்தன, பிரேமதாஸ, காமினி திசாநாயக்க, லலித் அத்துலத் முதலி, ஏ.சி.எஸ்.ஹமீத், ரணில்விக்கிரமசிங்கபோன்றோர் வெளிநாடுகளுக்குச் சென்று உதவிகளையும் நிவாரணங்களையும் அள்ளிக் கொண்டு வந்தனர். இதன்மூலம் நாடு பொருளாதார ரீதியில் நல்ல முன்னேற்றம் கண்டது.

இன்றைய அரசாங்கத்தில் உள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் அவரது அமைச்சரவையில் உள்ளவர்களும் நாளாந்தம் வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்டு வருகின்றனர். அவற்றின் மூலம் நாட்டுக்கு எந்த வித உதவிகளும் கிட்டவில்லை. அவர்கள் உதவி கோருவதற்குப் பதிலாக தம்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களிலிருந்து விடுபடுவதற்கான பகிரதப் பிரயத்தனத் தையே மேற்கொண்டு வருகின்றனர்.

சர்வதேசத்தின் காலடியில் மண்டியிட்டுத் தப்புவதற்கான வழிகளையே தேடி வருகின்றனர். குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் சர்வதேச விசாரணையிலிருந்து தப்ப முடியாது என்பதை நன்குணர்ந்து விட்டனர். நாட்டு மக்களிடம் வீராப்புப் பேசினாலும் உண்மை நிலை வேறாகவே அமைந்துள்ளது. நாட்டுக்கு அபகீர்த்தி ஏற்படுவதை இனிமேல் எந்தச் சக்தியாலும் தடுத்து நிறுத்த முடியாது. அரசாங்கத்தின் கெட்டகாலம் ஆரம்பித்து விட்டது. இனிமேல் அடுத்தடுத்துத் தோல்விகளுக்கு முகம்கொடுக்கும் அவலம் ஏற்பட்டுள்ளது. நாட்டு மக்களை இனிமேலும் ஏமாற்ற முடியாது.

இந்தத் தடை தாண்டும் போட்டிகளில் ஒன்றையேனும் அரசாங்கத்தால் வெற்றி கொள்ள முடியுமா என்பது சந்தேகத்துக்கிடமானதே ஆகும். இனிமேலும் அரசு உண்மைகளை மூடி மறைக்க முற்படக் கூடாது. உண்மையை உலகுக்குச் சொல்லியே ஆக வேண்டும். தொடர்ந்தும் பொய் கூறி நாட்டை அழிவுக்கு இட்டுச் செல்ல முனைய வேண்டாமெனக் கேட்டுக் கொள்கின்றோம் என அவர் குறிப்பிட்டார். (அ-2)

## பரிசளிப்பு விழா

(கரவெட்டி)

துன்னாலை காசிநாதர் வித்தியாலத்தின் பரிசளிப்பு விழா நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் பாடசாலை அதிபர் ரி.இராசராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருத்தினராக கரவெட்டி கோட்டக்கல்வி அதிகாரி எஸ். நற்குணலிங்கம் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

அத்துடன் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ-3-24)

## விண்ணப்பம் கோரல்

(கொழும்பு)

சமூக சேவை அமைச்சின் கீழுள்ள முதியோர்களுக்கான தேசிய செயலகங்களில் கடமையாற்றும் முதியோர் உரிமைகள் மேம்பாட்டு உதவியாளர்களுக்கான உளவியல் ஆலோசனை பாடத்திட்டமொன்றை நடத்தவுள்ளதாக முதியோர்களுக்கான தேசிய செயலகப் பணிப்பாளர் ஜே.கிருஸ்ணமூர்த்தி தெரிவித்துள்ளார்.

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தினால் 15 மாதங்களுக்கு நடத்தப்படவுள்ள உளவியல் ஆலோசனை டிப்ளோமா பாடத்தினை பயில்வதற்குரிய சந்தர்ப்பத்தினை முதியோர் உரிமைகள் மேம்பாட்டு உதவியாளர்களுக்கு வழங்குவதே இதன் நோக்கமாகும் எனவும் இப்பாடத்திட்டம் வார இறுதி நாட்களில் கொழும்பில் நடத்தப்படவுள்ளதாகவும் இதற்கான கொடுப்பனவுகள் முதியோர் தேசிய செயலகத்தினால் வழங்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இப்பாடத்திட்டத்தினை பயில் விரும்பும் விண்ணப்பதாரிகள் தங்களது சுய விபரங்கள் அடங்கிய விண்ணப்பப்படிவத்தினை பிரதேச செயலாளரின் உறுதிப்படுத்தலுடன் நாளை அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (அ-2)

## ஓமந்தை மத்திய கல்லூரியின் நூற்றாண்டு விழா

(வவுனியா)

வவுனியா ஓமந்தை மத்திய கல்லூரியின் நூற்றாண்டு விழா எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலையில் அதிபர் மூத்ததம்பி அரசரெத்தினம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

1911 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை பிரபலமான பாடசாலையாக மிளிர்ந்திருந்த நிலையில் யுத்தம் காரணமாக பல்வேறு இடர்பாடுகளை சந்தித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

வன்னியில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தின் போது சரணடைந்த விடுதலைப்புலிகளின் தடுப்பு முகாமாக இரண்டு வருட காலம் செயற்பட்ட இப்பாடசாலையானது தற்போது சுமுகமாக இயங்கி வரும் நிலையில் நூற்றாண்டு விழாவினை சிறப்பாகக் கொண்டாடவுள்ளது.

இரு அமர்வுகளாக இடம்பெறவுள்ள நூற்றாண்டு விழா நிகழ்வுகளை பாடசாலையின் பழைய மாணவர்கள், பெற்றோர் மற்றும் பாடசாலை சமூகம் இணைந்து நடத்தவுள்ளது.

காலை அமர்வுக்கு பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் எல். இளங்கோவனும் கௌரவ விருந்தினர்களாக வடமாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாக முதல்வர் ஆர். நந்தகுமார், மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் திருமதி. எஸ்.எஸ். செபஸ்ரியான், ஓய்வு பெற்ற உதவி அரசாங்க அதிபர் க.ஐயம்பிள்ளை ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாக வவுனியா வடக்கு கல்விப் பணிப்பாளர் திருமதி. பராசக்தி கணேசலிங்கம், வவுனியா தெற்கு கல்விப் பணிப்பாளர் திருமதி. அன்ரன் சோமராஜா, வவுனியா வளாக வியாபார கற்கைகள் பீட பீடாதிபதி கலாநிதி ரி.மங்களேஸ்வரனும் வைத்திய கலாநிதி எம்.மலரவனும் கலந்து கொள்ளவுள்ளனர். மாலை அமர்வில் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி பி.எஸ்.எம்.சாள்ஸ் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார். நூற்றாண்டு விழாவின் போது பல்வேறு கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

## தபால் ஊழியர்களின் போராட்டம் 13 இலட்சம் அஞ்சல்கள் தேக்கம்

(கொழும்பு)


அஞ்சல் ஊழியர்களின் தொழிற்சங்க நடவடிக்கையினால் சுமார் பதின்மூன்று இலட்சம் அஞ்சல்கள் தேங்கிக் கிடப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அஞ்சல் மா அதிபர் தமது பதவியில் இருந்து விலகக் கோரி அஞ்சல் ஊழியர் கடந்த 14 ஆம் திகதி ஆரம்பித்த உண்ணாவிரதப் போராட்டம் நேற்று மூன்றாவது நாளாகவும் முன்னெடுக்கப்படுகிறது.

அத்துடன் இந்த தொழிற்சங்க போராட்டம் காரணமாக சர்வதேச அஞ்சல் சேவையில் எந்தவொரு பாதிப்பும் ஏற்படவில்லை என்று பிரதி அஞ்சல் மா அதிபர் ஆர்.டீ.பீ. காமினி தெரிவித்துள்ளார்.

இதேவேளை அஞ்சல் மா அதிபர் எம். கே.பி.திஸாநாயக்க நேற்று கொழும்பில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போது தனக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்கு பதிலளிக்கும் வகையில் ஏற்பாடு செய்திருந்த இச்சந்திப்பில் தமக்கு எதிராக இதுவரையிலும் எந்தவிதமான குற்றப் பத்திரிகையும் முன்வைக்கப்படவில்லை என்று தெரிவித்துள்ள அவர் தமக்கு எதிரான குற்றப்பத்திரிகை முன்வைக்கப்பட வேண்டுமெனின் அமைச்சரவையினால் மாத்திரமே முன்வைக்க முடியும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)






கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலகத்தின் கலாசார விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வரவேற்பு நடனம் இடம் பெறுவதையும் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் கலைஞர் ஒருவருக்கு விருதினை வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- அலுவலக செய்தியாளர்)

# வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்.
# 2012ஆம் ஆண்டிற்கான கேள்வி அறிவித்தல்

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபையின் எல்லைக்குட்பட்ட சந்தைகள், இறைச்சிக் கடைகள், கோழி இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடைகள் என்பவற்றை 2012.01.01 தொடக்கம் 2012.12.31 ஆம் திகதி வரை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரம் வழங்கும் இறுதித் திகதி :- 2011.11.29 பி.ப. 01.00 மணிவரை
கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி :- 2011.11.30 பி.ப 12.00 மணிவரை
கேள்வி திறக்கும் திகதி :- 2011.11.30 பி.ப. 02.00 மணி

01. கேள்விப் பத்திரங்கள் மூன்று பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதி உட்பட இரு பிரதிகளை தவிசாளர் வலி தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய் என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது அதற்கென தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும். மூன்றாவது பிரதி பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.
02. கேள்விப் பத்திரம் பெற விரும்புவோர் விண்ணப்பங்களுடன் தேசிய அடையாள அட் டையையும் அதன் நிழற்படப் பிரதியையும் கொண்டு வருவதுடன் தாம் வதியும் இடத்தின் வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
03. உள்ளூராட்சி மன்றங்களால் தவறுனராகக் கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரம் வழங்கப்படமாட்டாது. படிவம் வழங்கப்பட்டபின் கண்டுபிடிக்கப்பட்டால் அவரின் கேள்விப்பத்திரம் நிராகரிக்கப்படும்.
04. ஆகக் குறைந்த கேள்வித்தொகையிலும் குறைந்த கேள்வித்தொகை கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
05. இறைச்சிக்கடைகளுக்கு மாதாந்த வாடகை செலுத்தப்படல் வேண்டும்.
06. கேள்விப் படிவக் கட்டணம், கேள்வித் தொகை, மாத வாடகை என்பவற்றிற்கு 2% தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி (N.B.T)யும் 12% பெறுமதி சேர்க்கப்பட்ட வரியும் (VAT) செலுத்தப்படல் வேண்டும்.
07. கேள்வி நிபந்தனைகள் அறிவுறுத்தல்களுக்கு அமையாத கேள்விக் கோரிக்கைகளை நிராகரிக்கவும் எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ, நிராகரிக்கவோ தவிசாளருக்கு பூரண அதிகாரம் உண்டு.
08. தெரிவு செய்யப்படும் கேள்விகாரர்கள் கேள்வித் தொகையில் 1/3 பகுதியை 2011.12.09ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினை செய்துகொள்ள வேண்டும்.
09. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.
10. மானிப்பாய் பொதுச் சந்தை, பண்டத்தரிப்பு பொதுச்சந்தை என்பவற்றிற்குரிய விண்ணப்பப்பத்திரங்களை பெற்றுக்கொள்ள விரும்பின் ஏதாவதொரு வங்கியில் தங்கள் பெயரில் முறையே ரூ 150,000.00 இற்கும் ரூ 75,000.00 இற்கும் குறையாது வைப்பில் உள்ளமைக்கான ஆதாரங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
11. கேள்வி சம்பந்தமான மேலதிக விபரங்களை தலைமை அலுவலகத்திலும் உப அலுவலகங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

## 2012ஆம் ஆண்டுக்கான கேள்வி அட்டவணை

| தொ. இல | சந்தைகள் (துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையங்களுடன்) இறைச்சிக் கடைகள், கோழி இறைச்சிக்கடைகள், கருவாட்டுக் கடைகள் விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணம் (NBT, VAT தவிர) | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த தொகை (NBT, VAT தவிர) | மாதாந்த வாடகை (NBT, VAT தவிர) |
|---|---|---|---|---|---|
| I | மானிப்பாய் பட்டின உப அலுவலகம் | | | | |
| 01. | மானிப்பாய் பொதுச் சந்தை | 1,000.00 | 10,000.00 | 1,527,900.00 | - |
| 02. | மானிப்பாய் பொதுச் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 5,000.00 | 267,300.00 | 400.00 |
| 03. | மானிப்பாய் பொதுச் சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 2,000.00 | 133,100.00 | 300.00 |
| 04. | மானிப்பாய் பொதுச் சந்தை கோழி இறைச்சிக்கடை | 1,000.00 | 5,000.00 | 331,200.00 | 400.00 |
| II | மானிப்பாய் கிராம உப அலுவலகம் | | | | |
| 01. | நவாலி பிரசாத் சந்தை | 1,000.00 | 5,000.00 | 181,020.00 | - |
| 02. | சாவற்கட்டு சந்தை | 1,000.00 | 5,000.00 | 187,000.00 | - |
| 03. | நவாலி பிரசாத் சந்தை மாட்டிறைச்சி கடை | 500.00 | 2,000.00 | 93,500.00 | 400.00 |
| 04. | நவாலி பிரசாத் சந்தை ஆட்டிறைச்சி கடை | 500.00 | 1,500.00 | 30,000.00 | 300.00 |
| 05. | நவாலி பிரசாத் சந்தை கோழி இறைச்சிக் கடை | 500.00 | 1,500.00 | 21,500.00 | - |
| 06. | ஆனைக்கோட்டை சந்தி மாட்டிறைச்சிக் கடை | 1,000.00 | 5,000.00 | 227,865.00 | - |
| 07. | ஆனைக்கோட்டை சந்தி ஆட்டிறைச்சிக் கடை | 500.00 | 1,500.00 | 60,720.00 | - |
| III | பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகம் | | | | |
| 01. | பண்டத்தரிப்பு பொதுச் சந்தை (மரக்கறி) | 1,000.00 | 10,000.00 | 372,350.00 | - |
| 02. | பண்டத்தரிப்பு பொதுச் சந்தை (மீன் சந்தை) | 1,000.00 | 15,000.00 | 1,176,175.00 | - |
| 03. | பண்டத்தரிப்பு சாந்தை சந்தை | 500.00 | 1,500.00 | 47,422.00 | - |
| 04. | பண்டத்தரிப்பு சந்தை மாட்டிறைச்சிக் கடை | 500.00 | 1,500.00 | 39,490.00 | 600.00 |
| 05. | பண்டத்தரிப்பு சந்தை கோழி இறைச்சிக் கடை | 500.00 | 1,500.00 | 32,615.00 | 600.00 |
| 06. | பண்டத்தரிப்பு சந்தை கருவாட்டுக்கடை இல-1 | 500.00 | 1,500.00 | 7,500.00 | 600.00 |
| 07 | பண்டத்தரிப்பு சந்தை கருவாட்டுக்கடை இல-2 | 500.00 | 1,500.00 | 7,500.00 | 600.00 |
| IV | பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகம் | | | | |
| 01. | மாசியப்பிட்டி சந்தை | 1,000.00 | 2,000.00 | 138,158.00 | - |
| 02. | இளவாலை பொதுச் சந்தை | 1,000.00 | 5,000.00 | 258,410.00 | - |
| 03. | மாதகல் பொதுச் சந்தை | 500.00 | 1,500.00 | 99,386.00 | - |
| 04. | மாசியப்பிட்டி சந்தை மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 1,500.00 | 38,000.00 | 250.00 |
| 05. | மாசியப்பிட்டி சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 500.00 | 1,500.00 | 5,600.00 | 250.00 |
| 06. | மாதகல் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 1,500.00 | 22,110.00 | 250.00 |
| 07. | மாதகல் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 1,500.00 | 5,500.00 | 250.00 |
| 08. | இளவாலை சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 2,000.00 | 111,166.00 | - |

வலிகாமம் தென்மேற்கு
பிரதேச சபை, மானிப்பாய்.
17.11.2011

திரு.அந்தோனிப்பிள்ளை ஜெபநேசன்,
தவிசாளர்.

(சி-4984)

# த.தொழில்நுட்பத்தை கிராமப்புறங்களில் அறிமுகப்படுத்த ஜனசல திட்டம் அறிமுகம்
## தொழில்நுட்ப அமைச்சின் செயலாளர்

(கொழும்பு)

ஆசியாவின் அதிசய பொறி என்ற வகையில் இலங்கையை மாற்றுவதில் தகவல் தொழில்நுட்பத்துறை முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது என தொலைத்தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சின் செயலாளர் நிமல் ஆனந்த அத்து கோரல்ல தெரிவித்துள்ளார்.

ஏனைய துறைகளுடன் தகவல் தொழில்நுட்பத்துறை இணைக்கப்பட்டுள்ளதால் நாட்டின் உன் னத உந்து சக்தியாக இது வந்து ள்ளது.

கிராமப்புறங்களில்தகவல்தொழில்நுட்பத்தை அறிமுகம் செய்யும் வகையில் ஜனசல திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

நாட்டின் சகல பகுதிகளிலும் 625 இத்தகைய நிலையங்கள் ஏற்கனவே இயங்கி வருகின்றன. ஈ.ஸ்ரீ லங்கா திட்டத்தின் கீழ் சகல துறைகளிலும் அபிவிருத்தி இடம்பெற்று வருகின்றது என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ)

# வலய மட்டத்தில் நடைபெற்ற சித்திரப்போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வலய பாடசாலை மாணவர்களிடையே வலய மட்டத்தில் நடைபெற்ற சித்திரப் போட்டி முடிவுகள் யாழ்.வலய பிரதிக் கல்விப் பணிப்பாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் முதல் மூன்று இடங்களை பெற்றவர்களின் விபரம் வருமாறு,

**கருத்து வெளிப்பாடு**
**பிரிவு I**

தி.நிருபன் (யாழ்.இந்துக்கல்லூரி), க.புவியந்தன் (யாழ். மத் திய கல்லூரி), உ.ராம்கி (யா/அச்சு வேலி மத்திய கல்லூரி)

**ஆக்க அலங்காரம்**

ம.யகிலா (யா/அச்சவேலி மத்திய கல்லூரி), மு.நியூசிகா (யா/கனகரத்தினம் ம.வி), றொ.மேரி றொசாந்தினி (யா/வேம்படி மகளிர் உயர் தரப்பாடசாலை)

**பொருட் கூட்ட வரைதல்**

ர.முகமட்யசார் (யா/வைத்தீஸ்வராக் கல்லூரி), க.சிவானுஜன் (யாழ்.இந்துக் கல்லூரி), செ.லவோஜன் (யா/ வாதரவத்தை விக்கினேஸ்வரா)

**கருத்து வெளிப்பாடு**
**பிரிவு II**

அ.தனேந்திரன் (யாழ்.மத் திய கல் லூரி), கு.மதுர்சிகா (யா/ புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தாக் கல்லூரி), வே.லக்ஷி (யா/ யாழ்.இந்து மகளிர் கல்லூரி)

**ஆக்க அலங்காரம்**

ச.சஞ்சீவன் (யா/கொக்குவில் இந்துக் கல் லூரி), வ.மகிசாளினி (யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), க.வளர்மதி (யா/ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி)

**பொருட் கூட்ட வரைதல்**

செ.திலக்ஷன் (யா/யாழ்.மத்திய கல்லூரி), கெ.றொசான் (யா/யாழ். பெரியபுலம் ம.வி), தி.பார்த்தீபன் (யா/ உரும்பிராய் இந்துக்கல்லூரி). (அ)

# பேருந்து கட்டணத்தில் சீர்திருத்தம் வேண்டும்
## பேருந்து உரிமையாளர் சங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

பேருந்து கட்டணத்தில் எதிர்வரும் மாதங்களில் மாற்றம் செய்யப்படாவிட்டால் முன்னறிவிப்புக்கள் ஏதும் இன்றி நாடளாவிய ரீதியாக பாரிய வேலை நிறுத்த போராட்டம் முன்னெடுக்கப்படுமென எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

எவ்வாறாயினும் பேருந்து கட்டணம் அதிகரிக்கப்படும் என்று தனியார் போக்குவரத்து துறை அமைச்சரினால் தமது உறுதிமொழி ஒன்று அளிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனடிப்படையில் பேருந்து கட்ட சீர்திருத்தத்தின்போது ஆரம்ப கட்டணங்களான 7 ரூபா மற்றும் 10 ரூபா கட்டணங்களில் மாற்றம் மேற்கொள்ளப்படாது என அவர் தெரிவித்துள்ளார்.

டீசல் விலையேற்றத்தால் பேருந்து உரிமையாளர்களின் நெருக்கடிகளை கருத்தில் கொண்டு காலங் கடந்த வட்டியை 4 சதவீதத்தினால் குறைக்குமாறு திறைசேரிக்கு கோரிக்கை விடுத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# நுவரெலியாவில் 13 பிரதேச செயலகங்களை உருவாக்க முடிவு

(கொழும்பு)

நுவரெலிய மாவட்டத்தில் தற்போதுள்ள ஐந்து பிரதேச செயலக பிரிவுகளை 13 ஆக பிரிப்பதற்கான உத்தேச தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்படடுள்ளதாக இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் தலைவர் எஸ்.சதாசிவம் தெரிவித்துள்ளார்.

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் ஆலோசனைகளின் பேரில் அமைக்கப்பட்ட எல்லை நிர்ணய குழுவுக்கு மலையக அரசியல் பிரதிநிதிகள் மற்றும் புத்திஜீவிகளுக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னரே இந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதாகவும் கூறினார். (அ-2)

# கடாபிக்கு தண்டனை மகிந்தவுக்கு அரவணைப்பு

அவுஸ்திரேலியாவின் பேர்த் நகரில் அண்மையில் நடந்து முடிந்த பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் இலங்கை மீது கண்டனங்கள், தடைகள், கட்டுப்பாடுகள் வரும் என்று எதிர் பார்த்த மனித உரிமையை மதிப்பவர்களுக்கு ஏமாற்றமே இறுதியாகக் கிடைத்திருக்கின்றது.

❖ மகிந்தவிற்கு எதிராக வழக்குத் தாக்கல்

❖ கனடாவின் இலங்கைக்கு எதிரான நிலைப்பாடு,

❖ 2013 இலங்கையில் நடைபெறும் பொதுநலவாய மாநாட்டுக்குத் தடை

என இலங்கையை மூன்று பாரிய நெருக்கடிகள் சூழ்ந்திருந்த நிலையில், பொதுநலவாய மாநாட்டில் இலங்கை அரசின் மீது கிடுக்குப்பிடி போடப்படும் என்று நம்பியவர்கள் மூன்று விடயங்களிலும் ஏமாந்து போயிருக்கின்றார்கள்.

பொதுநலவாய நாடுகளிலும் நாம் கலந்துகொண்டோம். கனேடிய வெளிவிவகார அமைச்சர் இலங்கைப் பிரச்சினைகள் தொடர்பில்



பிரசாரம் செய்வதற்கு முற்பட்ட போதும் அதற்கு 15 நாடுகள் எதிர்ப்புத் தெரிவித்தன.

ஜனாதிபதிக்கு எதிராக அவுஸ்திரேலியாவில் விசாரணை மேற்கொள்ள எடுக்கப்பட்ட தீர்மானம் பின்வாங்கப்பட்டமை, 2013 ஆண்டு இலங்கையில் பொதுநலவாய மாநாட்டை நடத்துவதற்கு அங்கத்துவ

என்று அவுஸ்திரேலிய முன்னாள் பிரதமர் எச்சரித்திருந்தார்.

ஆனாலும் இலங்கையைக் காப்பாற்றுவதற்கு எல்லோரும் துணை நிற்பது ஏன் என்ற கேள்வியையே ஏற்படுத்துகின்றது.

ஈராக்கின், ஆப்கானின், லிபியாவின் ஆட்சியாளர்கள் மீதும் அந்நாட்டின் இறையாண்மையின் மீதும் இல்லாத அக்கறை இலங்கையின் ஆட்சியாளர்கள் மீதும் இறையாண்மையின் மீதும் மட்டும் இவர்களு



## சர்வதேசத்தின் இரட்டை நிலைப்பாடு தமிழ்மக்களுக்குத் தீர்வைத் தராது!

இலங்கையை கண்டிப்பவர்களை விட காப்பாற்றுபவர்களே அதிகமாக இருந்தால் தங்களை எதுவும் செய்துவிட முடியாது என்ற இறுமாப்புடன் இலங்கை அரசு சிரித்துக் கொண்டே மாநாட்டை முடித்துக் கொண்டு நாடு திரும்பியிருக்கிறது.

இலங்கை தானாகவே குற்றவாளிக் கூண்டில் ஏறிநிற்பதற்கு முனைந்தாலும் இந்தியா விட்டுவிடாது என்பது போல, இலங்கையைக் காப்பாற்ற தனது அனைத்து அஷ்திரங்களையும் ஆதரவு நாடுகளிடம் இந்தியா பிரயோகித்ததாகத் தகவல்கள் வெளிவந்துள்ளன.

பொதுநலவாய மாநாட்டில் தங்களுக்கு பெரும் வெற்றி கிடைத்துள்ளதாக வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தனது மார்புகளைத் தட்டி அறிவிக்கின்றார்.

பல்வேறு எதிர்ப்புகளுக்கு மத்தியில் பொதுநலவாய மாநாட்டில் நாடுகள் அனைத்தும் இணக்கம் தெரிவித்தமை போன்ற முக்கிய பிரதான காரணங்கள் இலங்கைக்குப் பெரும் வெற்றியைத் தந்துள்ளன.

பொதுநலவாய மாநாட்டில் இலங்கை பங்குபற்றுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டாலும் நாம் அதில் கலந்து கொண்டு பெரும் வெற்றி கண்டுள்ளோம் என்று பீரிஸ் கொக்கரித்திருக்கின்றார்.

ஆனால் பொதுநலவாய மாநாடு இலங்கைக்கு ஆதரவாக திரும்பியிருந்தமை குறித்து மனித உரிமை அமைப்புக்களும், பல்வேறு அவுஸ்திரேலிய, நியூசிலாந்து ஊடகங்களும் தங்களது கண்டனங்களையும், அதிர்ச்சிகளையும் வெளியிட்டிருந்தன.

இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்ற விவகாரங்கள் தொடர்பாக விசாரணை செய்வதற்கு பொதுநலவாய நாடுகள் பின்நிற்பதானது எதிர்விளைவுகளையே ஏற்படுத்தும்

க்கு ஏன் வந்தது? பொதுமக்கள் மீதான தாக்குதலை மேற்கொண்ட லிபிய ஜனாதிபதி முவம்மர் கடாபி மனித உரிமைகளை மீறியவர், அவர் ஒரு போர்க் குற்றவாளியெனக் குற்றம் சாட்டி சர்வதேச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தது மட்டுமல்ல, ஓட ஓட விரட்டி கடாபியை படுகொலை செய்து அழித்தொழித்தாயும் விட்டது.



இப்போது ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் தாக்குதல் நடத்தி சிலரது மரணத்திற்கு காரணமான கடாபியின் மகன் மீது மனித

உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு சர்வதேச நீதிமன்றத்தில் வழக்கும் பதியப்பட்டுள்ளது.

அவரை கைது செய்து நீதிமன்றில் நிறுத்த வேண்டும் என்பதற்காக தலைமறைவாக இருக்கக் கூடும் என்று கருதும் சஹாரா பாலைவனம் எங்கும் கடாபியின் மகனை சர்வதேசம் சல்லடை போட்டு தேடி வருகின்றது.


ஆனால் இனப்படுகொலையில் ஈடுபட்ட இலங்கையின் முப்படைத் தளபதி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு இராஜ மரியாதையும் அரவணைப்பும் ஜனாதிபதிக்கு மட்டுமல்ல இனப்படு கொலையில் நேரடியாக பங்கேற்ற இராணுவத் தளபதிகளை தங்கள் நாடுகளில் இராஜ தந்திரிகளாக உலா வருவதற்கு அனுமதியும் பாதுகாப்பும் வழங்கியுள்ளதும் இதே நாடுகள்தான்.

உலகத்தின் இந்த முரண்பட்ட போக்குக்கள் தமிழ் மக்களுக்கு நியாயமான தீர்வொன்றை பெற்றுத் தந்துவிடப்போவதில்லை என்பதையே உறுதிப்படுத்தி வருகின்றது.

இலங்கையின் அடக்கு முறைக்குள் இருந்து தங்களது விடுதலைக்காகவும், தங்களது உரிமைகளுக்காகவும் தங்களுக்கு கிடைக்க வேண்டிய நீதிக்காகவும் தமிழ் மக்களே தொடர்ந்தும் போராட வேண்டியவர்களாக இருக்கின்றார்கள்.

# புலம்பெயர் தமிழர்களுடன் இணைந்து செயற்பட தயார்

## ஜீ.எல்.பீரிஸ் தெரிவிப்பு



(கொழும்பு)

புலம்பெயர் தமிழர்களுடன் இணைந்து செயற்பட அரசாங்கம் தயாராக இருப்பதாகவும் அதேவேளை விடுதலைப் புலிகளின் ஈழம் திட்டத்துக்காக செயற்படுவோர் மீது அனைத்துலக சமூகம் வெளிப்படையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

காலி கடல்சார் பாதுகாப்பு மாநாட்டில் பங்கேற்ற 19 நாடுகளின் பிரதிநிதிகள் மத்தியில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

புலம் பெயர் தமிழர்களை ஒதுக்க வேண்டிய தேவை அரசாங்கத்துக்கு இல்லை. போருக்கு பிந்திய சூழலில் அவர்களுடன் இணைந்து செயற்பட தயாராகவே உள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தில் உள்ள 27 நாடுகள் உள்ளிட்ட 32 நாடுகள் விடுதலைப் புலிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கத் தவறியுள்ளன.

தடை செய்யப்பட்ட விடுதலைப்புலிகளின் கொடிகளை ஏந்திச் செல்வதை தடுப்பதில் அனைத்துலக சமூகம் தோல்வி கண்டுள்ளது.

விடுதலைப்புலிகள் கடந்த 2009 ஆம் ஆண்டு மே மாதம் தமது மரபுவழி இராணுவ பலத்தை இழந்த போதிலும் வெளிநாடுகளில் தொடர்ந்து நிதி சேகரிக்கின்றார்கள்.

இருந்த போதிலும் விடுதலைப் புலிகளுக்கு தயவு காண்பிப்பதாக எந்தவொரு நாட்டையும் குறிப்பிட்டுக் குற்றம்சாட்ட விரும்பவில்லை.

மிக அண்மையில் பேர்த்தில் கொமன்வெல்த் மாநாட்டின் போது கூட விடுதலைப் புலிகளின் கொடியை ஏந்தியபடி போராட்டம் நடத்தினார்கள்.

பிரித்தானியாவில் உள்ள விடுதலைப் புலிகளின் செயற்பாட்டாளர்கள் கூட தொடர்ந்து புலிகளின் கொடிகளை பகிரங்கமாக ஏந்திச் செல்கின்றார்கள் என்றும் வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் விசனம் வெளியிட்டுள்ளார். (அ-2)

# தொழிலாளர் பிரச்சினைக்கு உரிய தீர்வு வழங்கப்படும்

## கே.டி.லால்காந்த தெரிவிப்பு

(கொழும்பு)

தொழிலாளர் சம்பளப் பிரச்சினைக்கு சோசலிச முறைமையின் கீழ் தீர்வு வழங்க முடியும் என ஜே.வி.பி. யின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கே.டி.லால்காந்த தெரிவித்துள்ளார்.

தற்போதைய ஆட்சி முறைமை நாட்டில் நீடிக்கும் வரையில் உழைக்கும் வர்க்கத்தினர் நெருக்கடிகளை எதிர்நோக்க நேரிடும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் சோசலிச ஆட்சி முறைமை ஒன்றை அறிமுகப்படுத்துவதன் மூலம் மட்டுமே பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்க முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

சோசலிச முறைமையில் திறமைக்கு ஏற்ற வகையில் செய்யும் தொழிலுக்கு சம்பளம் வழங்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போதைய முறைமையில் உழைப்புக்கு ஏற்ற வகையில் அன்றி சகலருக்கும் ஒரேவிதமான சம்பளம் வழங்கப்படுவதுடன் எஞ்சிய தொகையை உரிமையாளர்கள் இலாபமாக ஈட்டிக் கொள்கின்றனர் என அவர் தெரிவித்துள்ளார்.

சோசலிச முறைமையின் கீழ் எந்த விதமான முரண்பாடுகளும் ஏற்பட வாய்ப்பில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். தனிப்பட்ட ரீதியில் தொழிலாளர்கள் நியாயமான சம்பளத்தை பெற்றுக் கொள்ள முடியாது எனவும் திட்டமிட்ட வகையில் போராட்டங்கள் நடத்தப்பட வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# ரிசானாவும் பெற்றோரும் உணர்வுபூர்வ சந்திப்பு

சவுதியில் பணிப்பெண்ணாக சேவையாற்றிய நிலையில் அங்கு கொலைக் குற்றத்துக்காக மரண தண்டனை பெற்றுள்ள ரிசானா நபீக்கை அவரின் பெற்றோர் சந்தித்துள்ளனர்.

இந்த உணர்ச்சிபூர்வ சந்திப்பு ரியாத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

ரிசானா நபீக்கை தண்டனையில் இருந்து காப்பாற்றும் முயற்சியின் அடிப்படையிலேயே இந்தச் சந்திப்பு ஏற்பாடாகியிருந்தது.

கடந்த 2007 ஆம் ஆண்டு ஜூன் 16 ஆம் திகதியன்று ரிசானா நபீக்கிற்கு சவுதி நீதிமன்றம் மரண தண்டனை தீர்ப்பை வழங்கியதை அடுத்து முதல் தடவையாக அவரை அவரது பெற்றோர் சந்தித்துள்ளனர்.

இதன்போது தமது தந்தையான மொஹமட் மற்றும் தாயாரான [illegible]பானா ஆகியோரிடம் தம்மை வீட்டுக்கு அழைத்துச் செல்லுமாறு கோரினார் என்று ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

குழந்தை ஒன்றுக்கு பாலூட்டும் போது அது இறந்ததை அடுத்தே ரிசானா கொலை குற்றம் சுமத்தப்பட்டார்.

இதனையடுத்து இறந்து போன குழந்தையின் பெற்றோர் மன்னிப்பு வழங்கினால் மாத்திரமே ரிசானாவுக்கு விடுதலை கிடைக்கும் என்பது சவுதி சட்டத்தின் அடிப்படையாகும்.

இதேவேளை சவுதி அரேபியாவுக்கு வரலாம் ஏன்று எதிர்பார்க்கப்படும் இலங்கையின் மேல்மாகாண ஆளுநர் அலவி மௌலானா, ரிசானாவினால் கொலையுண்டதாக கூறப்படும் குழந்தையின் பெற்றோரை சந்தித்து அவர்களின் பவமன்னிப்பை பெற்றுக் கொள்ள முயற்சிப்பார் என்று அவ்வூடகம் மேலும் தெரிவித்துள்ளது. (அ-2)

# சொத்துக்களை அபகரிக்கும் விவகாரம்; அடிப்படை உரிமை மனுக்கள் நிராகரிப்பு

செயற்பாடுகள் குறைவாக உள்ள தொழில் முயற்சிகள் மற்றும் குறைவான பயன்பாட்டையுடைய சொத்துக்களுக்கு புத்துயிர் அளித்தல் சட்டம் நிறைவேற்றப்பட்டமைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருந்த நான்கு அடிப்படை உரிமை மனுக்கள் நேற்று முன்தினம் நிராகரிக்கப்பட்டது.

ஐந்து பேர் கொண்ட நீதிமன்ற நீதியரசர் குழாம் முன்னிலையில் இந்த மனுக்கள் நேற்று முன்தினம் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

தினியாவல பாலித்த தேரர், செவனகல சீனி உற்பத்தி தொழிற்சாலையில் ஊழியர்கள் மற்றும் கரும்பு விநியோகஸ்தர்கள் உள்ளிட்ட நான்கு தரப்பினர் இந்த அடிப்படை உரிமை மனுக்களை தாக்கல் செய்திருந்தனர்.

மனுக்களை விசாரணைக்கு எடுத்துக் கொள்வதற்கு எத்தகைய அடிப்படை காரணமும் கிடையாது என நீதியரசர்கள் குழாம் தீர்மானித்தது.

உயர் நீதிமன்ற நீதியரசர்களான நிமல் காமினி அமரதுங்க, ஆர் கே. சுரேஷ்சந்திர, எஸ்.ஐ. இமாம், சத்தியா ஹெட்டிகே, பிரசாத் டெப் ஆகியோர் அடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் இந்த மனுக்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

நிஹால் ஸ்ரீஅமரசேகரவும் மனுவொன்றை தாக்கல் செய்திருந்ததுடன் உடல் நடலக் குறைவால் அவர் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை.

குறித்த மனுவை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளுமாறு நகர்த்தல் பிரேரணை ஒன்றின் மூலம் வேண்டுகோள் விடுப்பதற்கு அவருக்கு சந்தாப்பம் உள்ளதென உயர் நீதினமன்றம் அறிவித்துள்ளது. (அ-2)

# உள்ளூராட்சி மன்ற தேர்தல் சட்ட மூலத்தை திருத்த ஆளுங்கட்சி தீர்மானம்

(கொழும்பு)

தற்போது நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான திருத்தச் சட்டமூலத்தில் திருத்தம் மேற்கொள்ள ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி தீர்மானித்துள்ளது.

அரசாங்கத்தின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

அண்மையில் இடம்பெற்ற கட்சியின் மத்திய செயற்குழு கூட்டத்தில் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இதன்படி எந்தவொரு உள்ளூராட்சி மன்றத்தினதும் வரவு-செலவுத்திட்டம் இரண்டு வருடங்கள் தோல்வி அடையுமாயின் அந்த உள்ளூராட்சி சபைக்காக புதிய பிரதானி ஒருவரை நியமிக்க முடியும் என யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

அதுபோல் மூன்றாவது தடவையாகவும் எந்தவொரு உள்ளூராட்சி மன்றத்தின் வரவு செலவு திட்டம் தோல்வி அடையுமாயின் உள்ளூராட்சிமன்றத்தை கலைத்து விசேட ஆணையாளரின் கீழ் கொண்டு வரவும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியினால் கொண்டுவர எண்ணியுள்ள திருத்தத்தில் உள்ளடங்குகின்றது.

தற்போது நடைமுறையிலுள்ள உள்ளூராட்சி மன்ற சட்டமூலத்தின் படி வரவு-செலவு திட்டம் தோல்வி அடையுமாயின் அந்த மன்றத்தின் பிரதானி அதன் நிர்வாக காலம் நிறைவடையும் வரை அந்த பதவியை வகிக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# சிறையில் தூக்கிலிட்டு ஒருவர் தற்கொலை

(கொழும்பு)

பிங்கிரிய பொலிஸ் நிலைய சிறைச்சாலையில் தூக்கிலிட்டு தற்கொலை செய்து கொண்ட நபரின் பிரேத பரிசோதனை குளியாப்பிட்டி வைத்தியசாலையில் நடைபெறவுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

உயிரிழந்த நபர் தமது உறவினரின் வீட்டில் பொருட்களை கொள்ளையிட்ட சந்தேகத்தில் நேற்று முன்தினம் மாலை பிங்கிரிய பொலிஸாரினால் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹண குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் கொள்ளைச் சம்பவம் தொடர்பாக செய்யப்பட்ட முறைப்பாட்டை அடுத்தே குறித்த நபர் கைது செய்யப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

சிறைச்சாலையில் தான் அணிந்திருந்த சாரத்தினால் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

சம்பவத்தில் பிங்கிரிய பகுதியை சேர்ந்த 48 வயதான நபர் ஒருவரே உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ-2)

# நோர்வேயின் அறிக்கைக்கு எதிர்ப்பு தெரிவிக்க தயாராகும் அரசாங்கம்

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுடனான அமைதி முயற்சிகள் தோல்வியடைந்திருந்தமை தொடர்பாக நோர்வேயால் வெளியிடப்பட்டிருக்கும் கருத்துக்கு இலங்கை அரசு இராஜதந்திர ரீதியிலான அதிருப்தியை வெளியிடத் தீர்மானித்துள்ளது.

இலங்கை அமைதி முயற்சிகள் தோல்வியடைந்தமைக்கு அரசும் புலிகள் இயக்கமும் பொறுப்பேற்க வேண்டுமெனக் கடந்த வாரம் நோர்வேயின் அரச சார்பற்ற அமைப்பு ஒன்று தனது அறிக்கையில் சுட்டிக் காட்டியிருந்தது.

அத்துடன் இது தொடர்பாக பல விமர்சனங்களையும் அது முன்வைத்திருந்தது.

இந்நிலையில் மேற்படி விமர்சனங்கள் இறைமையுள்ள அரசு ஒன்றின் நற்பெயருக்கு சர்வதேச ரீதியில் களங்கத்தை ஏற்படுத்துமென அரசு கருதுவதாக மூத்த அமைச்சர் ஒருவர் தெரிவித்தார்.

இதனடிப்படையில் இந்த விமர்சனங்கள் குறித்து நோர்வே அரசுக்கும் மேற்படி ஆய்வை நடத்திய நோறாட் அமைப்புக்கும் இராஜதந்திர ரீதியிலான அதிருப்தியை வெளியிட அரசு தீர்மானித்துள்ளது.

இன்னும் ஓரிரு தினங்களில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். நோர்வே வெளியிட்ட அறிக்கையில்,

சமாதான முயற்சியில் இலங்கையின் நடவடிக்கைகள் குறித்து பல்வேறு அதிர்ச்சித் தகவல்கள் அம்பலமானதால் பெரும் சங்கடமான நிலைக்கு அரசு தள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# குருவின் பார்வையில்



ஆன்மீகம் 36

## பில்லி சூனியம்

பிரபஞ்ச சக்தி பலவிதமாகச் செயற்படுகிறது. எதை நாம் உயிர் என்று சொல்கிறோமோ, அது ஒரு சக்தி அந்த சக்தி ஒரு பெரிய மரமாக நிற்கின்றது. அதேசக்தி ஒரு பறவையாக பறக்கின்றது, அதே சக்தி ஒரு எறும்பாக இங்கே ஊர்கின்றது, அதே சக்தி மனிதனாகவும் இங்கே இருக்கின்றது. அதே



சக்தி மிக உயர்ந்த நிலையில் இருந்தால், அதனைக் கடவுள் என்கிறோம். கல்லாகவிருப்பதும் அதே சக்திதான். கடவுளாக இருப்பதும் அதே சக்திதான். ஆனால், ஒன்று ஸ்தூல நிலையில் இருக்கிறது. மற்றொன்று மிகவும் சூட்சும நிலையில் இருக்கிறது. படைத்தலுக்கு அடிப்படையான இந்த சக்தி பல விதங்களில் செயற்பட்டிருக்கிறது. இந்த சக்தியை நாம் பல விதங்களில் பயன்படுத்துகிறோம்.

உதாரணமாக மின்சாரம். நகரங்கள் மின்சாரம் இல்லாமல் இயங்க முடியாது. மின்சார சக்தியை பல விதங்களில் பயன்படுத்தியிருக்கிறோம். தொலைக்காட்சியைப் பார்க்க மின்சாரம் வேண்டும், மின்விசிறி சுழல மின்சாரம் வேண்டும், தொழிற்சாலை இயங்க மின்சாரம் வேண்டும், தோட்டத்தில் நீர் பாய்ச்ச மின்சாரம் வேண்டும். நம் வாழ்வில் எல்லாத்தேவைகளுக்கும் மின்சாரம் உபயோகமாய் இருக்கிறது. அது நம் நண்பன்தான் என்று மின்சாரக் கம்பியை கட்டியணைத்துக் கொள்ள முடியுமா? அது ஒரு சக்தி. அந்த சக்தியை நாம் நல்லவிதமாகவும் பயன்படுத்தலாம், அழிவிற்கும் பயன்படுத்தலாம். அதே விதமாக, உடல், மனம் இவற்றைக் கொண்டு உலகுக்கே நன்மை உருவாக்குகின்ற சூழ்நிலையை, உயிர்ச்சக்தியை பயன்படுத்தி உருவாக்க முடியும். அல்லது உடல், மனம், இவற்றைக்கொண்டு உலகுக்கே கெடுதல் உருவாக்குகின்ற சூழலையும் உருவாக்க முடியும்.

இந்த அடிப்படையான உயிர்ச் சக்தியை உபயோகப்படுத்தி மனிதனின் நன்மைக்காகவும், உலகின் நன்மைக்காகவும் ஒரு சக்தி வடிவத்தை நாம் உருவாக்க முடியும் இந்த அடிப்படையில்தான் கோயில்களை உருவாக்குகின்ற விஞ்ஞானம் உருவானது. இந்தக்கலாச்சாரத்தில் உள்ள கோயில்கள் பிரார்த்தனை செய்வதற்காக உருவாக்கப்பட்ட இடங்களல்ல. அவை சக்தி வடிவங்கள். கோயிலுக்குச் சென்று பிரார்த்தனை செய்ய வேண்டும் என யாரும் சொல்லவில்லை. அங்கே சிறிது நேரம் அமர்ந்திருக்க வேண்டும் என சொன்னார்கள். ஏனென்றால், அந்த வடிவத்திலிருந்து வெளிப்படுகின்ற சக்தியை நமக்குள் கிரகித்து நன்மையை உருவாக்கிக் கொள்ள வாய்ப்பிருக்கிறது என்று புரிந்ததால் அப்படிச் சொன்னார்கள். ஆனால், இப்போதுள்ள கோயில்கள், சக்தி இல்லாமல், பிரார்த்தனைக்கும், மன்றாடிக் கொள்வதற்குமான இடமாகிவிட்டது.

அதேபோல இந்த சக்தியைப் பயன்படுத்தி தீங்கினை உருவாக்குகின்ற வடிவைக்கூட உருவாக்க முடியும் இதனை பில்லி சூனியம், ஏவல் என்பார்கள். இது உண்மையா? எப்போது ஒரு சக்தியை நல்ல விதமாக செயல் செய்ய உருவாக்க முடியுமோ அதே விதமாக தீங்கினை ஏற்படுத்தும் வடிவத்தினையும் உருவாக்க முடியும். நான்கு வேதங்களில் ஒன்றான அதர்வண வேதம் முழுவதும் இதைக்குறித்துத்தான் சொல்கிறது. சக்தியை நல்லவித மாகவும் இன்னொருவருக்குத் தீங்கினை ஏற்படுத்தும் விதமாகவும் செயற்படச் செய்வது எப்படி என்ற விஞ்ஞானம் இதில் உள்ளது. ஆனால், உண்மையில் 90% தீங்குகள் பயத்தினால், நேர்கிறது...

(தொடரும்)

சத்குரு ஜக்கி வாசுதேவ்

# இஸ்லாமியத் தமிழ் இலக்கியம்

02

"உண் அமுதம் ஊட்டி இளையோர் நகர் கொணர்ந்த
துண் எனும் முழக்கின, துருக்கர் தரவந்த
மண்மகள் தன் மார்பின் அணி வன்ன சரம் என்ன,
பண்ணியல் வயப் பரிகள், பந்தியில் நிரைத்தார்" (825)

என்று குதிரைக்கும் துருக்கர்களுக்கும் தொடர்புடன் கூறியுள்ளார் கம்பர். பின்னர் வடஇந்தியத் தொடர்பு, அழுத்தம் பெற்றதால், இரா்வுத்தன் என்னும் இந்துஸ்தானி சொல் குதிரை வீரனைக் குறிக்க பயன்படுத்தப்பட்டது. இன்றும் தமிழ் முஸ்லிம்களில் ஒரு பகுதியினர் தம்மை இராவுத்தர் என்று அழைத்துக் கொள்கின்றனர்.

**இராவுத்தன் முஸ்லிம்கள்:**

பெரும் பற்றுப் புலியூர் நம்பியின் திருவால வாயுடையார் திருவிளையாடற் புராணத்தில்...

"துய்ய பேருலகிற்கு எல்லாம்
துளங்கி இராவுத்தராயன்" என்றும்,

"இன்னெறி மன்னர் மன்னன்
இனிமை கூர்ந்து இராவுத்தர்க்கு" என்றும்,

திருப்பெருந்துறைப் புராணத்தில்...

"கோட்டம் இல்லா மாணிக்க வாசகர்முன்
குதின்ர இராவுத்தனாய் நின்று" என்றும்,

கந்தர் அலங்காரத்தில்...

"மாமயில் ஏறும் இராவுத்தனே"

என்றும் இராவுத்தன் என்னும் சொல் சைவப் புலவர்களால் கையாளப் பெற்றுள்ளது. திருக்குற்றாலக் குறவஞ்சி "ஆசார ஈனத் துலுக்கன் குதிரை" என்று துருக்கர் என்ற சொல்லின் வழக்கு வடிவத்தைப் பயன்படுத்தியுள்ளது.

**அஞ்சு வண்ணத்தார்:**

சில கல்வெட்டுக்களில் அஞ்சு வண்ணம் என்ற சொல் முஸ்லிம்களைக் குறிக்க கையாளப் பெறுகின்றது. இது அஞ்சு மான் எனும் இந்துஸ்தானி சொல்லின் திரிபு என்று சிலர் கருதுகின்றனர். (செந்தமிழ் 45:4:65 ) பிராமணர், ஷத்திரியர், வைஷியர், சூத்தரர் ஆகிய நான்கு வர்ணங்களுக்கும் அப்பாற்பட்ட இனத்தார் அஞ்சு வண்ணத்தார் என அழைக்கப் பெற்றிருக்கலாம். அல்லது வண்ணவண்ணத் துணிகளை நெய்யும் முஸ்லிம் நெசவாளர்கள் அஞ்சு வண்ணத்தார் ஆயினர் என்றும் கருதலாம். இன்று கூட அஞ்சுவண்ணம் பெரிய தெருக்கள் தென்காசி (நெல்லை) திருவதாங்கோடு (குமரி) ஆகிய ஊர்களில் உள்ளன. அங்கு முஸ்லிம் நெசவாளர்கள் (தாகனார் என்பது இவர்கள் பட்டம்) வாழ்கின்றனர். கி.பி. 10 ஆம் நூற்றாண்டில் முற்பகுதிக் கல்வெட்டுக்களிலும், கி.பி. 1269 இல் பொறிக்கப்பட்ட கல்வெட்டுக்களிலும் அஞ்சு வண்ணம் என்னும் சொல் கையாளப் பெறுவதால், முஸ்லிம்கள் 10 ஆம் நூற்றாண்டிலிருந்தே தமிழ் நாட்டில் வாழ்ந்துள்ளனர் என்பது சதாசிவப் பண்டாரத்தார் அவர்களின் கருத்து.

**மறைந்து போன இஸ்லாமிய நூல்:**

பல்சந்த மாலை என்பது மறைந்து போன தமிழ் நூல்களில் ஒன்று. இதன் சில பாடல்கள் களவியற்காரிகை உரையாசிரியர்களால், மேற்கோளாகக் காட்டப்பெற்றுள்ளது. இந்நூல் வச்சிர நாட்டு வகுதா புரியில் அரசு புரிந்து வந்த அஞ்சு வண்ணத்தவர் மரபினராகிய ஒரு முஸ்லிம் மன்னனைக் குறித்துப் பாடப்பெற்றதாகும். இந்நூலில் கிடைத்துள்ள 8 கலித்துறை செய்யுள்களில்... கலுழ்பா, வச்ரநாடர் தங்கள் வகுதாபுரி, இயவன ராசன் கலுபதி, அஞ்சுவண்ணத்தவர், வச்சிர நாட்டு இறையாகிய கலபா, சோனகர், யவனர்கள், அல்லா ஆகிய சொல்லாட்சிகள் கிடைக்கின்றன. கலுழ்பாது, கலுபதி, கலுபா ஆகிய சொற்கள் கலீஃபா என்னும் சொல்லின் தமிழ் வடிவங்ளாக இருக்கலாம். வகுதாபுரி என்பது, காயல்பட்டினம் என்பது வையாபுரிப்பிள்ளை அவர்களின் கருத்து, ஆயினும் இது கீழக்கரை என்றும் சிலர் கூறியுள்ளனர்.

இராமதேவர், குலசேகர ஆள்வார் ஆகியோர் மக்கா சென்று இஸ்லாத்தை ஏற்றவர்கள் என்றும் இவர்களின் தன்னலமற்ற சேவையால் இஸ்லாம் தென்னிந்தியாவில் மிக விரைவாகப் பரவியது என்று முஸ்லிம்கள் நம்புகின்றனர்.

**புதிய பதிப்புகள்:**

அண்மையில் புதிய பதிப்புகளாக ஞானப்புகழ்ச்சி (1977), வேத புராணம் (1990), குணம் குடியார் பாடற்கோவை (1990), தொண்டி செய்கு மஸ்தான் சாகிபு திருப்பாடற் திரட்டு (1991), இளையான்குடி கச்சிப்பிள்ளையம்மாள் பாடல்கள், (இளையான்குடி இலக்கியங்கள்-நெல்-1980), மேலப் பாளையம் பசீரொலி பாடல்கள் (மெய்ஞ்ஞான பேரொளி.1984), பீர் முஹம்மது ஒலி திருப்பாடற் தொகுப்பு விளக்கவுரையுடன்-சிங்கப்பூர் வெளியீடு, மெஞ்ஞானச் சிந்து (1990) வெளிவந்துள்ளன. இவ்வகைப் பணிகள் மேலும் தொடரப் பட வேண்டும்.

**சரம்:**

"பீரப்பாவின் திரு மெய்ஞ் ஞானச்சல நூல்" தனி நன்கொடையாக இனிது இலங்குகிறது.

**ஞான ஆனந்த களிப்பு :**

ஞானியர்களின் பேரின்ப ஆனுபவப் பெருக்க ஞான ஆனந்தக் களிப்பாக மிளிர்ந்தன. அவை பதினொன்று ஞான ஆனந்தக்களிப்பாக விளங்குகின்றன.

**அரபுத்தமிழ்:**

கீழக்கரை ஆசியம்மாவின் "மெய்ஞ் ஞான தீப இரத்தினத்" தின் சில பகுதிகள் தமிழாக்கம் பெற்றுள்ளன. (1988) இங்ஙனமாக பல அரபுத்தமிழ் ஞான இலக்கியங்கள் தமிழாக்கம் பெறுதல் இன்றியமையாததாகிறது. சில உருது ஞான நூல்கள் தமிழில் மொழியாக்கம் பெற்றுள்ளன. அரபு, உருது ஞான நூல்கள் தமிழக்கம், மேலும் தேவையாகின்றன.

"கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரை"

கே.ஏ.ஜெஹுபர் உசேன்

(தொடரும்)

# மேற்குலக நாடுகளை போன்று இலங்கையிலும் பொருளாதார சரிவு

## வரவு- செலவு திட்ட அறிக்கை வெறும் அறிக்கை மட்டுமே என்கிறார் திஸ்ஸ



(கொழும்பு)

**நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைய தொடங்கியுள்ளதாக ஐக்கிய தேசிய கட்சி குற்றம் சுமத்தி உள்ளது.வினைத்திறனாக இயங்காத நிறுவனங்களை தேசிய மயப்படுத்தும் அரசாங்கத்தின் திட்டத்தினால் பொருளாதாரம் பின்னடைவுடைகளை எதிர்நோக்கும் என ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.**

இம்முறை வரவு -செலவு திட்டமும் வெறுமனே ஓர் அறிக்கையாகவே கருதப்பட வேண்டும் என அர்த்தமுள்ள திட்டங்கள் எதுவும் நடைமுறைப்படுத்தப்படமாட்டாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 2005 ஆம் ஆண்டின் பின்னர் இந்த நிலைமையை தெளிவாக பார்க்க முடிகின்றது என அவர் தெரிவித்துள்ளார்.இந்த ஆண்டு வரவு -செலவு திட்டத்தின் மூலம் மக்களுக்கு பாரியளவில் நன்மைகள் கிடைக்க வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

சம்பள உயர்வு உள்ளிட்ட பல்வேறு சலுகைகள் வழங்கப்பட வேண்டியது அவசியமானது என்ற போதிலும் கடந்த காலங்களை போன்றே இம்முறையும் மக்களுக்கு நன்மையான வரவு- செலவு திட்டமொன்றை எதிர்பார்க்க முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பொதுநலவாய நாடுகள் விளையாட்டுப் போட்டி ஏற்பாட்டாளர் அந்தஸ்தை பெற்றுக் கொள்வதற்காக அரசாங்கம் செலவிட்ட பணம் மக்களிடமிருந்து அறவிடப்படவுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இந்த செலவீனங்களால் பொது மக்களே அதிகளவில் பாதிக்கப்படுவர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.போட்டி ஏற்பாட்டளர் அந்தஸ்தைப் பெற்றுக் கொள்வதற்காக 400 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளதாக இன்றைய தினம் நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார். (அ-2)

கிரேக்கம் மற்றும் இத்தாலி போன்ற நாடுகளில் இடம்பெற்றதினை போன்று இலங்கையிலும் பாரம்பரிய பொருளாதார நெருக்கடி ஏற்பட வாய்ப்பு இருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

குறித்த நாடுகளின் ஆட்சியாளர்கள் எடுத்த தன்னிச்சை முடிவுகளே பொருளாதார பின்னடைவை எதிர்நோக்க காரணம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இன்று வியாழக்கிழமை ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நாடு திரும்பவுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

ரணில் விக்ரமசிங்க நாடு திரும்பியதன் பின்னர் சொத்துக்களை தேசியமயப்படுத்தும் சட்டத் திற்கு எதிர்ப்பு வெளியிடப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 21 ஆம் திகதி அரசாங்கத்தினால் சமர்ப்பிக்கப்படவுள்ள வரவு- செலவு திட்டம் தொடர்பில் மக்கள் எவ்வித எதிர்பார்ப்பையும் ஏற்படுத்தி கொள்ளவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

# தேவார பண்ணிசை வகுப்பு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஸ்ரீ வீரமாகாளி அம்பாள் ஆலய சிங்கார வேலன் மணி மண்டபத்தில் சிவஸ்ரீ ந.சிவசுப்பிரமணியம் குருக்கள் அறக்கொடை நிலைய ஆதரவுடன் அகில இலங்கை திருமுறை மன்றத்தினால் நடத்தப்பட்டு வந்த தேவாரப் பண்ணிசை வகுப்புக்கள் விடுமுறையின் பின் கடந்த 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மீண்டும் ஆரம்பமாகியுள்ளது.

இப்பயிற்சி வகுப்புக்கள் வாரந்தோறும் செவ்வாய் மற்றும் வெள்ளிக் கிழமைகளில் மாலை 5 மணிக்கு நடைபெறும் எனவும் இவ்வகுப்புக்களில் ஆண், பெண் இருபாலாரும் பங்குபற்றி பயன் பெறலாமெனவும் மன்ற அமைப்பாளர் அறிவித்துள்ளார். (அ)

# நட்டத்தில் இயங்கும் நிறுவன தலைவர்களின் பதவி நீக்கப்படும்

## அரசாங்கம் தகவல்

பொது நிறுவனங்கள் தொடர்பாக ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் ஆய்வுகளுக்கு ஏற்ப நட்டத்தில் இயங்கும் நிறுவனங்களின் தலைமை அதிகாரிகளை பதவி நீக்கம் செய்வதற்கு அரசு முடிவு செய்து இருப்பதாக தெரிய வருகின்றது.

இத் தெரிவுக் குழுவினால் நட்டத்தில் இயங்கும் நிறுவனங்களாக இனங்காணப்பட்ட 115 அரச நிறுவனங்களின் தலைமை அதிகாரிகள் பதவி நீக்கம் செய்யப்பட்ட பின்னரே உத்தேச அமைச்சரவை மாற்றங்களை செய்வதற்கு அரசு முடிவு செய்திருப்பதாக தெரிய வருகின்றது.

இந்த நிறுவனங்கள் நட்டத்தில் இயங்கி வருவதற்கு மேலாக சிலவற்றில் ஊழல்கள் , அரசின் நிதி கொள்கைகளை உதாசீனம் செய்தல் மற்றும் முறைகேடுகள் இடம்பெற்று வருவது தெரிய வந்துள்ளதாக சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை மின்சாரசபை, தேசிய நீர் வழங்கல் மற்றும் கால்வாய் அமைப்பு சபை, இலங்கை போக்குவரத்து சபை என்பனவும் கூட இலாபத்தில் இயங்கவில்லை. ஆனால் இவை பொதுமக்களுக்கு அத்தியாவசிய சேவைகளை வழங்கி வருகின்றன என்றும் அண்மையில் அமைச்சர் பசில் ராஜபக்ஷ நாடாளுமன்றில் குறிப்பிட்டது நினைவு கூரத்தக்கது. (அ-2)

# யானைகளை பாதுகாக்க வனவிலங்கு அமைச்சு திட்டம்

(கொழும்பு)

பல்வேறு பிரச்சினைகளால் பாதிக்கப்படும் யானைகளை பாதுகாப்பதற்கு நான்கு மத்திய நிலையங்களை நிறுவுவதற்கு வனவிலங்கு அமைச்சு திட்டமிட்டுள்ளது.

துப்பாக்கிப் பிரயோகத்திற்கு உட்படுத்தல் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளால் பாதிக்கப்படும் யானைகளை இந்த நிலையங்களில் வைத்துப் பராமரிக்கப்படும் என அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன குறிப்பிட்டார்.

இந்தத் திட்டத்தின் ஊடாக மக்களுக்கும் யானைகளுக்கும் ஏற்படும் பிரச்சினைகளை குறைத்துக் கொள்ள முடியும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

தென் மேல், வட மற்றும் வடமத்திய மாகாணங்களை உள்ளடக்கும் வகையில் இந்த மத்திய நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

இதற்குத் தேவையான நிதி கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் வனவிலங்கு அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன குறிப்பிட்டார். (அ)

# பூங்காவில் நுளம்புப் பெருக்கம் மக்கள் செல்ல முடியாத நிலை

## நடவடிக்கை எடுக்கப்படும் என்கிறார் ரதன்

வவுனியா நகர சபையின் பொதுப் பூங்காவில் நுளம்புகளின் பெருக்கத்தால் பொது மக்கள் செல்லமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

மாலை வேளையில் பொழுதினை கழிப்பதற்காக வவுனியா மக்கள் நகர சபையில் பின்புறமாகவுள்ள பொதுப் பூங்காவிற்கு செல்வது வழக்கம். எனினும் கடந்த சில நாட்களாக நுளம்பு பெருக்கம் ஏற்பட்டுள்ளமையினால் பொதுமக்கள் மாலை வேளையில் பூங்காவிற்குள் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

மழைகாலம் ஆரம்பித்துள்ளமையினால் டெங்கு நோய் தாக்கம் ஏற்பட வாய்ப்புள்ளதாக சுகாதார திணைக்களம் அறிவித்தல் வழங்கி வரும் நிலையில் பூங்காவில் பெருவாரியான நுளம்புகள் காணப்படுவது பல்வேறு நோய்களுக்கான காரணமாக அமைந்து விடும் எனவும் மக்கள் சுட்டிக்காட்டினர்.

இதேவேளை பூங்கா பாரமரிப்பின்றி காணப்படுவதே இதற்கான காரணம் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதுடன் பூங்காவினுள் படம் எடுப்பவர்கள் மற்றும் வீடியோ எடுப்பவர்களிடம் பணம் அறவிடப்படும் நிலையிலும் பூங்கா பராமரிக்கப்படாது காணப்படுகின்றமை கடும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக வவுனியா நகர சபையின் உபதலைவர் தெரிவிக்கையில், கடந்த சில தினங்களுக்கு முன்னர் வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் ஊடாக நடத்தப்பட்ட கண்காட்சியின் காரணமாக நகரசபை மைதானம் மற்றும் பூங்கா என்பன வாகனங்கள் சென்று சேதமடைந் துள்ளன. இவ்விடயகளில் நீர்தேங்கி நின்று நுளம்பு பெருக்கம் ஏற்பட்டுள்ளது.

இன்று வியாழக்கிழமை டெங்கொழிப்பு தொடர்பான பெரியளவிலான சிரமதானப் பணியினை பொதுப் பூங்காவில் செய்யவுள்ளோம்.

அத்துடன் பூங்காவினுள் வாகனங்கள் சென்றமையினால் ஏற்பட்டுள்ள கிடங்குகளை மூடுவது தொடர்பாக தொழில்நுட்ப உத்தியோகத்தரின் உதவியுடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்தார். (அ-2)

# பல்கலை மாணவர்களுக்கான மேலதிக பரீட்சைகள் அடுத்த வருடம் முதல் இரத்து

## உயர்கல்வி அமைச்சு தகவல்

(கொழும்பு)

பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை இணைத்துக் கொள்ளும் போது நடத்தப்படும் மேலதிக பரீட்சைகசள் அடுத்த வருடம் முதல் இரத்து செய்யவுள்ளதாக உயர் கல்வியமைச்சு தெரிவிக்கின்றது.

கலை, தகவல் தொழில்நுட்ப கட்டடவியல் நிர்மாணம் உள்ளிட்ட சில பீடங்களுக்கு மாணவர்களை இணைத்துக் கொள்ளும் போது அவர்களின் திறமைகளை ஆராய்வதற்கு மேலதிக பரீட்சைகள் நடத்தப்படுவதாக அமைச்சின் செயலாளர் கலாநிதி சுனில் ஜயந்த நவரத்ன குறிப்பிட்டுள்ளார்.

அடுத்த வருடம் முதல் மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கு எவ்வித மேலதிக பரீட்சைகளும் நடத்தப்படமாட்டாது என அவர் சுட்டிக்காட்டினார்.

கடந்த வருடம் அதிசிறந்த பெறுபேறுகளை பெற்ற 72 மாணவர்கள் கலை பீடத்திற்கு இணைத்துக் கொள்ளப்படவில்லை என சுனில் ஜயந்த நவரத்ன கூறினார்.

திறமைகளை ஆராய்வதற்காக நடத்தப்படும் மேலதிக பரீட்சையில் அவர்கள் தேர்ச்சி பெற்றிருக்காமை இதற்கு காரணமென அவர் சுட்டிக்காட்டினார்.

கல்வி பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையில் தலா 50 புள்ளிகளை செயன்முறை மற்றும் எழுத்து பரீட்சைமூலம் பெற்றுக் கொள்ளும் வகையிலான பரீட்சைகளை நடத்துவதற்கு பரீட்சைகள் ஆணையாளருடன் கலந்துரையாடி வருவதாக உயர்கல்வி அமைச்சு குறிப்பிடுகின்றது. (அ-2)

# முதலுதவி பரீட்சை


இலங்கை செஞ்சிலுவை சங்க உயர்தர முதலுதவி பரீட்சை எதிர்வரும் மாதம் 3 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

இதற்கான 5 நாட்கள் கருத்தரங்கு எதிர்வரும் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம் 5 நாட்கள் தொடர்ச்சியாக முழுநேரமாக நடைபெறவுள்ளது.

எனவே இவ் முதலுதவி பரீட்சைக்கு அனைவரும் இக்கருத்தரங்கில் பங்குபற்றுமாறு செஞ்சிலுவை சங்க தலைவர் அறிவித்துள்ளார். (அ)

# பொதுமகன் தனது சொந்த மொழியில் பிரச்சினைகளைக் கதைக்க முடியாத நிலை

## அரச அதிபர்களின் இடமாற்றம் குறித்து செல்வம் எம்.பி



(கொழும்பு)

**தமிழ் மக்கள் வாழுகின்ற மன்னார் மாவட்டத்தில் பணியாற்றிய தமிழ் அரச அதிபரை வேறு இடத்திற்கு மாற்றிவிட்டு பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த ஒருவரை அரசாங்க அதிபராக நியமித்துள்ளமை பல்வேறுபட்ட சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது என தமிழ்தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.இவ்விடயம் தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;**

மன்னார் தமிழ், முஸ்லிம் மக்கள் ஒற்றுமையாக வாழும் ஒரு மாவட்டமாக காணப்படுகின்றது.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபராக கடமையாற்றி வந்த என்.வேதநாயகன் அவர்களை இடமாற்றம் செய்துவிட்டு பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த ஒருவர் அரச அதிபராக நியமிக்கப்பட்டுள்ளமை மன்னார் மாவட்ட மக்களை கதிகலங்க வைத்துள்ளதுடன் இச் செயற்பாடு மன்னார் மாவட்டத்தில் மீள் குடியேறியுள்ள மக்களுக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இங்கு தமிழ் பேசுகின்ற அரச அதிபர் கடமையாற்றி வருகின்றமையே இங்குள்ள அதிகாரிகளுக்கும் மக்களுக்கும் குறிப்பாக இடம்பெயர்ந்து மீள்குடியேறிவரும் மக்களுக்கும் சாலச்சிறந்ததாக காணப்படுகின்றது.

சாதாரண குடிமகன் ஒருவருக்கு சிங்கள மொழியோ அல்லது ஆங்கில மொழியோ தெரியாத நிலை உள்ளது.

பெரும்பான்மை இன அரச அதிபர் நியமிக்கப்பட்டுள்ளதால் குறித்த பொதுமகன் தனது மொழியில் தனது பிரச்சினையை கதைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதோடு அரசாங்க அதிபருக்கும் பொது மகனுக்கும் இடையில் இடைத்தரகர்கள் செயற்பட வேண்டிய நிலைமை ஏற்படும்.

இதனால் குறித்த பொதுமகனின் தேவை பூர்த்தியாக்கப்படாமலே காணப்படும் நிலையில் இடைத்தரகர்கள் பலனடைவதற்கான சாத்தியங்கள் காணப்படுகின்றது.

மன்னார் மாவட்டம் தற்போது இலங்கையில் முக்கிய மையமாக திகழ்ந்து வருகின்ற நிலையில் மன்னார் வளைகுடா கடற்பரப்பில் எரிபொருட்கள் கண்டுபிடிப்பு, தலைமன்னாரில் இருந்து இராமேஸ்வரத்திற்கான கடல் போக்குவரத்துச் சேவை, தென்பகுதியில் இருந்து தலைமன்னார் வரையிலான நேரடி ரயில் போக்குவரத்துச் சேவை என்பனவும் இடம் பெறவுள்ளது. இதனால் எமது மாவட்டத்தைச் சேர்ந்த மக்கள் நன்மையடைய வேண்டும்.

ஆனால் பெரும்பான்மையின அரச அதிபர் நியமிக்கப்பட்டுள்ளதன் காரணத்தினால் அச்செயற்பாடும் தலைகீழாக மாறும் நிலை ஏற்பட்டுள்ளதோடு குறித்த செயற்பாட்டுடன் வரக்கூடிய வேலைகள் அனைத்தும் தமிழ் மக்களை விட்டு தென்பகுதி மக்களை சென்றடையக்கூடிய சாத்தியங்கள் ஏற்பட்டுள்ளது.

அத்துடன் மன்னார் மாவட்டத்தில் அத்துமீறிய சிங்களக் குடியேற்றத்திற்கும் புதிய அரச அதிபரின் நியமனம் உந்து சக்தியாக காணப்படுவதாக மக்களும் அதிகாரிகளும் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தை விட்டு இடம்பெயர்ந்த பல குடும்பங்கள் இன்னும் மீள்குடியேற்றப்படாமல் உள்ளனர். அவர்களும் உரிய காலத்தில் மீள்குடியேற்றப்பட வேண்டும். யுத்தத்தின் பின் பல அழிவுகளை சந்தித்த வன்னி மக்கள் மீண்டும் தமது இயல்பு நிலைக்கு அழைத்து வரப்பட வேண்டும். அதற்கு மன்னார் மாவட்டத்தின் தலைமைத்துவம் சரியான முறையில் செயற்பட வேண்டும்.

பெரும்பான்மையின அரசாங்க அதிபர் நியமிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் மன்னார் மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றியுள்ள நகரசபை மற்றும் பிரதேச சபை ஆகியவை ஒன்றிணைந்து இவ்விடயம் தொடர்பில் தீர்மானம் ஒன்றை எடுத்து அது தொடர்பில் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

இதே சமயம் மன்னார் மாவட்ட மக்களிடம் இந்நியமனத்திற்கு எதிராக கையெழுத்து வேட்டை ஒன்றை மேற்கொண்டு ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்றும் அனுப்பப்படவுள்ளது.

எனவே தமிழ் பேசுகின்ற மக்கள் வாழுகின்ற மாவட்டத்திற்கு தமிழ் பேசும் அரச அதிபர் கடமையில் இருந்த போதும் அவரை வேறு இடத்திற்கு மாற்றிவிட்டு பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த ஒருவரை அரசாங்க அதிபராக நியமித்துள்ளமை பல்வேறுபட்ட சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

மீள்குடியேற்றம், அபிவிருத்தி போன்ற வேலைத்திட்டங்களிலும் பல்வேறுபட்ட சந்தேகங்கள் எதிர்வரும் காலங்களில் ஏற்படவுள்ளது.

எனவே மன்னார் மாவட்ட அரசாங்க அதிபராக தமிழ் பேசுகின்ற ஒருவரே நியமிக்கப்பட வேண்டும் எனவும் நியமிக்கும் பட்சத்தில் மட்டுமே மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த மக்கள் தமது தேவைகளை உரிய முறையில் பூர்த்தி செய்து கொள்ள முடியும் என்றார்.

அத்துடன் மன்னார் மாவட்டத்திற்கு உடனடியாக தமிழ் பேசுகின்ற அரசாங்க அதிபர் ஒருவரை நியமிக்குமாறு வேண்டுகோள் விடுத்திருப்பதாக அவரது அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-2)

# ஐ.தே.க உறுப்பினர் செயற்குழு பற்றாக்குறையை நீக்குங்கள்

## சஜித் கோரிக்கை

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுவில் காணப்படும் உறுப்பினர்கள் பற்றாக்குறையை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமைத்துவத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஐக்கியதேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

கட்சியின் ஆலோசனைசபையை உடனடியாக அழைத்து தற்போது நியமிக்கப்படாதுள்ள செயற்குழு உறுப்பினர்களை நியமிப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அவர் அந்தக் கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.

எதிர்வரும் 2012 ஆம் ஆண்டு கட்சியின் யாப்பில் எட்டாம் சரத்தின் முதலாம் பிரிவிற்கமைய அதிகாரிகளை நியமிக்கவுள்ளதாக சஜித் பிரேமதாச அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உரியமுறையில் ஸ்தாபிக்கப்படும் செயற்குழுவின் நடவடிக்கைகள் அத்தியாவசியமானது என ரணில் விக்ரமசிங்கவிற்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய அமைப்பாளரை நியமித்தமை யாப்பிற்கு எதிரான நடவடிக்கை என சுட்டிக் காட்டிய சஜித் பிரேமதாச யாப்பிற்கு எதிராக சில செயற்குழு உறுப்பினர்கள் நியமிக்கப் படாதவாறு நடவடிக்கை எடுக்குமாறு அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ-2)



எமரெல்ட் நிறுவனம் நடத்திய தீபாவளி பரிசுப் போட்டியின் சீட்டிழுப்பு எமரெல்ட் தலைமை அலுவலகத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் நிறைவேற்று இயக்குநர் எம்.எம்.எம்.இஹ்சான், குழு பொதுமுகாமையாளர் முராத் ரஹீம்தீன், சந்தைப்படுத்தல் முகாமையாளர் ரிமாஸ் மர்சூக், மனிதவள முகாமையாளர் நிரோஷ் டி சில்வா, வர்த்தக நாம முகாமையாளர் டானியல் ஜயசுந்தரகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர். இச் சீட்டிழுப்பில் கிண்ணியாவை சேர்ந்த எம்.என்.எம்.சவீர், (வேலணை வடக்கு) சுதாகரன் விமலகேசனி, (கொழும்பு 10) எம்.எஸ்.எம். அஸ்வர் ஆகியோர் வெற்றியாளராக தெரிவு செய்யப்பட்டனர்.

# சட்டவிரோதமாக குடியேறியுள்ள 400 குடும்பங்கள் அகற்றப்படும்

## எரிபொருள் களஞ்சியப் பிரிவு தலைவர்

கொழும்புத் துறைமுகத்திலிருந்து கொலன்னாவ பெற்றோலியக் கூட்டுத்தாபனம் வரையிலான எரிபொருள் விநியோகக் குழாய்கள் உள்ள பிரதேசங்களில் சட்டவிரோதமாக வசிக்கும் 400 குடும்பங்கள் அங்கிருந்து வெளியேற்றப்படவுள்ளதாக எரிபொருள் களஞ்சியப் பிரிவின் தலைவர் மேஜர் ஜெனரல் எம்.ஆர்.டபிள்யூ.டிசொய்சா தெரிவித்துள்ளார்.

இவ்வாறு வெளியேற்றப்படுவோர் வாழ்வதற்கு தற்காலிகமாக வீடுகள் நிர்மாணித்துக் கொடுக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் ஆலோசனையின் பேரிலேயே இத்திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. இதன் முதற்கட்டமாக புளூமெண்டால் மற்றும் மஹவத்த பிரதேசங்களில் எரிபொருள் குழாய்களுக்கு மேலாக நிர்மாணிக்கப்பட்டிருக்கும் 150 வீடுகள் அங்கிருந்து அப்புறப்படுத்தவுள்ளன.

வெளியேற்றப்படுவோருக்கு அருகிலுள்ள மைதானத்தில் தற்காலிகமாக வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படும். 40 வருடங்களுக்கு மேலாக இப்பிரதேசங்களில் சட்டவிரோதமாக வாழும் இம்மக்களுக்கு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் பங்களிப்புடன் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படும்.

அத்தோடு 60 வருடங்களுக்கு பதிலாக பழுதடைந்துள்ள விநியோகக் குழாய்களுக்குப் பதிலாக புதிய குழாய்களைப் பொருத்தும் நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள போதிலும் இச்சட்டவிரோத குடியிருப்பாளர்களால் அதற்கு தடங்கல் ஏற்பட்டுள்ளது.

அண்மையில் இப்பிரதேசத்திலுள்ள பழுதடைந்த குழாய் ஊடாக எரிபொருள் கசிவு ஏற்பட்டது. இது மிகவும் ஆபத்தானதாகும். என்றார். (அ-2)

# தமிழரசுக்கட்சியின் அங்குரார்ப்பண நிகழ்வு

(காரைநகர்)

இலங்கை தமிழரசு கட்சியின் காரைநகர் கிளை அண்மையில் தமிழரசுக் கட்சியின் உபதலைவர் பேராசிரியர் சி.க. சிற்றம்பலம் தலைமையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் காரைநகர் கிளையின் புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெற்றது. காரைநகர் கிளையின் தலைவராக மு.கந்தசாமி, செயலாளராக த.முரளிதரன், பொருளாளராக கா.தவராசா, உபதலைவராக க.ஆறுமுகம், உபசெயலாளராக ச.சண்முகராஜா ஆகியோரும் மேலும் 15 உறுப்பினர்களும் கட்சியால் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்நிகழ்வில் இலங்கை தமிழரசு கட்சியின் யாழ்.மாவட்டத்தலைவர் பொ.கனகசபாபதி, செயலாளர் எஸ்.குலநாயகம், மானிப்பாய் கிளை உபதலைவர் எஸ்.கஜன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

(அ-246)

# கார்த்திகை மாத இராசி பலன்கள்




(அஷ்வினி,பரணி,கார்த்திகை 1- ஆம் பாதம் )

**ஆரோக்கியத்தைப்பற்றியே அதிகம் சிந்திக்கும் மேஷராசி நேயர்களே!**

எப்போதும் புன்சிரிப்புடன் இருப்பவார்கள் நீங்கள். எதைச் செய்தாலும் அதைச் செவ்வனே செய்து பாராட்டுக்களைப் பெற வேண்டும் என்று நினைப்பீர்கள். உலக நன்மைக்காக தங்கள் வாழ்க்கையையே அர்ப்பணித்துக் கொள்ளும் பொதுநல வாதியாகவும் விளங்குவீர்கள். பல வழிகளிலும் உங்களுக்கு பணம் வந்து சேரும். எதிர்ப்புக்களைப் பற்றிக் கவலைப்படாமல் உங்கள் கொள்கைளை எடுத்துரைப்பதில் வல்லவர்கள் நீங்கள்.

உங்களுக்கு இந்தக் கார்த்திகை மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும்போது, ராசிநாதன் செவ்வாய்மீது குருவின் பார்வை பதிவதால், குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். கொள்கைப் பிடிப்புடன் செயற்பட இயலும். எடுத்த காரியத்தை எளிதில் முடித்து வெற்றி காண்பீர்கள். இல்லம் தேடி நல்ல செய்தி வந்து சேரும்.

வியாழன் இதுவரை வக்ர கதியில் சஞ்சரித்து வந்தார். இம் மாதக் கடைசியில் வக்ர நிவர்த்தி ஆவதால், விரையங்கள் சுப விரையங்களாக மாறும் சூழ் நிலை உண்டு. "வரன்கள் வாயில் தேடி வந்தும் விலகிச் செல்கிறதே" என்று மனம் வாடியவர்கள் இனிக் கவலைப்பட வேண்டியதில்லை. திடீரென திருமணப் பேச்சுக்கள் வந்து சேரலாம். பொருத்தம் பார்த்து மண வாழ்க்கையை அமைத்துக் கொண்டால்தான், வருத்தம் இல்லாத வாழ்க்கை அமையும். தொழில் மற்றும் உத்தியோகம் போன்றவற்றில் ஏற்பட்ட சிக்கல்கள் இனி படிப்படியாக மாறும்.

பொதுவாக அஷ்டமத்தில் நான்கு கிரகங்கள் இணைந்து சஞ்சிப்பது அவ்வளவு நல்ல தல்ல. அதிலும் சூரியனுடன் இராகு சேர்க்கை பெற்றிருப்பதால், பிள்ளைகள் வழியில் தொல்லைகள் ஏற்பட்டு அகலும். சொத்து குறித்து எடுத்த முயற்சிகளில் தடை தாமதங்கள் உருவாகலாம். அங்காரக வழிபாட்டை முறையாகச் செய்தால், அதிர்ஷ்ட வாய்ப்புக்களை வரவழைத்துக் கொள்ள இயலும். விரைவில் சனிப் பெயர்ச்சியும் நடைபெற இருப்பதால், எதிர் வரும் சனி எண்ணற்ற மாற்றங்களைக் கொடுக்கும். அவை நல்ல மாற்ற மாக அமையகாக வாகனத்தானை கைகூப்பித் தொழுவது நல்லது.

உங்கள் ராசியில் 2,7- இற்கு அதிபதியான சுக்கரன் 9ஆம் இடத்தில் சஞ்சரிப்பது யோகம் தான். நவம்பர் 23 ஆம் திகதி சுக்கிர பெயர்ச்சி இருக்கிறது இதன் விளைவாக கொடிகட்டிப்பறந்த குடும்பச் சச்சரவுகள் படிப்படியாக நல்ல முடிவுக்கு வரும். ஆடை ஆபரண சேர்க்கை உண்டு. அந்நிய தேசத்தில் இருந்துவரும் தகவல் அனுகூலமாக இருக்கும்.

நவம்பர் 30 ஆந் திகதி துலாம் ராசியில் புதன் வக்ரம் பெறுகிறார். மீண்டும் டிசம்பர் 5 ஆம் திகதி விருச்சிக ராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். இதற்கிடையில் 3, 6 இற்கு அதிபதியான புதனின் வக்ரம் உங்களுக்கு நன்மைகளையே•செய்யும். குறிப்பாக விலகிச் சென்ற உடன் பிறப்புகள் விரும்பி வந்து சேருவர். கடன் சுமை குறையும். வாங்கல், கொடுக்கல்களை ஒழுங்கு செய்து கொள்வீர்கள். வளர்ச்சிப் பாதைக்கு புதிய வழி பிறக்கும்.

உங்கள் ராசிக்கு 9,12 இற்கு அதிபதியான குரு இதுவரை வக்ர இயக்கத்தில் இருந்தார். இம்மாதக் கடைசியில், வக்ர நிவர்த்தியாகிறார். எனவே, தந்தைவழி உறவில் ஏற்பட்ட விரிசல் மறையும். தக்க விதத்தில் பயணங்கள் கைகூடும்.

இம்மாதம் தொட்ட காரியங்கள் வெற்றி பெறும் என்றாலும் இரண்டில் கேது இருப்பதால், ஒருசில காரியங்களை யோசித்து செயவதே நல்லது. உடல் ஆரோக்கியத்தில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டிய சுழ்நிலை உருவாகலாம். உள்ளத்திலும், இல்லத்திலும் அமைதி குறையாமல் இருக்க அம்பிகை வழிபாட்டை மேற் கொள்வது நல்லது. வாகன மாற்றம் செய்ய உகந்த நேரம் இது. கணவன் மனைவிக்குள் மூன்றாவது நபர்களால், தகராறு வராமல் பார்த்துக் கொள்வது நல்லது. முறையாக சர்ப்ப சாந்தி செய்வதன் மூலம் முன்னேற்றங்கள் வந்து சேரும்.

(கார்த்திகை 2,3,4, ஆம் பாதங்கள், ரோகினி, மிருக்சீரிடம் 1,2 பாதங்கள்)

**தன்னலத்தைக் காட்டிலும் பொது நலத்தில ஆர்வம் காட்டும் ரிஷப ராசி நேயர்களே!**

கலையை இரசிப்பவர்கள் நீங்கள். பாராட் டுக்களை அதிகம் விரும்புவீர்கள். பயன் கருதாமல் பணிபுரிவீர்கள். அதன்றால், ஒரு சில சமயங்களில் ஏமாற்றங்களையும் சந்திப்பீர்கள். குடும்பத்தினரையும் நண்பர்களையும் சமமாகவே பாவிப்பீர்கள். மனம் திறந்துபேசி சிக்கல்களைத் தீர்த்துக் கொள்வதில் உங்களுக்கு நிகர் யாரும் இல்லை.

உங்களுக்கு இந்தக் கார்த்திகை மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும்போது ராசிநாதன் சந்திரன் சொந்த வீட்டில் சஞ்சரித்து மாதம் தொடங்குவதால், எதிர்பார்ப்புக்கள் எல்லாம். நிறைவேறும் மாதமாகவே கருதலாம். சொல்லைச் செயலாக்கிக் காட்வீர்கள். துணிவும் தன்னம்பிக்கையும் கூடும். வக்ர வியாழன் உங்களுக்கு வளர்ச்சியையே கொடுக்கும் என்றாலும் தன வரவில் தடைகளை உருவாக்கலாம். ஆனால், இம்மாதக் கடைசியில் குருவக்ர நிவர்த்தி ஆவதால் இனி கொஞ்சம் கூடுதல் கவனம் செலுத்த வேண்டிய சூழ்நிலை உருவாகலாம்.

ஆரோக்கியத்திலும் அடிக்கடி அச்சுறுத்தல் ஏற்பட்டு அகலும். அடுத்தவர் நலன் கருதி எடுத்த முயற்சிகளில் தாமதம் ஏற்படும். ராசிக்கு 7-ல் கூட்டுக் கிரக யோகம் செயற்படுகிறது. எனவே முதல் ஆறு நாட்களில் எதிர்பாராத தொகையொன்று வந்து சேரலாம். அதன் பிறகு டிசம்பர் 5-ல் இருந்து 14 ஆம் திகதி வரை காரியங்கள் துரிதமாக நடைபெறும். மற்ற நாட்களில் நவக்கிரக வழிபாட்டை முழுமையாகச் செய்வது நல்லது. அது மட்டு மல்ல ஜென்ம கேது வலுவாக இருப்பதால், விநாயகர் வழிபாட்டையும் முறையாகச் செய்வது நல்லது. பயணங்கள் அதிகரிக்கும். பக்குவமாய்ப் பேசி பக்கபல மாக இருந்த ஒரு சிலர் உங்களை விட்டுவிலகலாம். சிக்கல்கள் ஏற்படும் பொழுதெல்லாம நீங்கள் சிந்தித்துச் செயற்படுவது நல்லது. சனிப்பெயர்ச்சி வரை குழந்தைகளாலும் சில தொல்லைகள் ஏற்பட்டு அகலும். நவம்பர் 23 ஆந்திகதி தனுசு ராசியில் சுக்கிரன் சஞ்சரிக்கப் போகிறார். 6க்கு அதிபதி 8இல் சஞ்சரிக்கும் போது விபரீத ராஜயோகம் செயற்படும் என்பதால், திட்டமிடாது செய்யும் காரியங்கள் வெற்றிபெறும். திறமை மிக்கவர்கள் உங்களுக்கு பின்னணியாக இருந்து ஓரிரு செயல்களை முடித்துக் கொடுப்பர். பெண்வழி சிக்கல்கள் நல்ல முடிவுக்கு வரும்.

தன-பஞ்சமாதிபதி புதன் நவம்பர் 30 ஆம் திகதி முதல் வக்ரம் பெறுகிறார். இது அவ்வளவு நல்லதல்ல. பணத் தேவைகள் அதிகரிக்கும். ஒரு சிலருக்கு கடன் வாங்கும் சூழ்நிலை உருவாகலாம். வியாபார விரோதங்களை வளர்த்துக் கொள்ளாமல் இருப்பது நல்லது கூட்டு முயற்சிகள் வெற்றி பெறும். டிசம்பர் 5 ஆந்திகதி புதன் வக்ர நிவர்த்தி ஆவதால், அதன் பிறகு மாமன், மைத்துனர் வழி ஒத்துழைப்புக்கள் எதிர்பார்த்தபடி அமையும்.

## சிவல்புரி சிங்காரம்

உங்கள் ராசியை பொறுத்த வரை ராசிநாதன் சுக்கிரனுக்கு குரு, பகைக் கிரகமாகும். எனவே அது வக்ர நிவர்தியான பிறகு எதையும் யோசித்து செய்வதுதான் நல்லது. பாடுபட்டதற்கு ஏற்ற பலன் கிடைக்குமா என்பது சந்தேகம்தான்.

பயணங்கள் அதிகரிக்கும் பக்குவமாகப் பேசி காரியங்களை சாதித்துக் கொள்வது உங்கள் புத்திசாலித்தனமாகும். பொதுநலத்தில் ஈடுபட்டு இருப்பவர்களுக்குப் புதிய பொறுப்புகள்வந்து சேரும். கணவன் மனைவிக்குள் கனிவு கூடும். சொத்துக்கள், இடங்கள் வாங்கப் போட்ட திட்டங்கள் நிறைவேறும். குடும்ப உறுப்பினர்கள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்ளும் மாதம் இது. இருந்தாலும் இராகு வழிபாடு உங்கள் சோகம் போக்கும்.




(வளரும்)

# 2012 இல் தேசிய வைத்தியசாலைகளுக்கு கண் சிகிச்சை குழுவினர் ஈடுபடுத்தப்படுவர்

## சுகாதார அமைச்சர் தகவல்

(கொழும்பு)

கண்ணில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு சிகிச்சை பெறும் நோயாளர்களில் 90 வீதமானவர்கள் உரிய முறையில் சிகிச்சைகளை பெற்றுக் கொள்வதற்கு மீண்டும் வருவதில்லை என சுகாதார அமைச்சு தெரிவிக்கின்றது.

அவ்வாறான நோயாளர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக தேசிய கண் வைத்தியசாலையில் 2012 ஆம் ஆண்டு முதல் வைத்தியர்கள் குழுவொன்றை ஈடுபடுத்தவுள்ளதாக அமைச்சு குறிப்பிடுகின்றது.

கண்நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் வருடமொருமுறை கண் பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டும் என சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டுகின்றது.

நோயாளர்களுக்கு நினைவூட்டும் முகமாக அவர்களது பிறந்த தினத்தன்று வாழ்த்துச் செய்தி அனுப்பி வைக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறு அனுப்பப்படும் வாழ்த்துச் செய்தியில் நோயாளர்கள் கண் பரிசோதனையை மேற்கொள்ளும் திகதி மற்றும் நேரத்தை குறிப்பிட்டு அனுப்ப சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. (அ-2)

# பரிசோதனைக்காகவே உடல் பாகம் அகற்றப்பட்டது

## குவைத் அதிகாரிகள் தகவல்

குவைத்தில் உயிரிழந்த இலங்கைப் பணிப்பெண்ணினுடைய சடலத்தின் பாகங்கள் மேலதிகப் பரிசோதனைகளுக்காகவே அகற்றப்பட்டதாக அந்த நாட்டு அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

குறித்த பெண்ணினுடைய பாகங்கள் அகற்றப்பட்டமை தொடர்பில் அந்த நாட்டு அதிகாரி தெரிவிக்கையில், இந்த விடயம் உறுதிப்படுத்தப்பட்டதாக குவைத்துக்கான இலங்கைத் தூதுவர் சீ.ஏ.ஏ.எம். விஜேரத்ன குறிப்பிட்டுள்ளார்.

இந்த மரணம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை மேற்கொள்ளு மாறு குவைத்தின் சட்ட வைத்திய அதிகாரி ஒருவர் உத்தரவிட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

குறித்த பணிப்பெண்ணின் மரணம் தொடர்பான எழுந்த சந்தேகத்தினால் சடலம் நீர்கொழும்பு வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு பிரேத பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டதாக அவரது குடும்ப உறுப்பினர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இதன்போது சடலத்திலிருந்து சில பாகங்கள் அகற்றப்பட்டிருந்தமை தெரியவந்தது. சுமார் ஒன்றரை வருடங்களுக்கு முன்னதாக வீட்டுப்பணிப்பெண்ணாக குவைத்தில் தொழிலுக்காக சென்ற கெக்கிராவ பகுதியைச் சேர்ந்த 28 வயதான பெண்ணே இவ்வாறு உயிரிழந்தவராவார். (அ-2)

# கோப் அறிக்கை டிசெம்பர் மாதம் பாராளுமன்றில்

## டி.யூ.குணசேகர தெரிவிப்பு

அரசாங்க நிறுவனங்களின் நிதி நிலைமைகள் மற்றும் நடவடிக்கைகள் பொதுமுயற்சியாண்மை தொடர்பான பாராளுமன்றத் தெரிவுக் குழு அறிக்கை எதிர் வரும் டிசெம்பர் மாதம் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. அரசாங்க நிறுவனங்களின் நிதி நிலைமைகள் மற்றும் நடவடிக்கைகள் குறித்து இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

டிசெம்பர் மாதம் முதல் வாரத்தில் அறிக்கையை சமர்ப்பிக்க எதிர்பார்ப்பதாக குழுவின் தலைவர் டியூ.குணசேகர தெரிவித்துள்ளார்.

இறுதி அறிக்கையை தயாரிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக குறிப்பிட்டுள்ளார். நிறுவனங்களின் செயற்பாடுகள் நிர்வாகம் மற்றும் நிதி நிலைமை உள்ளிட்ட பல்வேறு விடயங்களை உள்ளடக்கி அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

249அரசாங்க நிறுவனங்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்பட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. பெருமளவிலான அரசாங்க நிறுவனங்களின் ஊழல் மோசடிகள் இடம்பெற்றுள்ளதாக அமைச்சர் குணசேகர அண்மையில் குறிப்பிட்டிருந்தார். (அ)

# சிற்றுண்டி வாங்கிக் கொடுத்தும் வாய்ப்பை இழந்தது அரசாங்கம்

## திஸ்ஸ கிண்டல்

2018ஆம் ஆண்டு பொதுநலவாய விளையாட்டுப்போட்டியை நடத்தும் வாய்ப்புப்பெறவென சென் கீட்ஸில்நடைபெற்றநிகழ்வில் வெளிநாட்டுப் பிரஜைகளுக்கு உணவு, பானம் வாங்கிக் கொடுத்தும் வாக்குகளைப் பெற இலங்கைப் பிரதிநிதிகள் முயற்சித்ததாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

ஆனால் இலங்கைப் பிரதிநிதிகளின் அந்த முயற்சி தோல்வியில் முடிந்ததாக கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொதுநலவாய போட்டிகளுக்கு என இலங்கை அரசு செலவிடத் திட்டமிட்ட நிதிமூலம் இலங்கையில் 8 அதிவேக வீதிகளை அமைக்க முடியும் என திஸ்ஸ சுட்டிக்காட்டினார்.

நட்டமடைந்த தனியார் நிறுவனங்களை சுவீகரிக்கும் சட்டத்தால் பங்குச் சந்தையில் பாரிய சரிவு ஏற்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

வெளிநாடு சென்றுள்ள கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நாடு திரும்பியதும் இச்சட்டத்திற்கு எதிராக பாரிய ஆர்ப்பாட்டமொன்றை நடத்தவுள்ளதாக திஸ்ஸ அத்தநாயக்க குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# 2011.11 17 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 1292-ஜோன் பலியல் ஸ்கொட்லாந்தின் அரசன் ஆனான்.

★ 1511-ஸ்பெயின் மற்றும் இங்கிலாந்து ஆகியன பிரான்சுக்கு எதிராக அணி திரண்டன.

★ 1558-இங்கிலாந்தின் முதலாம் மேரி இறக்க அவரது ஒன்றுவிட்ட சகோதரி முதலாம் எலிசபெத் அரசியானார்.

★ 1796-பிரெஞ்சுப் படைகள் ஆஸ்திரியர்களை இத்தாலியில் ஆர்க்கோல் என்ற இடத்தில் தோற்கடித்தன.

★ 1820-கப்டன் நத்தானியல் பால்மர் அண்டார்ட்டிக்காவை அடைந்த முதலாவது அமெரிக்கர் ஆனார். பால்மர் குடாநாட்டுக்கு இவரது நினைவாகப் பெயர் சூட்டப்பட்டது.

★ 1831-எக்குவாடோர் மற்றும் வெனிசுவேலா ஆகியன கொலம்பியாவில் இருந்து பிரிந்தன.

★ 1869-எகிப்தில் சூயஸ் கால்வாய் திறக்கப்பட்டது.

★ 1873-பெஸ்ட் பூடா மற்றும் ஒபுடா ஆகிய நகரங்கள் இணைக்கப்பட்ட புடாபெஸ்ட் நகரம் ஹங்கேரியின் தலைநகராக்கப்பட்டது.

★ 1878-இத்தாலியின் முதலாம் உம்பேர்ட்டோ மீதான முதலாவது கொலை முயற்சி இடம்பெற்றது.

★ 1903-ரஷ்யாவின் சமூக சனநாயக தொழிற்கட்சி போல்ஷெவிக் (பெரும்பான்மை), மேன்ஷெவிக் (சிறுபான்மை) என இரண்டாகப் பிளவுண்டது.

★ 1918-யாழ்ப்பாணத்தில் சூறாவளி மற்றும் வெள்ளம் காரணமாக பலத்த சேதம் ஏற்பட்டது. நூற்றுக் கணக்கானோர் வீடுகளை இழந்தனர். நிவாரண நிதியம் அமைக்கப்பட்டது.

★ 1922-முன்னாள் ஒட்டோமான் பேரரசின் சுல்தான் ஆறாம் மெஹ்மெட் இத்தாலிக்கு நாடு கடத்தப்பட்டான்.

★ 1933-ஐக்கிய அமெரிக்கா சோவியத் ஒன்றியத்தை அங்கீகரித்தது.

★ 1939-செக் நாட்டில் நாசி எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை அடுத்து 9 மாணவர்கள் தூக்கிலிடப்பட்டனர். ஆயிரத்துக்கும் அதிகமானோர் வதை முகாம்களுக்கு அனுப்பப்பட்டனர்.

★ 1950-14 ஆவது தலாய்லாமா டென்சின் கியாட்சோ தனது 15 ஆவது வயதில் திபெத்தின் அரசுத் தலைவரானார்.

★ 1968-அலெக்சாண்ட்ரொஸ் பனகோலிஸ் என்பவருக்கு கிரேக்க சர்வாதிகாரி ஜோர்ஜ் பப்படொபவுலொசைக் கொலை செய்ய முயற்சித்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

★ 1970-வியட்நாம் போர்: மைலாய் படுகொலைகள் தொடர்பாக அமெரிக்காவின் லெப்டினண்ட் வில்லியம் கலி விசாரணைக்குட்படுத்தப்பட்டார்.

★ 1970-சோவியத்தின் லூனாக்கொட் 1 சந்திரனில் தரையிறங்கியது. தொலைவில் இருந்து இயக்கக் கூடிய ரோபோ ஒன்று வேறோர் உலகத்துக்கு அனுப்பப்பட்டது இதுவே முதற் தடவை ஆகும்.

★ 1970-டக்ளஸ் ஏங்கெல்பேர்ட் முதலாவது கணனி Mouse க்கான காப்புரிமம் பெற்றார்.

★ 1989-பனிப்போர்: செக்கோசிலவாக்கியாவில் இடம்பெற்ற மாணவர் போராட்டம் கலகம் அடக்கும் பொலிஸ்துறையினரால் நசுக்கப்பட்டது. ஆனாலும் இந்நிகழ்வு பின்னர் டிசெம்பர் 29 இல் கம்யூனிச அரசைக் கவிழ்க்க ஆரம்பமாக அமைந்தது.

★ 2003-ஆர்னோல்ட் ஸ்வார்செனேகர் கலிபோர்னியாவின் ஆளுநரானார்.

**பிறப்புக்கள்**

★ 1904-இசாமு நொகுச்சி சிற்பக் கலைஞரும் கட்டடக் கலைஞரும் (இ.1988)


★ 1909-சி.இலக்குவனார், தமிழறிஞர் (இ.1973)

★ 1920-ஜெமினி கணேசன், தமிழ்த் திரைப்பட நடிகர் . (இ.2005)

★ 1920-கமில் சுவெலபில் செக், நாட்டுத் தமிழறிஞர் (இ.2009)


**இறப்பு**

★ 1558-இங்கிலாந்தின் அரசி முதலாம் மேரி (பி.1516)




★ அனைத்துலக மாணவர் தினம்.

# அக்னி 4 அதிநவீன ஏவுகணை வெற்றிகரமாக சோதனை



அக்னி 4 அதிநவீன ஏவுகணை ஒரிசா மாநிலத்தில் நேற்று முன்தினம் வெற்றிகரமாக சோதனை செய்யப்பட்டது. இந்திய இராணுவ விஞ்ஞானிகள் அக்னி ரக ஏவுகணை தயாரித் துள்ளனர்.

அக்னி 1, அக்னி 2, அக்னி 3 ரக ஏவுகணைகள் சோதனை முடிந்து இராணுவத்தில் சேர்க்கப்பட்டன. இதை தொடர்ந்து அக்னி 2 பிரைம் என்ற பெயரில் அதிநவீன ஏவுகணையை இராணுவ ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவன விஞ்ஞானிகள் தயாரித்தனர்.

இந்த ஏவுகணை 3 ஆயிரம் கி.மீ தூரம் பறந்து சென்று இலக்கை தாக்கக்கூடியது. இந்த ஏவுகணையில் ஒரு தொன் எடை கொண்ட அணு குண்டுகளையும் பொருத்தலாம். கடந்த ஆண்டு டிசம்பரில் இந்த ஏவுகணை சோதனை செய்யப்பட்டபோது அது தோல்வியில் முடிந்தது.

ஏவிய சில விநாடிகளில் கடலுக்குள் பாய்ந்தது. இந்த நிலையில், 20 மீற்றர் நீளமுள்ள இந்த ஏவுகணையின் பெயர் அக்னி 4 என்று மாற்றப்பட்டுள்ளதாக விஞ்ஞானிகள் அறிவித்தனர்.

ஒரிசா மாநிலம் உள்ள பாலசோரில் இருந்து 100 கி.மீ தூரத்தில் உள்ள வீலர் தீவில் இருக்கும் ஏவுகணை சோதனை தளத்தில் இருந்து அக்னி 4 ஏவுகணை ஏவப்பட்டது. இது குறிப்பிட்ட தூரம் பறந்து சென்று இலக்கை சரியாக தாக்கியது. இதையடுத்து, ஏவுகணை சோதனை வெற்றிகரமாக நடந்ததாக விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

இது பற்றி விஞ்ஞானி ஒருவர் கூறுகையில், அக்னி 2 ரக ஏவுகணைகள் 2 ஆயிரம் கி.மீ தூரமும், அக்னி 3 ஏவுகணைகள் 3 ஆயிரத்து 500 கி.மீ தூரமும் பறந்து செல்லக்கூடியவை.

இடைப்பட்ட தூரத்தில் உள்ள இலக்குகளை தாக்குவதற்காக அக்னி 4 ரக ஏவுகணை பயன்படுத்தப்படும். இலக்கை குறி தவறாமல் தாக்கி அழிக்க வசதியாக நவீன கருவிகள் இந்த ஏவுகணையில் பொருத்தப்பட்டுள்ளன என்றார்.

(அ-2)

# கஞ்சாவுடன் தேரர் கைது

கஞ்சா விற்பனையில் ஈடுபட்டிருந்த பௌத்த தேரர் ஒருவர் கொடவெஹர பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

கொடவெஹர, யகடபத்த பிரதேசத்தில் குறிப்பிட்ட இந்த தேரர் மூன்று கிலோகிராம் கஞ்சாவுடனேயே கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் பண்டுவஸ்நுவர விகாரையைச் சேர்ந்த தேரராவார்.

இவரிடமிருந்து, கைப்பற்றப்பட்ட கஞ்சாவின் பெறுமதி ஒரு இலட்சத்து 60 ஆயிரம் ரூபா என கணிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டுள்ள இந்தத் தேரர் நிக்கரவெட்டிய நீதிவான் முன் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

(அ-2)

# அரசசார்பற்ற 10 நிறுவனங்களுக்கு 28 மில்லியன் டொலர் வழங்கப்பட்டது

## நோர்வே அதிகாரிகள் தெரிவிப்பு

(கொழும்பு)

போர் நிறுத்த உடன்படிக்கை காலத்தில் சமாதான செயற்பாடுகளுக்காக நோர்வே அரசாங்கம் 10 அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு 28 மில்லியன் டொலர்களை வழங்கியுள்ளதாக அந்த நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இலங்கையில் போர் நிறுத்த உடன்படிக்கை ஏன் தோல்வியடைந்தது என ஆராய்ந்து நோர்வே வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நோர்வே வழங்கிய பணத்தில் அதிகளவான பணம் குமார் ரூபசிங்கவின் பவுண்டேஷன் ஒப் நோ என்ஷிஸ்டஸ் நிறுவனத்திற்கே வழங்கப்பட்டுள்ளது.

இதனைத் தவிர தேசிய போர் எதிர்ப்பு முன்னணி, தேசிய சமாதான பேரவை, மாற்றுக் கொள்கைகளுக்கான மத்திய நிலையம், மக்கள் சமாதான முன்னணி, தமிழர் புனர்வாழ்வு கழகம், சேவாலங்கா, சர்வோதயா மற்றும் முன்னாள் அமைச்சர் மிலியந்த மொரகொடவின் மொரகொட நிதியம் ஆகியவற்றுக்கு நோர்வே நிதியுதவிகளை வழங்கியுள்ளது.

அத்துடன் இலங்கையின் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காக 9 வெளிநாட்டு அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு நோர்வே அரசாங்கம் 112 மில்லியன் டொலர்களை வழங்கியுள்ளது.

(அ-2)

# பணியில் நீடிப்பது குறித்து வைத்திய அதிகாரிகள் இன்று தீர்மானிப்பர்

## வைத்திய அதிகாரிகள் சங்கம் தகவல்

(கொழும்பு)

வைத்திய துறையில் தமது பணியை மேலும் தொடர்வதா? இல்லையா? என்பது தொடர்பில் இன்றைய தினம் தீர்மானிக்கப்படும் என இலங்கை அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பில் இன்றைய தினம் கூடவுள்ள சங்கத்தின் மத்திய செயற்குழு கூட்டத்தில் தீர்மானிக்கப்படும் என சங்கத்தின் செயலாளர் சந்திக எபிடகட்டுவ தெரிவித்துள்ளார்.

வைத்திய கொடுப்பனவு சட்ட மூலத்தின் படி வைத்தியர் ஒருவர் சேவையில் இணைத்துக் கொள்ளப்படும் போது, வழங்கப்படும் சலுகைகள் இல்லாமல் செய்யப்படுவதற்கு எதிராக ஏனைய தொழிற் சங்கங்களை இணைத்துக் கொள்வதற்கும் மத்திய செயற்குழு கூட்டத்தில் தீர்மானிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

(உ-2)

KALAIMAGAL International College

NOTHING IS IMPOSSIBLE

இலங்கை கல்வித்துறையில் சிறந்த பெறுபேறுகளை ஈட்டிக்கொள்ளும் மாணவர்கள் செறிந்து வாழும் வட பகுதியில் சர்வதேச மொழியான ஆங்கிலத்தின் புலமை சுமார் 25 வருடங்களாகத் தொலைக்கப்பட்ட அல்லது அக்கறை கொள்ளாத ஒன்றாகவே காணப்படுகின்றது.



(அ-4983)

இன்றைய உலகமயமாக்கலில் ஆங்கில அறிவு மிக மிக இன்றியமையாததாகக் காணப்படுவதனால் ஆங்கில மொழி மூலக் கல்வியின் அவசியம் காலத்தின் கட்டாயமாகும். இதனைக் கருத்திற்கொண்டு எமது கல்லூரி வட பகுதியில் ஆங்கிலமொழி மூலக் கல்வியை உள்வாங்கும் பொருட்டு பல இடங்களில் தனது கிளைகளை நிறுவியுள்ளது. எமது கலைமகள் சர்வதேச கல்லூரியின் சிறப்பான செயற்றிட்டங்கள் வருமாறு:

- பாலர் வகுப்பு முதல் க.பொ.த. (உ/த) வரை கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ள இலங்கை கல்வித் திணைக்களத்திலும் பரீட்சைத் திணைக்களத்திலும் உரிய முறையில் பதிவு செய்யப்பட்ட முழுநேர தனியார் பாடசாலை (English Medium)
- சிறந்த ஆங்கில மொழி மூலம் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள்.
- சர்வதேச தரம் வாய்ந்த வகுப்பறை வடிவமைப்பு
- பிரத்தியேக சீருடை
- சாதாரண மக்கள் முகம்கொடுக்கக்கூடிய மிகக் குறைந்த அளவு கட்டண வசதி
- தமிழ், சமயம் ஆகிய பாடங்கள் தமிழ்மொழி மூலமும் ஏனைய அனைத்துப் பாடங்களும் ஆங்கில மொழிமூலம் சிங்களம் விருப்பத்துக்குரிய பாடமாகவும் கற்பிக்கும் கல்விக் கொள்கை.
- அரச பாடசாலைகளின் நேரசூசி அமைப்பு.
- விளையாட்டு, கலை, கலாசாரம் நிகழ்வுகளை கல்விசார் செயற்பாடுகளாக உள்வாங்கும் கல்விக்கொள்கை.
- மாணவர்களை உற்சாகப்படுத்தும் வருடாந்த பரிசளிப்பும், கலைவிழாக்களும்.

மேற்குறிப்பிட்ட சிறந்த செயற்பாடுகளுடன் இயங்கும் எமது கல்லூரியின் 2012 ஆம் ஆண்டுக்கான அனைத்து வகுப்புகளுக்குமான விண்ணப்பங்கள் நவம்பர் மாதம் 30ஆம் திகதிக்கு முன் சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது.

மேலதிக விபரங்களுக்கு எமது தலைமைக் காரியாலயத்தில்.தொடர்பு கொள்ளவும்:

KALAIMAGAL International College

CHURCH LANE, KOKUVIL EAST, KOKUVIL.

T.P.:021 4923235, 0778834592, 0774904286, 0776548283

NOTHING IS IMPOSSIBLE

# இந்தியாவுக்கு யுரேனியத்தை ஏற்றுமதி செய்ய அவுஸ்திரேலியா முன்வந்துள்ளது



(மெல்பேர்ன்)

இந்தியாவுக்கு யுரேனியத்தை ஏற்றுமதி செய்ய அவுஸ்திரேலியா முன்வந்துள்ளது. அணு ஆயுத பரவல் தடை ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திடாததால் இந்தியாவுக்கு யுரேனியத்தை ஏற்றுமதி செய்ய அவுஸ்திரேலியாவில் தடை உள்ளது. இந்நிலையில் இந்தத் தடையை விலக்கிக்கொள்ள வேண்டிய காலம் வந்து விட்டதாக அவுஸ்திரேலியப் பிரதமர் ஜுலியா கில்லார்ட் கருத்துத் தெரிவித்துள்ளார்.

அவர் தி ஏஜ் நாளிதழில் நேற்று முன்தினம் எழுதியுள்ள கட்டுரையொன்றில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு,

தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ள வேண்டிய தருணம் அவுஸ்திரேலிய தொழிலாளர் கட்சிக்கு வந்துவிட்டது. இந்தியாவுக்கு யுரேனியம் விற்பது அவுஸ்திரேலியாவுக்கு இலாபகரமானது. இந்தியாவுக்கு யுரேனியத்தை ஏற்றுமதி செய்வதற்கு இருக்கும் தடையை நீக்குமாறு அடுத்த மாதம் கூடவுள்ள கட்சியின் தேசியக் கூட்டத்தில் கட்சி உறுப்பினர்களை வற்புறுத்துவேன்.

உலகின் நான்காவது பெரிய ஏற்றுமதிச் சந்தை இந்தியாதான். உலகில் யுரேனியத்தை அதிக அளவில் ஏற்றுமதி செய்து வரும் 3 ஆவது பெரிய நாடு அவுஸ்திரேலியா யுரேனிய ஏற்றுமதி மூலம் சுமார் ரூ.80 ஆயிரம் கோடி அவுஸ்திரேலியாவுக்குக் கிடைக்கும். அத்துடன் 4ஆயிரத்து200 வேலை வாய்ப்புக்களும் உருவாகும். யுரேனியத்தை ஏற்றுமதி செய்யும் நாடுகளில் நாங்கள் முக்கியமானவர்கள். எனவே இந்திய யுரேனிய சந்தையைப் பிடிப்பது எங்களுக்கு சாதகமானதுதான்.

இந்தியா வளமான நாடாக மாறுவதால் எங்களுக்கு நன்மைதான். இந்தியா வளரவும் கோடிக்கணக்கானவர்களை வறுமையிலிருந்து வெளியே கொண்டுவரவும் மின்சக்தி. மிக அவசியம். இப்போதுள்ள 3 சதவீத மின் உற்பத்தியை எதிர்வரும் 2050 இற்குள் 40 சதவீதமாக அதிகரிக்க இந்தியா திட்டமிட்டுள்ளது. திறன்பெற்ற ஜனநாயக இந்தியாவுடன் நல்லுறவு பேணும் விதத்தில் தொழிலாளர் கட்சி தன் மனோபாவத்தை மாற்றிக் கொள்ள வேண்டும்.

பாகிஸ்தான், இஸ்ரேல் போல் இந்தியா இருந்ததில்லை. அணு ஆயுத விடயத்தில் இந்தியா சுயகட்டுப்பாட்டுடன் நடந்து வந்துள்ளது. உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடு இந்தியா. ஆண்டுதோறும் 8 சதவீத வளர்ச்சி விகிதத்தை தக்கவைத்துக் கொண்டுள்ளது. சிறந்த பாரம்பரியம் கொண்ட நாடு இந்தியா. எனவே அந்நாட்டை ஒரு வித்தியாசமான நாடாக நாங்கள் பார்க்கின்றோம். இந்தியாவின் சவால்கள், வாய்ப்புக்கள் குறித்து நாம் புரிந்து கொள்ள வேண்டும். ஆய்வு செய்ய வேண்டும்.

யுரேனிய ஏற்றுமதிக்கான தடையை நீக்குவது என்பது இரு நாடுகளுக்கு இடையேயான உறவில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் குறிக்கின்றது. வலுவான பொருளாதார வளர்ச்சியில் பங்கு வகிக்கக் கூடிய ஆசியாவின் எழுச்சிபெற்று வரும் சக்தி இந்தியா என்று அவர் எழுதியுள்ளார்.

### கிருஷ்ணா வரவேற்பு

அவுஸ்திரேலியப் பிரதமரின் இந்த முடிவை வரவேற்றுள்ள இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா பெங்களூரில் செய்தியாளர்களிடம் கூறியதாவது, அவுஸ்திரேலியாவுடனான உறவுக்கு இந்தியா மிகுந்த முக்கியத்துவம் தருகின்றது. அவுஸ்திரேலிய தொழிலாளர் கட்சியின் கொள்கைகளில் மாற்றம் தேவை என்று ஜுலியா கில்லார்ட் வலியுறுத்தியுள்ளதை வரவேற்கின்றோம். நமது மின் தேவைகளை அங்கீகரித்து இந்தியாவுக்கு யுரேனியத்தை விற்கலாம் என்று கூறியதை அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# சீனா- இந்தியா இடையே பதற்றம் நில்வுகின்றது

சீனாவுடனான இந்திய எல்லையில் ஒரு இலட்சம் படை வீரர்களை நிறுத்தும் இந்தியாவின் முடிவு இரு நாடுகளிடையே பதற்றத்தை ஏற்படுத்தும் செயல் என சீனா தெரிவித்துள்ளது.

இந்திய எல்லையில் சீனா உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி வருவதால் அதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் இந்தியாவும் சீனாவுடனான எல்லையில் வீதி மேம்பாடு உள்ளிட்ட கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி வருகிறது. இந்தியாவின் இந்த செயலுக்கு சீனா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. (அ-2)

# ஆட்குறைப்பில் ஈடுபட முனையும் பிரிட்டன்

## இந்தியர்கள் பணியிழக்கும் அபாயம்

(லண்டன்)

இங்கிலாந்து பிரதமர் டேவிட் கமரூன் தலைமையிலான அரசு அதிரடி ஆட்குறைப்பில் ஈடுபடவுள்ளதாக அறிவித்துள்ளது. இந்தியா மற்றும் ஐரோப்பிய யூனியனை சேராத நாடுகளிலிருந்து பணி தொடர்பாக இங்கிலாந்திற்கு வந்த வண்ணம் உள்ளனர்.

இந்நிலையில் இங்கிலாந்தின் இந்த அறிவிப்பின் மூலம் சுமார் 40 ஆயிரம் பேர் பணியிழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதால் இந்தியர்கள் உள்ளிட்டோர் பெரும் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

இங்கிலாந்து அரசின் குடியேற்றத்துறை ஆலோசனை குழு பணியாளர் குறைப்பை எந்தெந்த துறைகளில் எல்லாம் மேற்கொள்ளலாம் என்பதன் விபரத்தை பிரதமர் டேவிட் கமரூன் பார்வைக்கு வைத்தது. இந்த பரிந்துரைக்கு பிரதமர் கமரூனும் ஒப்புதல் அளித்துள்ளார்.

அதன்படி இந்த பணியாளர் குறைப்பு பட்டியலில் மருந்தாளர்கள் கால்நடை மருத்துவர்கள் பேச்சு மற்றும் மொழி தெரபிஸ்ட்கள், மேல்நிலைக் கல்வி உயிரியல் ஆசிரியர்கள், ஆர்தோப்டிஸ்ட்கள், இசை வல்லுநர்கள் உள்ளிட்ட துறைகள் இடம்பெற்றுள்ளன.

காப்புறுதி மற்றும் நிதி சம்பந்தமான நுணுக்கம் பெற்றவர்கள் மற்றும் பைப் வெல்டர்கள் இந்த பட்டியலில் சேர்க்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மருத்துவம், பொறியியல், விஞ்ஞானம் என பல பிரிவுகளில் சிறந்து விளங்கும் நம் நாட்டவர்களுக்கு இங்கிலாந்தின் இந்த அறிவிப்பு பேரிடியாக அமைந்துள்ளது.

(அ-2)

# புதுமையான கண்டுபிடிப்புக்கள் வசதி படைத்தோருக்கே உதவுகின்றது

புதுமையான கண்டுபிடிப்புகள் வசதி படைத்தோருக்கு மட்டுமே உதவுகின்றது. ஏழைகளுக்கும் உதவும் புதுமையான கண்டுபிடிப்புகள் அவசியம் தேவை என்று பிரதமர் மன்மோகன் சிங் கூறியுள்ளார்.

அணுசக்தி வாகனங்கள் தயாரிப்பு விண்வெளி தொழில்நுட்பத்தில் பல புதுமைகள் அண்மைகாலத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதனால் ஏழைகளுக்கு பலன் எதுவும் இருப்பதில்லை. ஏழைகளும் பலனடையும் வகையில் புதுமையான கண்டுபிடிப்புக்கள் இருக்க வேண்டும்.

இந்தியா பல்வேறு இன மக்கள் பல்வேறு பிரச்சினைகளை கொண்ட நாடு. இங்குள்ள பெரும்பாலான பிரச்சினைகள் இந்தியா தவிர வேறு எந்த நாட்டிலும் இருக்காது. எனவே

## மன்மோகன் தெரிவிப்பு

இந்தப் பிரச்சினைகளை தீர்க்க புதுமையான உத்திதேவை. குறிப்பாக வறுமையை போக்குதல், சுகாதாரம், கிராமப்புற தொலைத்தொடர்பு, விவசாயம், கால் நடை மருத்துவத்தில் எழும் பிரச்சினைகளை தீர்க்கும் புதுமைகளை புகுத்த வேண்டும்.

இதன்மூலம் ஏழைக்ள் பயன்பெறுவார்கள். இது நாட்டின் வளர்ச்சிக்கும் உதவும் புதுமையா்ன கண்டுபிடிப்புக்களை ஊக்குவிக்க ரூ. 5 ஆயிரம் கோடியில் தனி நிதி ஏற்படுத்தப்படும் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டது. இந்த நிதிக்கு அரசு சார்பில் 100 கோடியை ஒதுக்கி உள்ளேன் என அவர் கூறினார். (அ)




# கருணை மனுக்கள் விபரங்களை அளிக்குமாறு மத்திய அரசுக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவு

(புதுடில்லி)

தூக்குத் தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைக்கக்கோரி குடியரசுத் தலைவரிடம் அளிக்கப்பட்டுள்ள கருணை மனுக்களின் விபரங்களை சமர்ப்பிக்குமாறு மத்திய அரசுக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த 1993 ஆம் ஆண்டு டில்லி குண்டு வெடிப்பு சம்பவத்தில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள தேவேந்தர் பால் சிங் புல்லார் கருணை மனுவை 8 ஆண்டுகளுக்குப் பின் குடியரசுத் தலைவர் நிராகரித்தார். இதை எதிர்த்து தேவேந்தர் பால் சிங் புல்லார் உச்ச நீதிமன்றத்தில் மனு ஒன்றை தாக்கல் செய்தார். அதில் தூக்குத் தண்டனை கைதிகள் அளிக்கும் கருணை மனுக்கள் மீது குடியரசுத் தலைவர் உடனடியாகப் பரிசீலித்து முடிவெடுப்பதில்லை. அவை பல ஆண்டுகளாகக் கிடப்பில் போடப்படுகின்றன. இப்போது 17 கருணை மனுக்கள் குடியரசுத் தலைவர் பிரதீபா பட்டேல் முன்பு நிலுவையில் உள்ளன. இவை பல ஆண்டுகளாக நிலுவையில் உள்ளன. இதில் உச்ச நீதிமன்றம் தலையிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருந்தார்.

இந்த மனு நீதிபதிகள் ஜி.எஸ்.சிங்வி, எஸ்.ஜே.முகோபாத்யாய ஆகியோர் அடங்கிய அமர்வு நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தது. மனுவை விசாரித்த நீதிபதிகள், குடியரசுத் தலைவர் முன்பு நிலுவையில் உள்ள 17 கருணை மனுக்கள் குறித்த விபரத்தை மத்திய அரசு இந்த நீதிமன்றத்தில் அளிக்க வேண்டும் என்று உத்தரவிட்டனர்.

தேவேந்தர் சிங்கின் மனுவை ஆராய்ந்ததில் இந்த வழக்கின் தீவிரமும் முக்கியத்துவமும் தெரிய வந்துள்ளது. தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள பெரும்பாலானோர் நீதிமன்றத்தை அணுக முடியாத சூழலில் உள்ளனர்.

குடியரசுத் தலைவர் முன்பு நிலுவையில் உள்ள கருணை மனுக்களை ஆராய இந்த நீதிமன்றம் விரும்புகிறது. இதனால் இந்த வழக்கில் நீதிமன்றத்துக்கு சட்ட ஆலோசனைகளை வழங்கி உதவுமாறு மூத்த வழக்குரைஞர்கள் ராம்ஜெத்மலா்னி , டி.ஆர். அந்தியர்ஜுனா ஆகியோரை கேட்டுக்கொண்டோம். அவர்களும் இதற்கு ஒப்புக்கொண்டுள்ளனர் என்றும் நீதிபதிகள் தெரிவித்தனர்.(அ-2)




இந்திய பெருங்கடல் விளிம்பு நாடுகளின் பிராந்திய கூட்டுறவு மாநாடு பெங்களூரில் இடம்பெற்றது. இதில் மத்திய அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா, அவுஸ்திரேலிய வெளியுறவு அமைச்சர் கெவின் ரூட், இலங்கை வெளியுறவு அமைச்சர் சரத் அமுனுகம உள்ளிட்டோர் கலந்து கொண்டதைப் படத்தில் காணலாம்.

# சிரிய ஜனாதிபதிக்கு எதிரான போரில் 70 பேர் பலியாகினர்



சிரியாவில் ஜனாதிபதி அரசாங்கத்திற்கு எதிரான போராட்டத்தில் ஒரே நாளில் மட்டும் 70 பேர் பலியாகியுள்ளனர். சிரியாவில் ஜனாதிபதிக்கு எதிரான போராட்டங்கள் தீவிரம் அடைந்துள்ளன. அரபு லீக்கில் இருந்து சிரியா நீக்கப்பட்டது எதிர்க்கட்சிகளுக்கு புதிய தெம்பை அளித்துள்ளது.

ஜோர்தான் எல்லையருகில் அமைந்துள்ள டரா நகர், ஹேம்ஸ் உள்ளிட்ட பல்வேறு நகரங்களில் கடந்த 14 ஆம் திகதி இராணுவம் நடத்திய துப்பாக்கிச் சூட்டுத்தாக்குதல்களில் 70 பேர் பலியாகியுள்ளதாக சிரியா மனித உரிமை அமைப்பு தெரிவித்துள்ளது.

இதற்கிடையில் சிரியாவின் எதிர்க்கட்சிக் குழு நேற்று முன்தினம் ரஷ்ய தலைநகர் மொஸ்கோ சென்றது. சிரியாவில் அந்நியத் தலையீட்டை ரஷ்யாவும் சீனாவும் தொடர்ந்து எதிர்த்து வருகின்றன.

அதேநேரம் சிரியாவுக்கான தனது ஆயுத விநியோகத்தில் எவ்வித மாற்றமும் இல்லை என ரஷ்யா கூறியுள்ளது. இதனால் ரஷ்யாவின் ஆதரவைப் பெறுவதற்காக சிரிய எதிர்க்கட்சிக் குழு மொஸ்கோ சென்றுள்ளது.

இதுகுறித்து நேற்று முன்தினம் ரஷ்ய வெளியுறவுத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், அரபு லீக்கின் ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தும் வகையில் எதிர்க்கட்சிகளும் சிரிய அரசு தரப்பும் உடனடியாக பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது. (அ-2)

# 90 நாட்களில் பதவி விலகுவதாக ஏமன் ஜனாதிபதி உறுதியளிப்பு





வளைகுடா நாடுகள் கூட்டுறவு குழுவின் பரிந்துரைகளை செயற்படுத்தும் வகையில் இன்னும் 90 நாட்களில் பதவி விலகத் தயாராக இருப்பதாக ஏமன் ஜனாதிபதி அல் அப்துல்லா சலே தெரிவித்துள்ளார்.

துனிசியா, எகிப்தை தொடர்ந்து அடுத்து கடந்த பெப்ரவரியில் ஏமனில் ஜனாதிபதி சலேவுக்கு எதிரான போராட்டங்கள் வெடித்தன. குண்டு வீச்சில் காயம் அடைந்த சலே சவுதி அரேபியத் தலைநகர் ரியாத்தில் சிகிச்சை பெற்றார்.

அதையடுத்து திடீரென கடந்த சில மாதங்களுக்கு முன் நாடு திரும்பினார். எனினும் ஏமனில் போராட்டங்கள் குறையவில்லை. இராணுவத்துக்கும் பழங்குடியினருக்கும் மோதல் மேலும் அதிகரித்து வருகின்றது. ஏமனில் அமைதி திரும்புவதற்காக வளைகுடா நாடுகள் கூட்டுறவு குழுவில் சில பரிந்துரைகளை முன் வைத்தது.

ஆனால் அதில் கையெழுத்திட சலே மறுத்து வருகிறார். எனினும் அவர் ரியாத்தில் இருந்த போது தனக்குப் பதிலாக எதிர்க்கட்சிகளுடன் பேசுவதற்கான அதிகாரத்தை துணை ஜனாதிபதி அப்துர் அபு மன்சூர் ஹாடிக்கு அளித்துள்ளதாகத் தெரிவித்தார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் அவர் அளித்த பேட்டியில், ஜி.சி.சி ஒப்பந்தப்படி தேர்தல் நடக்கும் போது ஜனாதிபதி தானாகவே பதவி விலகி விடுவார். ஒப்பந்தப்படி இன்னும் 90 நாட்களில் நான் பதவி விலகுவேன்.

33 ஆண்டுகளாக நான் அதிகாரத்தில் இருந்துள்ளேன். இதில் உள்ள சட்டங்கள் சாதக-பாதகங்கள் அனைத்தையும் அறிவேன். அதிகாரத்தை விட மறுப்பவன் முட்டாள் தான் என்றார்.

எனினும் இதுபோல் அவர் ஏற்கனவே பலமுறை அறிவித்தும் கூட பதவியில் இருந்து விலகவில்லை என்பதால் அவரது இந்த அறிவிப்பை எதிர்க்கட்சிகள் நம்ப மறுத்துவிட்டன. (அ-2)

# அரபு லீக்கில் இருந்து சிரியா வெளியேற்றம்

## ஐரோப்பிய ஒன்றியம் பொருளாதாரத் தடை



அரபு லீக்கில் இருந்து வெளியேற்றப்பட்ட விவகாரம் குறித்து சிரியா தனது கடும் கண்டனத்தையும் கோபத்தையும் தெரிவித்துள்ளது. இந்நிலையில் சிரியா மீது மேலும் பல பொருளாதாரத் தடைகளை ஐரோப்பிய யூனியன் விதித்துள்ளது.

சிரியா ஜனாதிபதி பஷர் அல் அசாத்துக்கு எதிராக அந்நாட்டில் எழுந்துள்ள மக்கள் போராட்டங்கள் இராணுவ வன்முறை மூலம் ஒடுக்கப்பட்டு வருகின்றன.

இதற்கு கண்டனம் தெரிவித்த அரபு லீக் ஒரு ஒப்பந்தத்தையும் தயாரித்து அந்த ஒப்பந்தத்தை செயற்படுத்துவதாக கூறிய ஜனாதிபதி அசாத் அதற்கு மாறாக இராணுவ வன்முறையை மேலும் தொடர்ந்தார். இதனால் கடந்த வார இறுதியில் எகிப்து தலைநகர் கெய்றோவில் நடந்த அரபு லீக் கூட்டத்தில் சிரியாவின் உறுப்பினர் அந்தஸ்து இரத்து செய்யப்பட்டது.

நேற்றிலிருந்து ஒப்பந்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தாவிட்டால் பொருளாதார அரசியல் தடைகளை சிரியா சந்திக்க நேரிடும் என அரபு லீக் எச்சரித்துள்ளது.

இந்நிலையில் இது குறித்து சிரிய வெளியுறவு அமைச்சர் வாலித் அல் முவாலெம் கூறுகையில்,

சிரியாவை அரபு லீக்கில் இருந்து நீக்கியது சட்டவிரோதம். இது ஒரு அபாயகரமான நடவடிக்கை. அமெரிக்காவின் தூண்டுதலின் பேரில் அரபு லீக் இவ்வாறு நடந்திருக்கின்றது. சிரியாவுக்கு எதிரான சதித் திட்டங்கள் வீழ்ந்து விடும். சிரியா லிபியா அல்ல என்றார்.

எனினும் டமாஸ்கஸ்சில் உள்ள சவுதி அரேபியா மற்றும் கட்டார் நாட்டுத் தூதரங்கள் தாக்கப்பட்டதற்கு அவர் வருத்தம் தெரிவித்தார். இதற்கிடையில் பெல்ஜியம் தலைநகர் பிரஸல்சில் நேற்று முன்தினம் கூடிய ஐரோப்பிய யூனியன் வெளியுறவு அமைச்சர்கள் கூட்டத்தில் சிரியா மீது மேலும் பல பொருளாதார தடைகள் விதிக்க முடிவெடுக்கப்பட்டது.

அதன்படி சிரிய தனிநபர்கள் மற்றும் அமைப்புக்கள் என மொத்தம் 18 பேர் மீது இத்தடைகள் விதிக்கப்பட்டுள்ளன.

ஏற்கனவே சிரியாவின் 56 நபர்கள் மற்றும் 19 அமைப்புக்கள் மீது ஐரோப்பிய யூனியன் பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளது. (அ-2)





# இரசாயன ஆயுதங்களை கடாபி தயாரித்தார்

## கமரூன் குற்றச்சாட்டு

கடாபி இரசாயன ஆயுதங்களை தயாரித்தார் என இங்கிலாந்து பிரதமர் டேவிட் கமரூன் குற்றம் சாட்டியுள்ளார்.


லிபியா முன்னாள் ஜனாதிபதி கடாபி புரட்சி படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டார். அதை தொடர்ந்து அவர் குறித்த தகவல்கள் வெளிவரத் தொடங்கியுள்ளன.

தற்போது அவர் லிபியாவில் மக்களை பெருமளவில் அழிக்கவல்ல இரசாயன ஆயுதங்களை தயாரித்தார் என இங்கிலாந்து பிரதமர் குற்றம் சாட்டியுள்ளார். மேலும் அவற்றை உலக நாடுகள் பார்வையில் இருந்து மறைத்து வைத்து இருந்தார் என்றும் தெரிவித்துள்ளார்.

லிபியாவில் பதுக்கி வைக்கப்பட்டுள்ள இரசாயன ஆயுதங்கள் அழிக்கப்படும். அதற்கான உதவியில் இங்கிலாந்து நிபுணர்கள் ஈடுபடுவார்கள்.

மேலும் லிபியாவில் ஜனநாயகம் மேம்பட இங்கிலாந்தும் அதன் நட்பு நாடுகளும் உதவி புரியும் என்றும் தெரிவித்தார். (அ-2)

# புற்றுநோயை குணப்படுத்த மருந்து கண்டுபிடிப்பு



உயிர்கொல்லி நோயான புற்றுநோய் உலகை அச்சுறுத்தி வருகின்றது. இந்த நோயை முற்றிலும் குணப்படுத்த இன்னும் மருந்து கண்டு பிடிக்கப்படவில்லை. விஞ்ஞானிகள் தொடர்ந்து ஆராய்ச்சி நடத்தி தீவிர முயற்சி மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையில் தற்போது கலிபோர்னியா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த சர்வதேச விஞ்ஞானிகள் குழு புற்றுநோயை முற்றிலும் அழிக்கக் கூடிய வீரியமான மருந்தை கண்டுபிடித்துள்ளனர்.

கேஜி 5 என்றழைக்கப்படும் இந்த அதிசய மருந்து புற்றுநோய் பாதித்துள்ள செல்களை முற்றிலும் அழிக்கும் தன்மை கொண்டது.

இந்த மருந்து புற்றுநோய் செல்களை தற்கொலை செய்து கொள்ள செய்து அது மேலும் பரவாமல் தடுக்கும் சக்தி வாய்ந்தது. இந்த மருந்து இன்னும் 5 ஆண்டுகளில் செயற்பாட்டுக்கு வரவுள்ளது.

இதுகுறித்து விஞ்ஞானி பேராசிரியர் டேவிட் செரேஷ் கூறும் போது,

இந்த அதிசய மருந்து மாத்திரைகள் வடிவில் வழங்கப்படவுள்ளது. இது மிக சிறிதளவில் மட்டுமே பக்க விளைவுகளை ஏற்படுத்தும். ஆனால் புற்றுநோய் மேலும் பரவாமல் முற்றிலும் குணமாகும் என்றார். (அ-2)





வங்க தேசம் சென்றிருந்த ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ மூனுக்கு (நடுவில்) டாக்கா பல்கலைக்கழகம் கௌரவ டாக்டர் பட்டம் வழங்கியது. அருகில் வங்கதேச ஜனாதிபதி ஜில்லுர் ரஹ்மான் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

நடைபெறமுடியாதது என்று உலகில் எதுவுமே இல்லை என்றே எனக்குத் தோன்றுகிறது.

– மார்க் ட்வைன்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# கலாசார உத்தியோகத்தர்களுக்கு ஓர் அன்பு மடல்!

எனதருமை கலாசார உத்தியோகத்தர்களுக்கு அன்பு வணக்கம்.

அவசரமாக இக்கடிதம் எழுதப்படுகின்றது. முன்பும் ஒரு தடவை இவ்விடத்தில் ஒரு மடலை எழுதியிருந்தோம்.

இரண்டாவது முறையும் கடிதம் எழுதுவது அவ்வளவு அழகல்லவாயினும், ஞாபகமூட்டல் என்ற அடிப்படையில் இக்கடிதத்தை எழுதவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

தற்போது எங்கள் தமிழ் மண்ணில் இடம்பெறும் கலாசார சீரழிவுகள், பிறழ்வான போக்குகள் குறித்து யார் யாரோ எல்லாம் குரல் கொடுக்கும் போது, கலாசாரத்தை பேணுவதற்கென இருக்கக் கூடிய தங்கள் தரப்பில் இருந்து எந்தக் கருத்தும் வெளிவராமை அதிர்ச்சி தருவதாக உள்ளது.

கலாசாரத்தை பேணும் நோக்கில் அண்மைக் காலத்தில் தோற்றுவிக்கப்பட்டதாக கலாசார உத்தியோகத்தர் பதவி உள்ளது.

அதேநேரம் கலாசார உத்தியோகத்தர்களின் நியமனங்களுக்குப் பின்னரே வடபுலத்தில் கலாசார சீரழிவுகள் அதிகரித்துள்ளதையும் வடபுலத்தில் இருந்து எங்கள் கலாசார சின்னங்கள் தென்பகுதிக்கு கடத்தப்படுவதையும் காண முடிகின்றது.

ஆக, பிரதேச செயலகங்கள் தோறும் கலாசார பேரவைகளை அமைத்து வருடத்தில் மூன்று நாள் கலை நிகழ்வை நடத்துவது,

தத்தம் எல்லைக்குட்பட்ட – அறுபது வயது கடந்த கலைஞர்களுக்கு கலாபூசணம் விருது வழங்குவது என்ற கருமங்களோடு கலாசார உத்தியோகத்தர்களின் பணி முடிந்துவிடுவது போலத் தெரிகின்றது.

வருடத்தில் ஒரு நாள் அல்லது மூன்று தினங்கள் கலை நிகழ்வை நடத்திவிட்டால் எங்கள் பணி முடிந்துவிடும் என்ற நினைப்பு இருக்குமாயின்,

அல்லது கலாசார விழாவை ஒழுங்கமைத்து உயர் பதவிகளில் இருக்கக்கூடியவர்களுக்கு மாலை, பொன்னாடை போர்த்தி அவர்களை புகழ்ந்து பாடிவிட்டால் எல்லாம் சரியாகிவிடும் என்ற நிலைமை இருக்குமாயின், ஹெரோயின் பாவனையும் விரசமான தொழில்களுமே நடந்தேறும்.

எனவே எங்கள் கலாசார உத்தியோகத்தர்கள் ஒவ்வொருவரும் தத்தம் பிரதேசங்களில் இடம் பெறக்கூடிய கலாசாரப் பிறழ்வுகளை இனங்காணவும் அதனைத் தடுத்து நிறுத்தவும் முன்வரவேண்டும்.

ஒவ்வொரு பிரதேசங்களிலும் கலாசாரத்தைப் பேணும் அமைப்புகள் உருவாக்கப்பட்டு அதில் இளம் சமூகத்தை இணைத்து ‘எங்களை நாங்களே பாதுகாத்துக் கொள்வோம்’ என்ற மகுட வாசகத்தின் கீழ் இயங்கினால் கலாசார சீரழிவுகள் பலவற்றை அடியோடு அறுத்தெறிய முடியும்.

இதற்காக கலாசார உத்தியோகத்தர்கள் அதிகாரங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

பொலிஸாருக்கு நேரடியாக முறையீடு செய்யவும்; அதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுக்கவுமான திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டால் கலாசார சீரழிவை ஒழித்துக் கட்டமுடியும்.

இதற்காக கலாசார உத்தியோகத்தர்களை ஒன்றிணைத்து புதிய செயற்றிட்டம் வகுத்து புதிய பாதையில் பணிப்பதற்கான ஏற்பாடுகள் தேவையாகும்.

அதேநேரம் எங்கள் கலாசார அடையாளங்களை பாதுகாப்பதில் கலாசார உத்தியோகத்தர்கள் சிலர் ஆற்றிவரும் அர்ப்பணிப்போடு கூடிய சேவைக்கும் இவ்விடத்தில் நன்றி கூறுவது நயத்தக்க நாகரிகமாகும்.

# அரச ஊழியர்களுக்கு 15, 000 ரூபா சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டும்

## அகில இலங்கை பொது ஊழியர் சங்கம் கோரிக்கை

விலைவாசி ஏற்றம் மற்றும் பொருளாதார ரீதியில் அரச உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் பாதிக்கப்பட்டுள்ளதால் எதிர்வரும் வரவு- செலவுத் திட்டத்தில் அவர்களுக்கு 15 ஆயிரம் ரூபா சம்பள உயர் வழங்கப்பட வேண்டும்.

இவ்வாறு அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு அனுப்பி வைத்துள்ள மகஜர் ஒன்றில் வலியுறுத்தியுள்ளது.

அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கம் சார்பில் அதன் தலைவர் எஸ்.லோகநாதன் இந்த மகஜரை அனுப்பி வைத்துள்ளார்.

இந்த மகஜரில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது,

அரச அலுவலகங்கள், நிறுவனங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் விலைவாசி மற்றும் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டு தமது அன்றாட வாழ்க்கைச் சுமை யை சமாளிக்க முடியாமல் மிக மன விரக் தியுடன் கடமையாற்றி வருவதை நாம் நேரில் அறிவோம்.

இதனால் அரசின் மீது சகல அரச உத்தியோகதர்களும் ஊழியர்களும் அதிருப்தி கொண்ட மனநிலையில் காணப்படுவதை மிக வருத்தத்துடன் அறியத் தருகின்றோம்.

மேலும் பல வருட காலமாக அத்தியாவசியப் பொருட்களின் விலை நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் இருப்பதுடன் அதுபோன்று எரிபொருள் மற் றும் காஸ் விலை அதிகரிப்பு, போக்குவரத்து செலவு அதிகரிப்பு, மின் கட்டணம், நீர்க் கட்டணம், நகர, மாநகர சபைகளுக்கான சோலை வரி அதிகரிப்பு , சுகாதார, மருத்துவ பொருட்களின் விலை அதிகரிப்பு என்பவற்றால் அன்றாட செலவுகளை சமாளிக்க முடியாமல் திண்டாடும் நிலையும் உருவாகியுள்ளது.

ஏற்கெனவே பல தரப்பட்ட கஷ்டங்களுக்கு மத்தியிலும் தாம் சேகரித்து வைத்த நகைகள் வங்கிகளிலும் தனியார் நிறுவனங்களிலும் அடகு வைத்து மாதாந்த செலவுகளை ஈடுசெய்யும் நிலைக்கும் அரச உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் தள்ளப்பட்டுள்ளனர். தொடர்ந்தும் இத்தகைய நிலை நீடிப்பதால், வீடு, வாசல்களை அடகு வைத்து கடன் களை மீள செலுத்த வேண்டிய நிலை யிலும் பலர் உள்ளனர்.

எனவே இந்த நிலைமைகளை தாங்கள் பெருமனம் கொண்டு கவனத்தில் கொண்டு பாதிக்கப்பட்டுள்ள அரச ஊழியர்கள், உத்தியோகத்தர்களின் உள ரீதியான பாதிப்பை நிவர்த்தி செய்யும் வகையில் எதிர்வரும் வரவு- செலவுத் திட்டத்தில் தற்பொழுது வழங்கும் மாதாந்த வேதனத்திற்கு மேலதிகமாக 15 ஆயிரம் ரூபா சம்பள உயர்வு வழங்க ஆவன செய்யுமாறு கோருகின்றோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ–2)

# விரிவுரைகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரி முதலாம், இரண்டாம் வருட கல்வி மாணி மாணவர்களுக்கான கற்கை நெறி விரிவுரைகள் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெறும் என தேசிய கல்வி நிறுவக இணைப்பாளர் எஸ்.ஆர்.சத்தியேந்திரம்பிள்ளை அறிவித்துள்ளார். (அ)

# மாற்று வலுவுள்ளோருக்கு புனர்வாழ்வளிக்க நடவடிக்கை

## சமூக சேவைகள் அமைச்சு ஏற்பாடு

சமூக சேவைகள் அமைச்சு யாழ். மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகப் பிரிவுகளில் அடுத்த ஆண்டில் மாற்று வலுவுள்ளோரைச் சமூக மட்டத்தில் வைத்துப் புனர்வாழ்வளிக்க திட்டமிட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழான மதிப்பீட்டையும் அது கோரியுள்ளது. இத் திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்ற தொண்டர்களின் விபரங்களும் கோரப்பட்டுள்ளன.

பிரதேச செயலர்களின் பணிப்பின் பேரில் சமூக சேவைகள் அதிகாரிகள் இவ் மதிப்பீடுகளை அறிக்கைகளைத் தயாரித்து அனுப்பி வருகின்றனர்.

பொது இடங்கள் பாடசாலைகளில் மாற்றுவலுவுள்ள மாணவர்கள் முச்சக்கர வண்டி சக்கர நாற்காலிகளில் உட்பிரவேசிக்கும் வசதிகளை ஏற்படுத்துதல் தொடர்பில் கவனம் செலுத்துவதையும் காண முடிகின்றது.

இவ்வருடம் கோப்பாய், நல்லூர், ஊர்காவற்றுறை ஆகிய பிரதேச செயலகங்களுக்கு இத்திட்டத்தின் கீழ் கட்டுமானங்களை மேற்கொள்ள தலா ஒரு இலட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

இந்நிதியத்தின் மூலம் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவின் அலுவலகத்தின் தெற்கு புறத்தில் மாற்று வலுவுள்ளோர் உட்பிரவேசிக்க கூடிய வாசல் ஏற்படுத்தப்பட்டு வருகின்றது.

நல்லூர் செயலக வளாகத்தில் சமூக பராமரிப்பு நிலையத்துடன் மாற்றுவலுவுள்ளோர் பயன்படுத்தக்கூடிய மலசலகூடம் ஒன்றும் அமைக்கப்பட்டு வருகின்றது. பிரதேச செயலகத்திற்கு வரும் மாற்று வலுவுள்ளோர் பயன்படுத்தக் கூடியதாக இக்கட்டுமானம் மேற்கொள்ளப்படுகின்றது.

ஊர்காவற்றுறை பிரதேச செயலக வளாகத்தில் சமுர்த்தி வங்கியுடன் இணைந்ததாக மாற்று வலுவுள்ளோரின் தேவை கருதி மலசலகூடம் அமைக்கப்படவுள்ளது.

சமூக சேவைகள் அமைச்சு இத் திட்டத்தை நடைமுறைப்படுத்த வட மாகாணத்தில் உள்ள மேலதிக அரசாங்க அதிபர்களை இணைப்பாளர்களாக நியமித்துள்ளது.

மாவட்டத்திற்கு ஒரு சமூக சேவை அதிகாரியை ஒருங்கிணைப்பு பணிகளிலும் ஈடுபடுத்தியுள்ளது. யாழ். மாவட்டத்திற்கு உடுவில் சமூக சேவைகள் அதிகாரி வடிவேலுப்பிள்ளை சுரேஷ்குமார், கிளிநொச்சி மாவட்டத்திற்கென கண்டாவளை சமூக சேவைகள் அதிகாரி சுப்பிரமணியம் ஜெயானந்தராஜா ஆகியோர் இவ்விதம் நியமிக்கப்பட்டுள்ளனர்.(அ–2)

# திருட்டுக் குற்றம் சாட்டப்பட்ட இலங்கைப்பெண் விடுதலை

பஹ்ரெய்ன் நாட்டில் எஜமானரால் திருட்டுக் குற்றம் சுமத்தப்பட்ட இலங்கை பணிப் பெண்ணொருவர் அந்த நாட்டு மேல் குற்றவியல் நீதிமன்றத்தினால் நேற்று முன்தினம் விடுதலை செய்யப்பட்டார்.

40 வயதான இலங்கைப் பணிப் பெண் வீட்டை விட்டுதப்பிச் சென்று தனது எஜமானர் தன்னை மோசமாக நடத்திவருவதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இருப்பினும் இரண்டு பிஸ்கட்டுக்கள், தொலைபேசி மீள்நிரப்பு அட்டைகள், ஆடைகள் போன்றவற்றை மேற்படி பணிப்பெண் திருடியதாக 52 வயதான எஜமானர் விசாரணயின் போது பொலிஸாரிடம் கூறினார்.

இது தொடர்பில் பொலிஸார் குறித்த பணிப்பெண்ணிடம் வினவிய போது தனது வீட்டு எஜமானர் குறித்த ஆடைகளை தனக்கு அன்பளிப்பாக தந்ததாகத் தெரிவித்துள்ளார் என நீதின்றில் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரம்ழான் நோன்பை நிறைவு செய்வதற்காக பிஸ்கட்டுக்களை சாப்பிட எடுத்ததாகவும் அப்பணிப்பெண் கூறினார்.

இதனை பரிசீலித்த நீதிமன்றம் இல ங்கைப் பணிப்பெண்ணை நிரபராதி என விடுதலை செய்துள்ளது. (அ–2)

# சத்திய தரிசனம்



## எச்சரிக்கையாகப் பேசுங்கள்!

நம்பிக்கையிருந்தால் அன்பிருக்கும், அன்பிருந்தால் அமைதியிருக்கும், அமைதியிருந்தால் உண்மையிருக்கும், உண்மையிருந்தால் உள மகிழ்ச்சியிருக்கும், உளமகிழ்ச்சியருந்தால் கடவுள் இருப்பார்.

தாயிடம் அன்பு காட்டுவதுடன் தாய், தந்தை , குரு, விருந்தினரை கடவுளாக மதிக்க வேண்டும். இந்த நால்வருள் தாய் முதன்மையானவள்.

அன்பை வளர்த்துக்கொள், அன்பை பரப்பு, அன்பை அறுவடை செய்து கொள், அன்பை விட மேலான மதம் ஏதுமில்லை.

தீய செயல்கள் நன்மை பயக்காது, நல்ல செயல்கள் தீமை விளைவிக்காது. வேப்ப விதையில் மாவிளையாது மாங்கொட்டையில் வேம்பு விளையாது.

பேசும்போது எச்சரிக்கையாக இருக்கவேண்டும். மிருகங்களுக்கு காம்புகள், பூச்சிகளுக்கு கொடுக்குகள், விலங்குகளுக்கு நகங்கள், நச்சுப்பற்கள் உள்ளன. மனிதனுக்குத் தாக்கும் ஆயுதம் நாக்கு. நாக்கினால் ஏற்பட்ட காயம் ஆற நீண்ட நாள் ஈகும்.

நல்லது செய்தவனுக்கு நல்லது செய்வதில்லை. மனிதனுக்கு பெருமை இல்லை. தீமை செய்தவனுக்கும் கூட நன்மை செய்வதில் தான் பெருமை உள்ளது.

# துமிந்த சில்வா, பாரத லக்ஷ்மன் வழக்கின் வாதப் பிரதிவாதங்கள்

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா ஆரோக்கியமான மனநிலையில் இல்லை யென அவரின் வழக்குரைஞர் நேற்று முன் தினம் நீதிமன்றில் தெரிவித்தார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஷ்மன் பிரேமசந்திர கொல்லப்பட்ட முல்லேரியா சம்பவம் தொடர்பான வழக்கு செவ்வாய்க்கிழமை கொழும்பு மேலதிக நீதி வான் பிரசன்ன அல்விஸ் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

அப்போது பாரத லக்ஷ்மனின் நலன்க ளுக்காக ஆஜரான சட்டத்தரணிகளில் ஒரு வரான திரந்த வலலியத்த வாதாடுகையில், பாரத லக்ஷ்மனும் ஏனைய மூவரும் கொல்ல ப்பட்டதில் துமிந்த சில்வாவையும் ஏனைய மூவரையும் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் (சி.ஐ.டி)சந்தேக நபர்களாக சேர்க்கவில்லை எனத் தெரிவித்தார்.

துமிந்த சில்வா இவ்வழக்கின் பிரதான சந்தேக நபரெனவும் சி.ஐ.டியினர் அவரை சந்தேக நபராக்காவிட்டால் அவரைக் கைது செய்வதற்கு பிடிவிறாந்து பிறப்பிப்பதற்கான அதிகாரம் நீதிமன்றுக்குள்ளதெனவும் கூறினார்.

துமிந்த சில்வா இவ் வழக்கில் சந்தேக நபரா என நீதிவான் கேட்டபோது உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஷானி அபே சேகர பதிலளிக்கையில், இதுவரை மேற்கொள்ளப் பட்ட விசாரணைகளில் துமிந்த சில்வாவை சந்தேக நபராக்குவதற்கான ஆதாரங்கள் கிடைக்கவில்லை எனத் தெரிவித்தார்.

பாரத லக்ஷ்மன் பிரேமசந்திரவின் வாக னத்தை துமிந்த சில்வா மறித்தார் எனவும் அவரை சுட்டதாகவும் இவரின் சாரதி சாட்சி யமளித்தாலும் அச்சாட்சியத்துடன் ஏனைய சாட்சிகளின் சாட்சியங்கள் பொருந்தவில்லை எனக்கூறினார். சாட்சிகள் முரண்பாடான சாட்சியங்களை வழங்கியதாக அவர் தெரி வித்தார். துமிந்த சில்வா ஆரோக்கியமான மனநிலையில் இல்லை எனவும் அவர் கூறினார்.

அப்போது ஆரோக்கியமற்ற மனநிலையு டைய ஒருவர் குற்றம் செய்தால் அவரை சி.ஐ.டி கைது செய்யாதா என நீதிவான் கேட் டார். அத்தகைய நபர்கள் சட்டத்தினால் பாது காக்கப்பட்டுள்ளனர் என உதவி பொலிஸ் அத்தியட்சகர் கூறினார்.

துமிந்த சில்வாவின் சார்பாக ஆஜரான சட்டத்தரணி அனுர மெத்தகொட வாதாடு கையில், இதுவரை மேற்கொள்ளப்பட்ட விசார ணைகளின்படி துமிந்த சில்வா இவ்வழக்கில் ஒரு சந்தேக நபர் அல்ல எனவும் எனவே அவரை கைது செய்யவோ கைது செய்வதற்கு பிடியாணை பிறப்பிக்கவோ முடியாது என்றார்.

உள்ளூராட்சித் தேர்தல் தினத்தில் நடை பெற்ற சம்பவத்தில் பாரத லக்ஷ்மன் மாத் திரமல்லாமல் ஏனைய பலரும் துப்பாக்கிச் சூட்டினால் காயமடைந்ததாகவும் அவர் கூறி னார். உடல் நலமில்லாத தனது கட்சிக்காரர் ஸ்ரீ ஜயவர்த்தனபுரவைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற பின் தற்போது வெளிநாடொன்றில் சிகிச்சை பெறுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இவ்வழக்கின் சந்தேக நபரான பொலிஸ் கான்ஸ்டபிள் அனுர துஷார டி மெல் சார்பில் ஆஜரான வழக்குரைஞர் அனுஜா பிரேமர ட்ன வாதாடுகையில், தனது கட்சிகாரர் துமிந்த சில்வாவின் உத்தியோகபூர்வ மெய்ப்பாது காவலர் எனவும் அவர் தற்பாதுகாப்புக்காக செயற்பட்டிருந்தால் அது சட்டரீதியானது என்பதால் அவரை சந்தேக நபராக சேர்க்க முடியாது எனவும் கூறினார்.

இவ்வழக்கின் இரண்டாவது, மூன்றாவது சந்தேகநபர்களான ஜி.எம்.கே. பந்துலசேன மற்றும் ஜி.எம்.கே. ருவன் மதுசங்க சார்பில் ஆஜரான வழக்குரைஞர் இனோகா கமகே வாதாடுகையில், தனது கட்சிக்காரர்கள் ஏனைய சந்தேக நபர்களுக்கு வீடொன்றை வாடகை க்கு வழங்கியிருந்ததால் இவ்வழக்கில் சந்தேக நபர்களாக சேர்க்கப்பட்டுள்ளதாக கூறினார்.

கொலையுடன் தனது கட்சிக்காரர்களுக்கு தொடர்பில்லை எனவும் சந்தேக நபர்கள் சிலருக்கு புகலிடம் அளித்ததில் சந்தேக நப ராக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

வாதங்களை கருத்திற் கொண்ட நீதிவான் சி.ஐ.டியின் பி அறிக்கை மற்றும் சாந்த பெரேரா அமரதேவ மற்றும் நிஹால் குமார பிராங்க் விஜேசேகர ஆகியோரின் சாட்சியங்க ளின்படி துமிந்த சில்வா இவ்வழக்கில் ஒரு சந் தேகநபராக சேர்க்கப்பட்டிருக்க வேண்டும், எனினும் சி.ஐ.டியினர் அவரை ஒரு சந்தேக நபராக்காததால் கைது செய்வதற்கு நீதிம ன்றம் பிடிவிறாந்து பிறப்பிக்க முடியாது என்றார்.

ஆனால், நாடாளுமன்ற உறுப்பினர் ஒரு வரை கைது செய்வதற்குரிய நடைமுறை களை பின்பற்றி அவரை உடனடியாக கைது செய்து நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறு நீதி வான் உத்தரவிட்டார்.

முதலாவது சந்தேக நபரான அனுர துஷார டி மெல்லை எதிர்வரும் 29 வரை விளக் கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தர விட்டார். 2 ஆம் 3 ஆம் சந்தேகநபர்கள் 50 ஆயிரம் ரூபா சரீரப் பிணையில் செல்ல அனு மதிக்கப்பட்டனர். (அ-2)

# வாவியிலிருந்து சடலம் மீட்பு

(கொழும்பு)

கெக்கிராவ கனேவல்பொல பகுதி யிலுள்ள வாவி ஒன்றிலிருந்து ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

நேற்று காலை கிடைக்கப்பெற்ற தகவலு க்கமைய சடலம் கண்டெடுக்கப்பட்டதாக பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

குறித்த நபர் கொலை செய்யப்பட்டு சடலம் வாவிக்குள் போடப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள் ளனர்.

அத்துடன் 52 வயதான இந்த நபர் காணமற்போயுள்ளதாக சில தினங்களுக்கு முன்னர் பொலிஸில் முறைப்பாடு செய்ய ப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின் றது. (அ-2)

# தெரிவுக்குழு அமைப்பது குறித்து ஐ.தே.கட்சிக்கு அறிவிப்பில்லை

## ஐ.தே.க. குற்றச்சாட்டு

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண பதற்கான பாராளுமன்ற தெரிவுக்குழுவை அமைப்பது தொடர்பில் இதுவரை ஐக்கிய தேசிய கட்சிக்கு சபாநாயகர் தரப்பில் அழை ப்பு விடுவிக்கப்படவில்லை. இது குறித்து அறிவுறுத்தப்படவுமில்லை. அவ்வாறு சபா நாயகர் எமக்கு அறிவிப்பு விடுத்தால் எமது நிலைப்பாட்டை அறிவிப்போம் என்று ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்த நாயக்க தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும் தெரிவுக்குழுவை நிய மித்த காலத்தை இழுத்தடிக்காமல் அரசியல் தீர்வு ஒன்று தொடர்பில் இணக்கப்பாட்டுக்கு அரசாங்கம் முயற்சிக்க வேண்டும் என்றும் திஸ்ஸ அத்தநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறி க்கை மற்றும் ஏற்கனவே இது தொடர்பில் ஆராய்ந்த குழுக்களின் அறிக்கை ஆகிய வற்றை அடிப்படையாகக் கொண்டு விரை யில் அரசாங்கம் அரசியல் தீர்வுக்கு வழி வகுக்க வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி கோரிக்கை விடுக்கின்றது, என்றும் அவர் கூறியுள்ளார். (அ-2)

# இரத்தத்தில் கொழுப்புச்சத்து அதிகரித்தால் மாரடைப்பு ஏற்படும்

(லண்டன்)

இரத்தத்தில் கொழுப்பு சத்து அதிகரிப்ப தால் மாரடைப்பு,பக்கவாதம் மற்றும் இருதய நோய்கள் ஏற்படுவதாக மருத்துவ நிபுண ர்கள் தெரிவிக்கின்றனர். எனவே, கொழுப்பு சத்துள்ள உணவு பொருட்களை குறைத்து கொள்ளும்படி வலியுறுத்துகின்றனர்.

இருந்தும் இரத்தத்தில் உள்ள கொழுப்பு சத்தை கட்டுப்படுத்த ஸ்டேடின்ஸ் என்ற ஊசி மருந்தை சிலர் தினந்தோறும் பயன்படுத்தி வருகின்றனர். இந்த மருந்தை இங்கிலாந்தில் மட்டும் 40 இலட்சத்துக்கும் மேற்பட்டோர் பயன்படுத்தி வருகின்றனர். ஆனால், இது சரிவர செயற்படவில்லை. மேலும் சிலபக்கவிளை வுகளை ஏற்படுத்துவதாக கருதி அவற்றை பயன்படுத்துவதை நிறுத்தி வருகின்றனர்.

இதை தொடர்ந்து தற்போது புதிய ஊசி மருந்தை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள் ளனர். அதற்கு மேஜிக் புல்லட் ஜேப் என பெயரிட்டுள்ளனர். இந்த ஊசி மருந்து இரத் தத்தில் கெடுதல் விளைவிக்கும் கொழுப்பு சத்தை குறைத்து நலமான வாழ்வுக்கு வழி வகுக்கிறது. இந்த மருந்தை மனிதர்களிடம் பயன்படுத்துவது குறித்து முதல்கட்ட சோதனை நடத்தப்பட்டது.

இதற்கான ஆய்வு 18 வயது முதல் 45 வயது வரையிலான 54 ஆண்கள் மற்றும் 2 பெண்களிடம் நடத்தப்பட்டது. அதில் நல்ல பலன் கிடைத்துள்ளது. இந்த சிகிச்சை ஏ.எம். ஜி145 என பெயரிடப்பட்டுள்ளது. இது விரை வில் பயன்பாட்டுக்கு வரும் என எதிர்பார்க் கப்படுகிறது. (அ-2)

# பி.சி.சி லங்கா நிறுவனத்தின் நிலப்பரப்பு அரசு பொறுப்பேற்பு

கொழும்பு பி.சி.சி லங்கா நிறுவனம் அமை ந்த காணியில் நான்கு ஏக்கர் நிலப்பரப்பை நகர அபிவிருத்தி அதிகார சபை பொறுப்பேற் றுள்ளதுடன் அதற்காக ஆயிரத்து 120 மில் லியன் ரூபா அந்நிறுவனத்திற்கு வழங்கவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

இக்காணி,நகர அபிவிருத்தி அதிகார சபை யால் பொறுப்பேற்கப்பட்டுள்ளதால் அத்தன கல்ல வத்துப்பிட்டிவலவில் நவீன வசதிகளு டன் புதிய தொழிற்சாலை ஒன்றை இந் நிறு வனம் அமைக்க உள்ளது.

1918 ஆம் ஆண்டு வெள்ளையர்களால் பிரிட்டிஷ் சிலோன் மிலின் என்ற பெயரில் இந் நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது. இதன் பின்னர் 1972 ஆம் ஆண்டு வர்த்தக நிறுவ னங்களை அரசுடைமையாக்கும் சட்டத்தின் கீழ் இந் நிறுவனத்தை அரசாங்கம் பொறுப் பேற்றது.

1988 ஆம் ஆண்டின் நிறுவனங்களின் சட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்ட பி.சி.சி லங்கா நிறுவனம் என்ற பெயரில் ஸ்தா பிக்கப்பட்டது. (அ-2)

# வவுனியாவில் நடமாடும்சேவை

ஐக்கிய நாடுகள் பொருளாதார அபிவி ருத்தித் திட்டத்தின் நீதி நியாயத்தை சமமாக அணுகும் கீழுத்திட்டமும் தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சகம் இணைந்து வவுனியா பிரதேச செயலகப்பிரி விற்கான நடமாடும் சேவையினை எதிர்வரும் 22 ஆம் திகதி காலை 9.30 மணி முதல் 5மணிவரை வவுனியா பிரதேச செயலகத்தில் நடத்துவுள்ளது.

இந்த நடமாடும் சேவையின் ஊடாக வவு னியா பி[illegible] செயல[illegible]த்திற்குட்பட்ட பிரிவு மக்கள் தங்களு[illegible] ட்ட ஆ[illegible]வணங்களான பிறப்புச்சான்றிதழ், தேசிய அடையாள அட் டைக்கான விண்ணப்பத்த[illegible], சமர்ப்பித்தல், இறப்பு சான்றிதழ், திருமணச் சான்றிதழ், காலங்கடந்த பிறப்பு, இறப்பு, திருமணப்பதிவு தொடர்பான ஆலோசனைகளும் மீள்வரும் இந்தியாவில் பிறந்த பிள்ளைகளுக்கான இலங்கை பிறப்புச்சான்றிதழ் தொடர்பான ஆலோசனைகள், இந்தியாவில் பிறந்த குழந் தைகளுக்கான குடியுரிமை சான்றிதழ் தொட ர்பான ஆலோசனைகள் என்பன தொடர் பான ஆலோசனைகளும் வழி காட்டல்களும் வழங்கப்படவுள்ளன.

இந்த நடமாடும் சேவையின் போது முத் திரை மற்றும் புகைப்பட செலவுகள் இல வசமாக வழங்கப்படவுள்ள[illegible] குறிப்பிடத் தக்கது. (அ-2)

# நாவலர் தினத்தையொட்டிய திறந்தபேச்சுப் போட்டி

கொழும்பு தமிழ்ச்சங்கம் ஸ்ரீலஸ்ரீ ஆறு முகநாவலர் தினத்தையொட்டி திறந்த போட்டி ஒன்றினை நடத்தவுள்ளது.17 தொடக்கம் 25 வரையான வயதிற்குட்பட்டவர்கள் யாவரும் இப்போட்டியில் கலந்து கொள்ளலாம். நாவ லர் தொடர்பாக நடுவர்களால் தரப்படும் தலை ப்பில் போட்டியாளர்கள் பேசுதல் வேண்டும்.

வெற்றி பெறுபவர்களுக்கு எதிர்வரும் டிசெம்பர் மாதம் 24, 25 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ள நாவலர் விழாவில் பணப் பரிசும் நற்சான்றுப் பத்திரமும் வழங்கப்படும்.

முதலாம்பரிசாக 15 ஆயிரம் ரூபாவும் இரண்டாம் பரிசாக 10 ஆயிரம் ரூபாவும் மூன்றாவது பரிசாக 5 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படவுள்ளது.

இப்போட்டியில் பங்குபெற விரும்புபவர் கள் டிசெம்பர் 5 ஆம் திகதிக்கு முன்னர் பொதுச் செயலாளர், கொழும்புத்தமிழ்ச் சங்கம், இல-07, 57 ஆவது ஒழுங்கை, கொழும்பு-6 எனும் முகவரிக்கு விண்ணப்பி க்குமாறு சங்கத்தின் பொதுச் செயலாளர் கேட்டுள்ளார். (அ)

# இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க மேற்கிந்தியத் தீவுகள் அணி போராட்டம்



(கொல்கத்தா)

இரண்டாவது டெஸ்டில் பெலோன் நிலைக்கு தள்ளப்பட்ட மேற்கிந்தியத் தீவுகள் அணி இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க போராடி வருகின்றது.

இந்தியாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகின்றது.

இதில் முதலாவது டெஸ்டில் வெற்றி பெற்ற இந்திய அணி தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலையிலுள்ள நிலையில் இரண்டாவது டெஸ்ட் கடந்த 14ஆம் திகதி கொல்கத்தாவில் ஆரம்பமானது.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி முதலாவது இன்னிங்ஸில் 7 விக்கெட்டுக்களை இழந்து 631 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை நிறுத்தியது.

இதில் வி.வி.எஸ். லக்ஸ்மன் ஆட்டமிழக்காமல் 176 ஓட்டங்களையும் அணித் தலைவர் தோனி 144, ராகுல் டிராவிட் 119 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் சமி, ரோச், தலா 2 விக்கெட்டுக்களையும் பிடல் எட்வேர்ட்ஸ், பிஷோ, பாரத் வைற் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி நேற்று முன்தினம் இரண்டாம் நாள் ஆட்ட நேர முடிவில் அதன் முதலாவது இன்னிங்ஸில் 2 விக்கெட்டுக்களை இழந்து 34 ஓட்டங்களை எடுத்தது.

இந் நிலையில் மூன்றாம் நாளான நேற்று தொடர்ந்து துடுப்டெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு அன்ரன் எட்வேர்ட்ஸ் 16, சந்தர்போல் 4, ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தனர். தொடர்ந்து டரன் பிரவோவுடன் இணைந்த சாமுவேல்ஸ் நிதானமாக ஆடி நம்பிக்கையளித்தார்.

இந்த ஜோடி 5 ஆவது விக்கெட்டுக்காக 46 ஓட்டங்களை இணைப்பாட்டமாகச் சேர்த்தபோது டரன் பிராவோ 56 பந்துகளில் (6 பவுண்டரிகள் உட்பட) 30 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அடுத்து பாயோ களமிறங்க, மறுமுனையில் சாமுவேல்ஸ் 25 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க மேற்கிந்தியத் தீவுகள் அணி 99 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து 6 விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது.

தொடர்ந்து களமிறங்கிய அணித்தலைவர் சமி 18, ரோச் 2, பாயோ 13, பிடல் எட்வேர்ட்ஸ் 16 ஓட்டங்களைச் தமது பங்கிற்கு சேர்க்க மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலாவது இன்னிங்ஸில் 153 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதன்மூலம் முதலாவது இன்னிங்ஸில் 478 ஓட்டங்களால் பின்னிலை பெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணியை பொலோன் அடிப்படையில் தொடர்ந்து இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடுமாறு இந்திய அணி பணித்தது.



போட்டியை கண்டு ரசித்த அஸ்வின் மனைவி பிரீத்தி

பந்துவீச்சில் இந்திய அணி சார்பாக பிரக்ஜன் ஒஜா 4 விக்கெட்டுக்களையும் யாதவ் 3 விக்கெட்டுக்களையும் அஸ்வின் 2 விக்கெட்டுக்களையும் சாய்த்தனர்.

இந்நிலையில் தொடர்ந்து இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு பாரத் வைற் 9 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஆரம்பத்திலேயே அதிர்ச்சிளித்தார்.


எனினும் இரண்டாவது விக்கெட்டுக்காக இணைந்த பாரத் –அன்ரன் எட்வேர்ட்ஸ் ஜோடி நிதானமான ஆட்டத்தை வழங்கி அணியை சரிவிலிருந்து மீட்டது.

இதில் பாரத் 78 பந்துகளிலும் அன்ரன் எட்வேர்ட்ஸ் 93 பந்துகளிலும் அரைச்சதம் கடந்தனர். இந்த ஜோடி இரண்டாவது விக்கெட்டுக்காக 93 ஓட்டங்களை இணைப்பாட்டமாகச் சேர்த்தபோது பாரத் 105 பந்துகளில் (10 பவுண்டரிகள் உட்பட) 62 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அடுத்து களமிறங்கிய பிராவோ நிதானமாக ஆட மறுமுனையில் அன்ரன் எட்வேர்ட்ஸ் 128 பந்துகளில் ( 6 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 60 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து பிராவோ – சந்தர்போல் ஜோடி பொறுப்பான ஆட்டத்தை வழங்க மேற்கிந்தியத் தீவுகள் அணி நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டநேர முடிபில் அதன் இரண்டாவது இன்னிங்ஸில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து 195 ஓட்டங்களை எடுத்தது.

இதில் டரன் பிராவோ 38, சந்தர்போல் 21 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் எடுத்தனர்.



பந்துவீச்சில் இஷாந்த் சர்மா 2 விக்கெட்டுக்களையும் யாதவ் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர். இப்போட்டியின் நான்காம் நாள் ஆட்டம் இன்றாகும்.

மேற்கிந்தியத் தீவுகள் அணி இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க 7 விக்கெட்டுகள் கைவசம் உள்ள நிலையில் 283 ஓட்டங்களை எடுக்கவேண்டிய கட்டாயத்தில் துடுப்பெடுத்தாடி வருகிறது.

## உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் 2017–ம் ஆண்டுக்கு முன்பு நடக்காது

### ஐ.சி.சி. அறிவிப்பு

2017–ம் ஆண்டுக்கு முன்பு உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் கிரிக்கெட் போட்டியை நடத்த வாய்ப்பு இல்லைஎன்று ஐ.சி.சி.அறிவித்துள்ளது.

உலகக் கிண்ண ஒருநாள் போட்டியை போல டெஸ்ட் போட்டியிலும் உலக சம்பியன்ஷிப் போட்டியை நடத்த சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி) நடவடிக்கை மேற்கொண்டு வந்தது. முதலாவது உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் போட்டியை 2013–ம் ஆண்டில் நடத்தலாம் என்று ஐ.சி.சி முடிபு செய்து இருந்தது.

இந்நிலையில் தனது இந்த முடிபில் இருந்து ஐ.சி.சி. திடீரென பின்வாங்கி உள்ளது. 2017–ம் ஆண்டுக்கு முன்பு உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் போட்டியை நடத்த வாய்ப்பு இல்லை என்ற நேற்று முன்தினம் அறிவித்துள்ளது.

டுபாயில் நடைபெறும் இலங்கை – பாகிஸ்தான் அணிகள் இடையேயான ஒருநாள் போட்டியை காண வந்த சர்வதேச கிரிக்கெட் சபை தலைமை நிறைவேற்று அதிகாரி ஹருன் லார்கட் அளித்த ஒரு பேட்டியில்,

சர்வதேச கிரிக்கெட் சபையின் கடைசி கூட்டத்தில், ஐ.சி.சி டெஸ்ட் சம்பியன்ஷிப் போட்டியை 2017–ம் ஆண்டுக்கு முன்பு நடத்த முடியாது என்ற முடிபுக்கு நாங்கள் வந்துள்ளோம்.

இந்த போட்டியை விரைவில் நடத்த முடியாத நிலை ஏற்பட்டு இருப்பது எனக்கு ஏமாற்றம் அளிக்கிறது. வருங்கால போட்டி அட்டவணை மற்றும் ஒளிபரப்பு நிறுவனங்களுடன் செய்துள்ள ஒப்பந்தம் உள்ளிட்ட விவகாரங்களால் உலக டெஸ்ட் சம்பியன் போட்டியை தள்ளி வைக்க வேண்டிய நிலை உருவாகி இருக்கிறது.

சம்பியன்ஸ் கிண்ண போட்டியை டெஸ்ட் சம்பியன்ஷிப் போட்டியாக மாற்றுவது என்பது முடியாத காரியம். உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் போட்டியை நடத்துவதன் மூலம் டெஸ்ட் அணிகள் இடையேயான போட்டியின் தரம் நிச்சயம் அதிகரிக்கும் என ஐ.சி.சியின் தலைமை நிறை வேற்று அதிகாரி தெரிவித்தார்.

## காட்டுக்குள்ளே கிரிக்கெட் போட்டி...

(டர்பன்)

தென்னாபிரிக்காவின் காட்டுப் பகுதியில் நடக்கும் மூத்த வீரர்களுக்கான கிரிக்கெட் தொடரின் முதல் போட்டியில், இந்திய அணி தோல்வி அடைந்தது.

இந்த போட்டி குறித்து சுவாரஸ்யமான தகவல்களைக் காணலாம்.

ஓய்வுபெற்ற கிரிக்கெட் ஜாம்பவான்கள் பங்கேற்கும் வேர்ல்ட் கிரிக்கெட் லெஜண்ட்ஸ் இன் தி வைல்ட் என்ற 3 நாட்கள் கொண்ட கிரிக்கெட் தொடரை பேயாண்ட் பவுன்டரிஸ் என்ற நிறுவனம் நடத்துகிறது.

இது தென்னாபிரிக்காவின் காட்டுப் பகுதியான பிண்டா மலைப்பகுதியில் அமைந்துள்ளது. இந்த நடுக்காட்டில் தான் கிரிக்கெட் போட்டி நடக்கிறது.

ஆறு பேர் அடங்கிய இந்திய அணிக்கு உலகக் கிண்ணம் வென்று தந்த முன்னாள் அணித் தலைவர் கபில் தேவ் தலைமை ஏற்றார். தவிர, சந்தீப் பட்டேல், வெங்சர்க்கார், கெய்க்வாட், அஜய் ஜடேஜா, ரோஜர் பின்னி இடம் பெற்றனர்.

தென்னாபிரிக்கா அணியில் போல் அடம்ஸ், பீற்றர் கிறிஸ்டன், குளூஸ்னர், ஹட்சன் உள்ளிட்ட பலர் இடம் பெற்றனர்.

**வித்தியாசமான விதிமுறை**

12 ஓவர் கொண்ட போட்டியில் இந்திய அணிக்கு வெங்சர்க்கர், சந்தீப் பட்டேல் இணைந்து முதல் விக்கெட்டுக்கு 47 ஓட்டங்களைச் சேர்த்தனர். போல் அடம்ஸ் வீசிய கடைசி ஓவரில் கபில் தேவ் 3 பவுண்டரி, 2 சிக்ஸர்கள் விளாச, இந்திய அணி 3 விக்கெட்டுக்கு 143 ஓட்டங்கள் எடுத்தது.

போட்டி விதிப்படி ஆட்டமிழந்த ஒவ்வொரு விக்கெட்டுக்கும் 15 ஓட்டங்கள் கழிக்கப்படும் என்பதால் தென்னாபிரிக்க அணிக்கு 99 ஓட்டங்கள் என இலக்கு மாற்றப்பட்டது.

பின் தென்னாபிரிக்க அணி 3 விக்கெட்டுக்களை இழந்ததால், 145 ஓட்டங்கள் எடுத்து வென்றது.

**மலரும் நினைவுகள்**

கடந்த 1992–ல் போர்ட் எலிசபெத்தில் நடந்த போட்டியின் போது, கபில் தேவ் பந்து வீசியபோது, அப்போது ரன்னர் பகுதியில் இருந்த பீற்றர் கிறிஸ்டனை ஆட்டமிழப்பு செய்தார்.

கிரிக்கெட் உணர்வுக்கு எதிராக கபில் தேவ் நடந்து கொண்டார் என, இந்த சம்பவம் பெரிய அளவில் பேசப்பட்டது.

இந்த சம்பவத்தை நினைவுபடுத்துவது போல இருந்தது மூத்த கிரிக்கெட்.


இந்திய அணியின் துடுப்பாட்டத்தின் போது கபில் தேவ் ரன்னர் பகுதியில் நின்று இருந்தார். அப்போது பந்துவீச்சு செய்த பீற்றர் கிறிஸ்டன், அவரை பந்துவீசும் முன் ரன் அவுட் செய்ய முயன்றது, நகைச்சுவையாக இருந்தது.

இது குறித்து பீற்றர் கிறிஸ்டன் கூறுகையில், இப்போதுள்ள தலைமுறைக்கு 1992–ல் நடந்த போட்டியே மறந்திருக்கும்.

ஆனால் நான் மறக்கவில்லை. இதற்காக கபில் தேவை, என்றாவது பழிவாங்கலாம் என்று நினைத்து இருந்தேன்.

அதிர்ஷ்டவசமாக கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்தி, நட்பு முறையில் அந்த சம்பவத்தை நினைவு படுத்தினேன், என்றார்.

## 8 விக்கெட் வீழ்த்தினார் சச்சின் மகன் அர்ஜுன்



இந்திய கிரிக்கெட் அணியின் நடசத்திர வீரரான சச்சின் மகன் அர்ஜுன் டெண்டுல்கர், மும்பையில் உள்ள அம்பானி பள்ளியில் படித்த வருகின்றான். பள்ளி அணிகளிடேயான கிரிக்கெட் போட்டியில் பங்கேற்றுள்ள அர்ஜுன் நேற்று முன்தினம் முனாபாய் அணிக்கு எதிரான ஆட்டத்தில் மோதினான்.

பந்துவீச்சில் கலக்கிய அர்ஜுன் எதிரணியை 105 ஓட்டங்களுக்கு சுருட்டினான்.

12 ஓவர்கள் பந்து வீசிய அர்ஜுன் 8 விக்கெட்டுக்களை வீழ்த்தி அசத்தினான்.

பந்துவீச்சில் அசத்திய அர்ஜுன் துடுப்பாட்டத்தில் வெறும் 3 ஓட்டங்களை மட்டுமே எடுத்து ஆட்டமிழந்தான். இந்த ஆட்டத்தில் அம்பானி அணி 5 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.

**TILKO JAFFNA CITY HOTEL**
TILKO hotels
70/6,K.K.S ROAD,JAFFNA. T.P:0212225969
Web:cityhoteljaffna.com
e-mail:info@hoteljaffna.com

Tilko Jaffna City Hotel for Business & Relaxation in the heart of Jaffna City
Conference Hall Facilities including Multimedia & PA System
Large Banquet Hall For Wedding Receptions, Work Shops, Conventions & Seminars
Non Ac Mini Conference Hall
Special take away Lunch/Dinner Pack
Morning/ Evening Snacks
Special Package Rate for
Family Get-to-Gathers, Birthday/ Anniversary Functions, Company Get to Gathers

*Await Opening*
*Special Barbaque at our Garden Cafeteria*
*Inclusive of Chines/Indian Jaffna Authentic*
*Variety Cuisine s From our open hot ranga Kitchen*

உங்கள் வியாபார நடவடிக்கைகள் மற்றும் பொழுது போக்கு அம்சங்களுக்கு யாழ். நகரின் மத்தியில் ஒளி, ஒலி அமைப்பு மற்றும் நவீன வசதிகளுடன் கூடிய மாநாட்டு மண்டபம், சிறிய /நடுத்தர /பிரமாண்டமான குளிரூட்டப்பட்ட, குளிரூட்டபடாத சகல வசதிகளுடன் கூடிய மண்டபங்கள்,திருமண, பிறந்த நாள் கொண்டாட்டங்கள்,வியாபார நிறுவன ஒன்றுகூடல் களுக்கும் ஏதுவான பாரிய மண்டப வசதி அத்துடன் மதிய, இரவு பொதி செய்யப்பட்ட உணவு வகைகள், காலை, மாலை சிற்றுண்டிகள்...
இந்தியா, சீனா மற்றும் யாழ். பாரம்பரிய உணவு வகைகளும் ஒரே இடத்தில்...



மிகவிரைவில் TILKO HOTEL இல் Barbeque வசதியுடனான பூந்தோட்ட உணவகம் திறக்கப்பட வுள்ளது.

உங்கள் வியாபார நடவடிக்கைகள்
மற்றும் பொழுதுபோக்கு அம்சங்களுக்கு
யாழ் நகரில்...

T.P.:077 6943479
K.Gunaseelan
Marketing Executive

# அதிகாரப் பரவலாக்கல் குறித்து...

கொழும்பில் ஜனாதிபதி செயலகத்தில் நேற்று மாலை நடைபெற்ற இரு தரப்பினருக்கும் இடையிலான 13-வது சுற்றுப்பேச்சுகள் சுமுக மானதாக இடம் பெற்றதாகவும், பேச்சுகளைத் துரிதப்படுத்துவதற்காக அடுத்த மாதத்திலிருந்து மாதத்திற்கு 4 தடவைகளாவது பேச்சுக்களை நடத்தவதற்கு இணக்கம் காணப்பட்டதாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புபின் பேச்சாளர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

மாலை 4.00மணிக்கு ஆரம்பமான பேச்சுக் கள் சுமார் ஒரு மணி நேரத்துக்கு நீடித்தது. இந்த வட்டாரங்கள், அதிகாரப்பரவலாக்கலில் காணப்படும் சர்ச்சைக்குரிய விடயங்கள் தொடர்பில் அடுத்த கட்டப் பேச்சுக்களில் ஆராய் வதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளதுடன் , அவ்வாறான விடயங்கள் இப் பேச்சுக்களின் போது அடையாளம் காணப்பட்டது.

மத்திய அரசுக்கும், மாகாண சபைகளுக் கும் இருக்க வேண்டிய அதிகாரங்கள், மத்திய அரசிடமிருந்து மாகாண சபைகளுக்கு வழங் கப்பட வேண்டிய அதிகாரங்கள், மாகாண சபை களுக்கான நிதி அதிகாரம், ஆளுநருக்கு இருக்க வேண்டிய அதிகாரங்கள், போன்றவற்றுடன், மாகாண அலகு தொடர்பாகவும் அடுத்தகட் டப்பேச்சுக்களின் போது ஆராய்வதற்கு இணக் கம் காணப்பட்டுள்ளது.

அதேவேளை பேச்சுக்களைத் துரிதப்படுத் தும் வகையில் அடுத்த மாதத்தில் நான்கு தடவைகளாவது சந்தித்துப் பேசுவதற்கும் நேற்றைய பேச்சுக்களின் போது இணக்கம் காணப்பட்டிருக்கின்றது.

நேற்றைய சந்திப்பில் அரசு தரப்பில் அமைச் சர் நிமல் சிறிபால டி சில்வா தலைமையிலான குழுவில் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ், சஜித்வாஸ் குணவர்த்தன, பேராசிரியர் ராஜீவ விஜயசிங்க ஆகியோரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் இரா.சம்பந்தன் தலைமையிலான குழுவில் மாவை சேனாதி ராஜா, சுரேஷ் பிரேமச்சந்திரன், எம்.ஏ சுமந்திரன் மற்றும் ஜனாதிபதி சட்டத்தரணி கனக ஈஸ்வரன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (பா)

## மனோ கணேசன் ராஜினாமா!

(கொழும்பு)

கட்சிப்பணிகள் காரணமாக ஜனநாயக மக்கள் முன்னனியின் தலைவர் மனோ கணே சன் மாநகர சபை உறுப்பினர் பதவியிலி ருந்து விலக உள்ளதாக ஜனநாயக மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் குமர குரு பரன் தெரிவித்தார்.

நடந்து முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர் தலில் எமது ஜனநாயக மக்கள் முன்னணி சுமார் 30 ஆயிரம் வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றுள்ளது.

நாம் ஐக்கிய தேசியக் கட்சியியுடன் இணைந்து செயற்படவில்லை. தனித்தே செயற்படுகின்றோம். எனினும் ஐக்கிய தேசியக்கட்சிக்கு கொழும்பு மாநகர சபையில் வழங்கப்படும் ஆதரவில் எவ்வித மாற்றமும் ஏற்படாது.

மேற்படி பதவி விலகல் தொடர்பில் அடுத்த வாரமளவில் உத்தியோக பூர்வமாக அறி விக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித் தார். (பா)

## தெற்கு அதி...

700 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியினை ஜப்பான் அரசு மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியன வழங்கியிருந்தமை குறிப் பிடத்தக்கது.

இலங்கையில் கட்டணம் அறவிடப்படும் முதலாவது வீதி இதுவாகும். இந்த வீதியில் 80 கிலோ. மீற்றருக்கு குறைவான மற்றும்100 கிலோ மீற்றருக்கு அதிகமான வேகத்தில் பயணிப்பதற்கு தடை விதிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## புனர்வாழ்வு...

செயற்படும்என தெரிவித்த அவர் புனர்வாழ்வு நிலையங்களில் தற்போது 776 முன்னாள் போராளிகள் மட்டுமே உள்ளனர் எனவும் இவர் களில் 100 பேர் பெண்களாவர். இவர்களும் விரைவில் சமூகமயப்படுத்தப்படுவர் என்றும் அவர் தெரிவித்தார். (எ-5)

## கூட்டமைப்பு-மனோ கனே...

தளம் ஒன்றிலும் செய்தி வெளியாகியிருந்தது.

மேற்குலக நாடுகளுக்குச் சென்று கூட்ட மைப்பினர் புலம் பெயர்ந்த தமிழர்களிடம் பணம் சேர்க்கின்றார்கள் என்று பொருள் படும் கருத்தை நான் தெரிவித்ததாக லங்கா தீப பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. அதே செய்தியை ஆளும் அரசாங்க அமைச் சர் ஒருவருக்கு சொந்தமான ஒரு சிங்கள இணையத்தளமும் பிரசுரித்திருந்தது.

இந்த செய்தி முற்றிலும் தவறானதும், உண்மைக்கு புறம்பானதுமாகும். இத்தகைய எந்த ஒரு கருத்தையும் எந்தவொரு ஊடகத் திற்கும் நான் ஒரு போதும் தெரிவிக்கவில்லை.

இதுபற்றிய் எனது கடுமையான ஆட்சே பனையை சம்பந்தப்பட்ட பத்திரிகைக்கு தெரிவித்த போது, இந்த செய்தியின் பின்னணி யில்எங்களது கட்சியில் இருந்து பிரிந்து சென்ற ஒரு அரசியல்வாதி உட்பட இரண்டு தமிழ் அரசி யல்வாதிகள் செயல்பட்டு இருக்கின்றார்கள் என்ற உண்மை புலனாகியுள்ளது.

தமிழ்த் தேசியத்தை முன்னெடுக்கும் அரசி யல் கட்சிகளுக்கிடையே பிளவு ஏற்படுத்தும் கீழ்த்தரமான முயற்சிகளில் பேரினவாத சக்திகளும் , பேரினவாதிகளுக்கு எடுபிடியாக திகழ்கின்ற தமிழினத் துரோகிகளும் இணைந்து செயல்படுகின்ற உண்மை இப்பொழுது வெளியாகியுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளுக்கு மேற்கொண்ட பயணங்களை ஆதரிக்கும் நிலைப்பாட்டை நாங்கள் ஏற்கெனவே தெளிவான முறையில் வெளிப்படுத்தியுள்ளோம். இது தொடர்பிலே கூட்டமைப்பினர் மீது பேரினவாதிகள் எழுப்பிய காரசாரமான கண்டனங்களை நாம் கொழும் பில் இருந்தபடி எதிர்த்து குரல் கொடுத்து வந் துள்ளோம். தமிழ் மக்களின் தேசிய அபிலாசை கள் தொடர்பில் சர்வதேச சமூகத்திடம் எடுத் துக்கூறும் அனைத்து உரிமைகளும் தமிழ் தேசி யக் கூட்டமைப்பிற்கு இருக்கின்றது என்பது எங்கள் நிலைப்பாடாகும்

எனவே இந்த பொய்ப்பிரசாரங்கள் தொடர் பிலே உள்நாட்டிலும்,புலத்திலும் வாழ்ந்து கொண்டிருக்கின்ற தமிழ் மக்கள் அவதானத்துடன் இருக்க வேண்டும் என நான் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன். இவ்வாறு மனோகணேசன்விடுத் துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார். (எ-5)

## போலி முகவர் தொடர்...

கட்டுப்படுத்த பொலிஸார் தீவிரசோதனைக் களை மேற்கொண்டு வருவதோடு பலரையும் கைது செய்துள்ளனர்.

இது தவிர விபசார வழக்கு தொடர்பிலும் பலரை கைது செய்து நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டு பின்பு விளக்கமறியலில் வைக் கப்பட்டுள்ளனர்.

அத்தோடு கஞ்சா, அரச சாராயத்தை அனுமதியின்றி வைத்திருத்தல் போன்ற குற்றச்சாட்டின் பேரிலும் பலர் கைது செய்யப் படுகின்றனர்.

இவர்களின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்துச் செல்கிறது. இவற்றைக் கட்டுப் படுத்த பொலிஸாரால் மட்டும் முடியாது. மக் களும் விழிப்புடன் இருக்கவேண்டும்

பாடசாலை மாணவர்களுக்கு போதைப் பொருட்களை விற்பனை செய்கின்றனர். போதைப் பழக்கத்திற்கு எளிதில் அவர்கள் அடிமையாகி விடுகின்றனர்.எனவே பெற் றோர்கள் தமது பிள்ளைகளை கண்காணிக்க வேண்டும்.

மேலும் போலி முகவர்களை நம்பி வெளிநாடுகளுக்கு உங்களது பிள்ளைகள்ள அனுப்பினால் அவதிப்படவேண்டும்.

தொழில் வாய்ப்க்புக்களைப் பெற்றுத் தரு வதாக கூறி பண மோசடியில் ஈடுபட்டவர்களை நாம் அண்மையில் கைதுசெய்து நீதிமன்றில் ஆஜர் படுத்தியுள்ளோம்.

எனவேதான் போலிமுகவர்கள் தொடர்பில் பொது மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் என அறிவுறுத்த வேண்டி ஏற்பட்டது.தொழில் வாய்ப்புக்களை உரிய அதிகாரிகளை நாடி அவர்கள் ஊடாக பெற்றக் கொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (எ-6)

## மீசாலையில் வாகன...

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த பஜிரோவாகன மும் மீசாலைப் புத்தூர்ச்சந்திக்கருகாமையில் நேருக்குநேர் மோதி விபத்துக்குள்ளா னது .

இதில் பஜிரோ வாகனத்தில் பயணித்த காரைநகர் சத்திரந்தையை சேர்ந்த பரம்சோதி தேவகுஞ்சரி (வயது 51) என்ற பெண் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

அவரின் கணவரான செல்லமுத்து பரஞ் சோதி (வயது 60) மற்றும் உறவினர்களான எஸ்.தவசீலன் (வயது 21), ஆர்.சுதர்சன் (வயது 23) ஆகிய மூவரும் படுகாயமடைந்த நிலை யில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் 41 நாட்களுக்கு முன்பு கொழும் பில் நடைபெற்ற தேவகுஞ்சரியின் தந்தை யின் மரணச்சடங்குக்கு சென்றுவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்த போதே இந்த விபத்து இடம்பெற்றதாக கூறப்பட்டது. (எ-6,29)

## மெய்யியல் கருத்தரங்கு

- பேராதனை பல்கலைக்கழகத்தின் B.A இறுதியாண்டு 2011-ம் ஆண்டு மார்கழி மாதம் பூரீட்சை எடுப்பவர்கட்கான கருத்தரங்கு
- பேராதனை பல்கலைக்கழகத்தின் மெய்யியல் சிரேஷ்ட விரி வுரையாளரினால் நடத்தப்படும்.

இடம் : புதிய உயர் கல்லூரி வளாகம் ஆரியகுளம் சந்தி
நாள் : 19.11.2011, 20.11.2011 காலை 9 மணிமுதல் 3 மணி வரை
குறிப்பு: 1. வெளி மாணவர்களும் பங்கேற்கலாம்.
2. பதிவுகளை முன்கூட்டியே பதிவு செய்யவும்

விபரங்கட்கு:- S. அருள்நங்கை (நிர்வாகி)
புதிய உயர் கல்லூரி,
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல.: 021 2228148
(C-4979)

## மரண அறிவித்தல்

### திருமதி பரம்சோதி தேவகுஞ்சரி

(வெங்கடேஸ்வரா - யாழ்ப்பாணம்)



காரைநகர் களபூமி சத்திரந் தையைப் பிறப்பிடமாகவும் 347/7, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாண த்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரம் சோதி தேவகுஞ்சரி நேற்று புதன்கிழமை அகால மரண மானார். அன்னாரின் இறு திக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக் கப்படும்.

தகவல் :- ச. பரம்சோதி (கணவர்)
வெங்கடேஸ்வரா,
யாழ்ப்பாணம்.

347/7, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 2225524

(ச-4988)

## இரண்டா...

சிறுவர்களினால் மேற்கொள்ளப் படும் குற்றங்களுக்கு குறுகிய காலத்தினுள் இந்த நீதிமன்றத் தினால் தீர்ப்பு வழங்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

முதலாவது சிறுவர் நீதிமன்றம் பத்திரமுல்லையில் அமைக்கப்பட் டுள்ளது.

இதேவேளை சுமார் 6.1 மில்லி யன் ரூபாய் செலவில் நிர்மாணிக் கப்பட்ட பருத்தித்துறை மாவட்ட மற்றும் நீதவான் நீதிமன்ற கட்டிடத் தொகு தியை பிரதம நீதியரசர் ஷிரானி பண்டாரநாயக்க மற்றும் நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகியோரி னால் இன்று வியாழக்கிழமை திறக்கப்படவுள்ளதாக நீதியமைச்சு தெரிவித்தது. (எ)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.11.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.